YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்
மார்ச் 25 - 31

ஓசை : 01 | நாதம் : 21 | வெள்ளிக்கிழமை 25.03.2011 | வார இதழ் | விலை ரூபா: 15.00

பொதுசன நூலகம்

## யாழ்., கிளிநொச்சி உட்பட
# நீதிமன்ற தீர்ப்புக்களின் பின்னர் 101 சபைகளுக்கும் தேர்தல்
### -மேலதிக தேர்தல் ஆணையாளர் தகவல்

(நமது நிருபர்)

தேர்தல் நடத்தப்படாமல் இருக்கும் எஞ்சிய 101 உள்ளூராட்சி சபைகளுக்கும் நீதிமன்ற தீர்ப்புக்க ளின் பின்னர் தேர்தலை நடத்துவதற்கான நடவ டிக்கைகள் எடுக்கப்படும் என்று மேலதிக தேர்தல் கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். எஞ்சியுள்ள 101 சபைகளுக்கு தேர் தலை நடத்துவது தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அகதிகள் தமிழகத்தில் கௌரவமாக வாழ நடவடிக்கை
### அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தெரிவிப்பு



திருச்சி,

இலங்கை அகதிகள் அனைவரும் தமிழகத் திலேயே கௌரவமாக வாழ நடவடிக்கை எடுக் கப்படும், கச்சதீவை மீட்டு தமிழக மீனவர்களின் நலன்கள் காக்கப்படும் என அ.தி.மு.க. வெளியி ட்டுள்ள தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டதைத் தொடர்ந்து அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக் கையை அதன் பொதுச் செயலாளர்

(6ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.போதனா வைத்தியசாலையில் புனரமைப்புச் செய்யப்பட்ட கண் சத்திரசிகிச்சைக் கூடத்தின் திறப்பு விழாவின் போது சிகிச்சை நிலையத்தை திறந்து வைத்த சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியகலாநிதி மகிபால ஒரு தொகுதி கண் சத் திர சிகிச்சை உபகரணங்களை போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா விடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# அஞ்சல் அட்டை மாணவர்களின் பரீட்சை முடிவுகள் வெளிவரவில்லை

கொடிகாமம்,

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு அஞ்சல் அடையாள அட்டை மூலம் தோற்றிய மாணவர்களுக்கான பரீட்சை முடிவு களை பரீட்சைத் திணைக்களம் இன்னமும் வெளியிடவில்லை.

இதனால் யாழ்.மாவட்ட பாடசாலைப் பரீட்சார்த்திகள் பலரும் மிகுந்த விசனம் அடைந்துள்ளனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலால் வட பகுதி மீனவர்களுக்கு பலத்த இழப்பு
### வடபிராந்திய கடற்படைத் தளபதி

இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பால் இலங்கை மீனவர்கள் பலத்த இழப்பைச் சந்தித்து வருவதாக வடபகுதியின் கடற்படைக் கட்ட ளைத் தளபதி தெரிவி த்துள்ளார். இந்திய மீனவர்களின் ஆக்கிர மிப்பு காரணமாக வட பகுதித் தமிழ் மீனவர் களே அதிகம் பாதிக் கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பி டுகின்றார். கடந்த யுத்த காலத்தில்

(6ஆம் பக்கம் பார்க்க)

English பேசுறது
இப்ப ரொம்ப easy!
உடனடி மொழிமாற்று சேவையை பெற
அழையுங்கள் 550
Dialog

# இறுதிக்கட்ட யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இந்தியா போர் நிறுத்தத்துக்கு வலியுறுத்தியது – விக்கிலீக்ஸ்

விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின் கடை சிக் கட்டத்தில் போர் நிறுத்த மொன்று தொடர்பில் இலங்கை அரசாங்கம் மீது இந்தியா அழுத் தங்களைப் பிரயோகித்ததாக விக்கிலீக்ஸ் செய்திகளை வெளி யிட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதராலயத்தில் பிர தான அதிகாரியாக கடமையாற் றிய

(6ஆம் பக்கம் பார்க்க)



ஜெயசந்திரன்ஸ் பட்டாடைகளால் உங்கள் திருமண
விழாவை அலங்கரித்திடுங்கள்
JEYECHANDRANS
No.433,Galle Road,Colombo-06 Tel:011-4528438/0114528435
www.jeyechandrans.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா வைத்தியசாலையில் கண்சத்திரசிகிச்சை நிலையம் திறப்பு

(அலுவலக நிருபர்)

யாழ். போதனா வைத்தியசாலையில் புதிதாக புனரமைப்புச் செய்யப்பட்ட கண்சத்திர சிகிச்சை நிலையத்தை நேற்று சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியகலாநிதி மகிபால வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். சுகாதார அமைச்சினால் 25 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட நவீன வசதிகளை உள்ளடக்கியதாக இச் சத்திரசிகிச்சை நிலையம் விளங்குகிறது. இக்கண் சத்திர சிகிச்சை நிலையத்தை சுகாதார அமைச்சிலிருந்துவந்த மேலதிக செயலாளர் டாக்டர் மகிபால சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதி ராஜா மற்றும் சத்திரசிகிச்சை நிபுணர் ரவிராஜ் , யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிலைய ஆலோசகர் திருமதி தர்மினி தர்மபால மற்றும் வைத்தியர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர் மகிபால

யாழ். போதனா வைத்தியசாலையை யாழ். மாவட்டத்தின் சிறந்த வைத்தியசாலையாக மாற்றுவதுடன் தென்இலங்கையிலுள்ள பிரபல வைத்தியசாலைகளின் தரத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு கட்டமாகவே இச் சத்திரசிகிச்சை கூடம் சுகாதார அமைச்சினால் புனரமைப்புச் செய்யப்பட்டது என்றார்.

நிகழ்வின் இறுதியில் பல இலட்சம் ரூபா பெறுமதியான கண் சிகிச்சை உபகரணங்களும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

# உலக வங்கி வழங்கவிருந்த 30 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை இழந்தது இலங்கை

மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளில் 7ஆவது இலக்கான நிலைத்திருக்கும் சுற்றுக் சூழல் என்பது பிரச்சினையை சந்தித்துள்ளது.

அரசாங்கம் அபிவிருத்தி முன்னுரிமைகளை சரியாக ஏற்படுத்தத் தவறியதனால் இந்த திட்டத்துக்கு உலக வங்கி வழங்கவிருந்த 30 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் அரசாங்கத்துக்கு கிடைக்காமல் போயுள்ளது.

உயிரின பல்வகைமையில் உயர் வளம் கொண்டிருந்தாலும், சுற்றுச்சூழல் தொகுதி மற்றும் உயிரின பல்வகைமை ஆகியவை மோசமாக பாதிக்கப்படும் நிலைமை காணப்படுகிறது. இலங்கை சில விடயங்களில் அதன் போக்கை மாற்றியமைத்துக் கொண்டால் நிறுத்தப்பட்ட கடன்திரும்பக் கிடைக்கக் கூடுமென ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பகம் கூறியுள்ளது.

வனவிலங்கு திணைக்களம் உலக வங்கியுடன் இணைந்து மிலேனிய அபிவிருத்தி இலக்கு 7ஐ தீர்மானித்தது.

இதனை அமுல்படுத்துவதற்கான சகல ஆயத்தங்களும் முடிவடையும் நிலையில் அரசாங்கம் திட்ட வரைவில் மாற்றங்களைக் கோரியதுடன், புதுவிடயங்களை சேர்க்க வேண்டுமெனவும் கோரியது.

அரசாங்கத்தின் கோரிக்கை இந்த திட்டத்தினூடாக உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்வதாக இருந்தமையால் அரசாங்கத்தின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இந்த திட்டத்தைக் கைவிடுவதே மிகச் சிறந்த தீர்வென உலக வங்கி கருதுகின்றது.

# நாட்டுப்புற இசை வடிவங்கள் அரங்கேறும் யாழ்ப்பாண இசைக் கொண்டாட்டம் இன்று

(அலுவலக நிருபர்)

பாரம்பரிய நாட்டுப்புற இசை வடிவங்கள் அரங்கேறும் யாழ்ப்பாண இசைக் கொண்டாட்டம் இன்று 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை யாழ். சுப்பிரமணியம் பூங்காவிற்கு அருகிலுள்ள யாழ். மாநகர சபை திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளது.

முற்றிலும் இலவசமாக நடத்தப்படும் இந்த இசைத்திருவிழாவில் இந்தியா, பலஸ்தீனம், தென்னாபிரிக்கா, நேபாளம் போன்ற நாடுகளின் இசை வடிவங்களுடன் தென்னிந்திய மற்றும் ஈழத்தின் பாரம்பரிய இசை வடிவங்களும் அரங்கேற்றப்படவுள்ளன. இந்நிகழ்வு மேற்படி தினங்களில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரையும் மாலை 4 மணி தொடக்கம் இரவு 10 மணிவரையும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்விற்கு யு.எஸ். எயிட் என்னும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் மற்றும் நோர்வே தூதரகம், சேவாலங்கா நிறுவனம்என்பன அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நோர்வே தூதுவர் யாழ். விஜயம்

(அலுவலக நிருபர்)

இலங்கைக்கான நோர்வே தூதுவராக புதிதாக நியமனம்பெற்றுள்ள ஹில்டே ஹரலட்ஸ்டட் நான்கு நாள் பயணமாக யாழ்ப்பாணத்திற்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்தார்.

யாழ்ப்பாணத்தில் நோர்வேயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்ட அவர் யாழிலுள்ள பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடினார்.

யாழ். பொம்மை வெளிப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களைச்சந்தித்து அவர்களின் தேவைகளையும் குறைநிறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

நேற்று முன்தினம் மாலை யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களைச் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது யாழ். - வன்னி மாவட்ட ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

இதன் பின்னர் யாழ். மறைமாவட்ட ஆயரைச் சந்தித்து கெயார் நிறுவனம் மேற்கொண்டு வரும் பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இதேவேளை இன்று ஆரம்பமாகவுள்ள யாழ்ப்பாண இசைக்கொண்டாட்டவிழாவிலும் பிரதம அதிதியாகத் தூதுவர் கலந்து சிறப்பிக்கின்றார்.

இலங்கைக்கான நோர்வே தூதுவராக பதவியேற்ற பின்னர் இவர் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ பயணம்இதுவாகும்.

# மாங்குளம் விளையாட்டு வளாகத்துக்கு பிரிட்டிஷ் துடுப்பாட்ட வீரர் உதவி

போரினால் பாதிக்கப்பட்ட மாங்குளத்தில் அமைக்கப்படவுள்ள விளையாட்டு வளாக கட்டுமானத் திட்டத்துக்கு உதவ பிரித்தானிய துடுப்பாட்ட அணியின் முன்னாள் தலைவர் இயன்போத்தம் முன்வந்துள்ளார்.

வட மாகாணத்தின் இதயப் பகுதியான மாங்குளத்துக்கு அருகே இந்த சமூக விளையாட்டு வளாகத்தை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியில் இலங்கை துடுப்பாட்ட அணியின் வீரர்கள் முத்தையா முரளிதரன், குமார் சங்கக்கார, சமிந்த வாஸ் போன்றவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையைத் தளமாகக் கொண்ட அறக்கட்டளை நிறுவனம் ஒன்று சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை உருவாக்கும் நோக்கில் மாங்குளத்துக்கு அருகே சமூக விளையாட்டு வளாகத்தை அமைக்க முன்வந்துள்ளது.

இந்த வாரத் தொடக்கத்தில் அந்தப் பகுதிக்கு முத்தையா முரளிதரனுடன் சென்றிருந்த இயன் போத்தம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இந்த திட்டத்தை அதிகாரபூர்வமாக அறிவிக்கவுள்ளார்.

# மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுகள்: இலங்கையில் முதலீடுகளைக் குறைத்துள்ளன

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளை தடுக்கும் வகையில் அமைந்துள்ளதாக இராஜதந்திரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் மிகப்பெரும் முதலீட்டாளராகவும், இலங்கைப் பொருட்களின் முன்னணி இறக்குமதியாளராகவும் இருந்த அமெரிக்கா தற்போது பிரஸ்தாப குற்றச்சாட்டுகள் காரணமாக பெருமளவில் ஒதுங்கியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன் காரணமாகவே இலங்கை தொடர்ந்தும் சீனாவில் தங்கியிருக்க நேர்ந்துள்ளது என்றும் குறிப்பிடும் அவர் அமெரிக்கா மீண்டும் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதற்கு ஏதுவான முறையில் இலங்கை மீதான போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை புறம்தள்ளி விட்டு இலங்கையுடனான வர்த்தகத் தொடர்புகளை மேம்படுத்த கைகோர்க்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்ட விசாரணை அமர்வுகள் இன்று ஆரம்பம்

(நமது நிருபர்)

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் விசாரணை அமர்வுகள் இன்று அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பமாகின்றன. அந்த வகையில் இன்று வெள்ளிக்கிழமை காலை அம்பாறையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வு நடைபெறவுள்ளன.

இந்த விசாரணை அமர்வுகளில் பிரதேசத்தின் பொது மக்கள் சமூக முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சாட்சியமளிக்கவுள்ளனர்.

அமர்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் அதிகாரி தெரிவித்தார்.

# மணல் ஏற்றிய சாரதிக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம்

கொடிகாமம்,

அனுமதிப்பத்திர விதிமுறைகளுக்கு முரணாக சாவகச்சேரிப் பகுதியில் மணல் ஏற்றிய வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று முன்தினம் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. அபராதத் தொகையைச் செலுத்தத் தவறினால் 3 மாத சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் மன்று எச்சரித்துள்ளது.

சாவகச்சேரி நீதிமன்றில் சாவகச்சேரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கிலேயே நீதிவானால் அத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய வாகனச்சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றினால் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைநிகழ்வுகளை பார்க்கும் சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம் இளந்தலைமுறையினரிடம் கலை ரசனையை ஏற்படுத்த முடியும்

## ஆசிரிய ஆலோசகர் க. அருளம்பலம்

கலை நிகழ்வுகளைப் பார்க்கும் சந்தர்ப்பத்தை வழங்குவதனூடாக இளம் தலைமுறையினரிடம் கலை ரசனையை ஏற்படுத்த முடியும். நாளைய சமுதாயமாக வரப்போகின்றவர்கள் இளம் தலைமுறையினரே. எனவே தான், அவர்களை கலையார்வம் உடைய சமுதாயமாக உருவாக்க இக்கலையரங்கு உதவுகின்றது என அளவெட்டி மகாஜன சபை கலைஞர் வட்டத்தினரின் பௌர்ணமி தின நிலாக் காலம் கலை நிகழ்வில் தலைமையுரையாற்றும் போது ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் க. அருளம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கலை என்பது எல்லோராலும் மதிக்கப்படுவதும் விரும்பப்படுவதுமாகும். கலைகளை இசை, நடனம், நாடகம் இவற்றோடு மட்டுப்படுத்தமுடியாது. எழுத்தாற்றல், பேச்சு, வாத்தியக்கருவிகள் இசைத்தல், சமயம், விளையாட்டு எல்லாமே கலை தான். இக்கலைகளிலே இசை, நடனம், நாடகம், ஓவியம் இவைகளை மனிதக்கலை எனப் பிரித்து வைத்துள்ளோம்.

மனிதக் கலைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நோக்கிலே இந்நிகழ்வு நடைபெறுகின்றது. அளவெட்டி கலை மலிந்தகிராமம் என்பதனை பேச்சிலே மட்டும் நில்லாது செயலிலும் காட்டிவருகின்றது. இதனூடாக பெருமை மிக்க கிராமமாக அளவெட்டி விளங்குகிறது. அனைத்து கலைஞர்களதும் ஒருங்கிணைப்புடனும் பங்குபற்றுதலுடனும் அளவெட்டி பழைய நிலைக்கு மிளிரமுடியும். இத்தகைய பணியை நிறைவேற்றும் பொறுப்பை கலைஞர் வட்டம் எடுத்துள்ளது.

கலை நிகழ்வுகள் இளம் சமுதாயத்துக்கு உரியதாகவும் பொது மக்களுக்கு உரியதாகவும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இளைஞர்களை பொறுத்தவரையில் அவர்களுக்கு கலையார்வத்தை ஊட்ட வேண்டும். கலை நிகழ்வுகளில் பங்குபற்ற விரும்புபவர்களுக்கு களம் இல்லாமல் போவதனால் அவர்களது திறமை மழுங்கடிக்கப்படுகிறது. இத்தகைய நிலையைப் போக்குவதற்கு இளம் தலைமுறையினருக்குக் களம் அமைத்துக் கொடுக்கப்படுகின்றது.

இளந்தலை முறையினருக்குக் களம் அமைக்கும் பணியை நிலாக்காலம் கலையரங்கம் நிறைவேற்றி வருகிறது. நிகழ்வுகளுக்கு உற்சாகம் கொடுத்து பாராட்டவேண்டும். அளவெட்டி மண்ணை கலைக்குப் புகழ்பூத்த பூமியாக மாற்ற இளம் தலைமுறையினர் உற்சாகத்துடன் முன்வரவேண்டும் - என்றார்.

# கெயார் சர்வதேச நிறுவனத்தினால் சனசமூக நிலையம் புனரமைப்பு

சங்கானை,

அராலி வீதி சங்கானையில் கெயார் சர்வதேச நிறுவனத்தில் லிப்ற் திட்டத்தின் கீழ் சனசமூக நிலையம் ஒன்று புதிதாக கட்டப்படவுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேசத்திலுள்ள சங்கானை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கட்டப்படும் இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன் முதற்கட்ட வேலைக்காக 2 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் அந் நிறுவனத்தைச் சேர்ந்த வெளிக்கள இணைப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி ஆனந்த, செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் கிராம அலுவலர் உட்பட பொது மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.



யா/வல்வை மகளிர் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட இளைப்பாறிய இலங்கை வங்கியின் வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ந.சீவரத்தினம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

# மாவிட்டபுரம் அம்பாள் ஆலய இரண்டு வாகனங்கள் திருட்டு

தெல்லிப்பழை,

வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மாவிட்டபுரம் - வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் சொருப வாகனங்கள் திருட்டுப்போயுள்ளன எனத் தெரிய வருகின்றது.

60 வருடங்கள் பழைமை வாய்ந்த சிங்க வாகனமும், சோடிக் குதிரை வாகனமும் திருடப்பட்டுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாலயத்தில் இரு மாதத்திற்கு முன்னதாக ஆலயத்தில் மூல உற்சவமூர்த்தி திருட்டுப் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் அமைந்துள்ள இவ் ஆலயத்தின் பூசை வழிபாட்டுக்கு படையினர் அனுமதியளித்திருந்த போதிலும் இப்பிரதேசத்தில் இதுவரை மக்கள் மீளக்குடியமரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாடக விழாவில் பங்கேற்க விண்ணப்பிக்குமாறு அழைப்பு

மானிப்பாய்,

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் கலாசார அலுவல்கள் திணைக்ககளம் தேசிய நாடகக் குழுவுடன் இணைந்து நடாத்தும் 2011 ஆம் ஆண்டுக்கான நாடக விழாவில் பங்கேற்க நாடகக் குழுக்களை விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இலங்கை கலைக் கழகத்தின் நாடக்குழு ஒவ்வொரு ஆண்டும் மேடை ஏற்றிய தமிழ் நாடகக் கலையின் முன்னேற்றத்திற்குக் காரணமாகின்ற குண நிறைவுடைய மற்றும் ஆக்க பூர்வமான மேடை நாடகங்களை தேர்ந்தெடுத்து அவ் ஆக்கங்களை மதிப்பிடுவதற்கும், அந்நாடகங்களின் வெற்றிக்காக பல்துறைகளில் பங்கேற்று திறமைகளை வெளிக் காட்டிய படைப்பாளர்களை தேசிய மட்டத்தில் மதிப்பிடுவதற்காக அரச நாடக விழா ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இந் நாடக விழாவுக்காக சிறுவர் நாடகங்கள், குறு நாடகங்கள், நீண்ட நாடகங்கள் என பல நாடகங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்நாடக விழாவுக்கான விண்ணப்பங்கள் இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள், கலாசார அபிவிருத்தி இணைப்பாளர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் நாடகக் கலைஞர்கள் தங்கள் பகுதி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எம்மை பீடிக்கும் நோயைக் குணப்படுத்தினால் பிறருக்குப் பரவுவதைக் கட்டுப்படுத்தலாம்

## மலேரியா தடுப்பு வைத்திய அதிகாரி சிவபாதம்

தெல்லிப்பழை,

எங்களுக்கு வரும் நோயை மற்றவர்களுக்குக் கொடுப்பது பாரதூரமான குற்றமாகும். உங்களைப் பீடிக்கும் நோயினை ஆரம்பத்தில் கண்டுபிடித்து அதற்கான சிகிச்சையினைப் பெறுவதன் ஊடாக அந் நோயினை குணப்படுத்திக்கொள்வதுடன், மற்றவர்களுக்குப் பரவாமல் தடுக்க முடியும் என வலி. தென்மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற காசநோய் விழிப்புணர்வு நிகழ்வில் உரையாற்றும்போது மலேரியா தடுப்பு அதிகாரி வைத்தியக்கலாநிதி சிவபாதம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், காசநோய் என்பது கட்டுப்படுத்தமுடியாத நோய் அல்ல. அதனை ஆரம்பத்திலேயே இனம் கண்டு அதனைக் குணப்படுத்த முடியும். காசநோய் கட்டுப்பாட்டு விழிப்புணர்வு செயற்பாட்டில் வைத்தியக்கலாநிதி யமுனாநந்தா வந்த பிறகு பலவிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுகாதாரத் திணைக்களமும் வேண்டிய ஒத்துழைப்பை வழங்கிவருகின்றது.

குறிப்பாக, இலங்கையில் பல தொற்றுநோய்கள் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அவற்றில் பல கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. சிறுவர்களுக்கு வரக்கூடிய நோய்கள் பல தடுப்பூசியினால் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.

விழிப்புணர்வு தினங்களில் நோய்த் தாக்கம் பற்றி பேசாது வருடம் முழுவதும் நோய் பற்றிய விழிப்புணர்வைக் கொடுத்து நோய்த் தடுப்பை ஏற்படுத்த வேண்டியது

அனைவரதும் பொறுப்பாகும். சிறந்த விழிப்புணர்வின் ஊடாகவே நோய்த் தாக்கமற்ற சமுதாயத்தை உருவாக்கலாம். இதற்கு எல்லோரதும் ஒத்துழைப்பு இருக்கவேண்டும். இதனூடாக காசநோயை எமது சமுதாயத்தில் இருந்து இல்லாமல் செய்யலாம் - என்றார்.

# மாடிக் கட்டடம் அமைப்பு

ஏழாலை,

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் மாடிக்கட்டத் தொகுதி ஒன்று யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது.

கீழ்த் தளத்தில் பிரார்த்தனை மண்டபமும்,மேல் தளத்தில் வகுப்பறைத் தொகுதிகள் என்பவற்றைக் கொண்டதாக இம்மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இக்கட்டத்தின் கட்டுமானப் பணிகளை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai

# யாழ் ஓசை

2011 மார்ச் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

## சமூகத்தை சீரழிவுக்கு இட்டுச் செல்லும் போதைப் பொருள் பாவனை

மூன்று தசாப்த கால போரினால் கடுமையான பாதிப்புக்களைச் சந்தித்த இலங்கை தேசத்தில் அண்மைக் காலமாக சமூக சீரழிவுகளை ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாக பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் மேலெழுந்து வரும் போதைப் பொருள் பாவனையானது பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளதுடன் குற்றச் செயல்களுக்கு வழிவகுத்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

அண்மையில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் நிரந்தர போதைப் பொருள் பாவனையாளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் 4-6 இலட்சத்துக்கு இடைப்பட்ட தொகையினர் கஞ்சா பாவனையாளர்கள் என்றும் இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டின் பொதுவான நிலை இப்படியிருக்க கட்டுக்கோப்பான கலாசாரத்தைக் கொண்டுள்ள வட மாகாண இளைஞர்களும் இந்த போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி வருகின்றமை கவலைக்குரியதாகும்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக ஏற்பட்டு வரும் கலாசார சீர்கேடுகளுக்கு இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையும் மதுப் பழக்கமுமே காரணம் என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பாடசாலை மாணவர்களையும் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர்களையும் குறிவைத்து சில சக்திகள் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ளதாகவும் சந்தேகம் ஏற்படாத வண்ணம் வேறு பொருட்களுக்குள் மறைத்து வைத்து பல்வேறு பெயர்களிலும் இவற்றை விற்பனை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் யாழ்ப்பாணம் கொடிகாமம்-எருவன் பகுதியில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு பேர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட சம்பவமும் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் இதற்கு முன்னரும் பல குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்டவர் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நமது சமூகத்தில் இளைஞர்கள் போதைப் பொருள் பாவனைக்கு தொடர்ந்தும் அடிமைப்பட்டுச் செல்வார்களேயானால் அதனால் ஏற்படும் விளைவுகள் மிகவும் பாரதூரமானவையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே இது விடயத்தில் பெற்றோரும் சமூகத் தலைவர்களும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

இலங்கையில் நண்பர்கள் மூலமாகவே 82 வீதமானோருக்கு போதைப் பொருள் பாவனை அறிமுகமாவதாக மேற்சொன்ன ஆய்வில் தெரியவந்துள்ளது.

எனவே பெற்றோர் தமது பிள்ளைகளின் நண்பர்கள் தொடர்பிலும் அவர்கள் கொண்டுள்ள சகவாசம் தொடர்பிலும் அதிக அக்கறையுடனும் விழிப்புணர்வுடனும் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

பெரும்பாலான பெற்றோர் தமது பிள்ளைகளின் வெளிக்கள செயற்பாடுகள் தொடர்பில் அதிக அக்கறை காட்டுவதில்லை. வீட்டுக்குள் மாத்திரம் தமது பிள்ளைகளை அடக்கி ஆளும் பெற்றோர் வெளியில் செல்லும் தமது பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என கிஞ்சித்தும் கவலைப்படுவதில்லை.

இவ்வாறானவர்கள்தான் மோசமான நண்பர்களிடம் சிக்கி தமது வாழ்வைப் பறிகொடுக்கின்றனர். போதைக்கு அடிமையாகின்றனர். இதன் விளைவாக குற்றச் செயல்களிலும் சமூக விரோத செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

எனவேதான் இது தொடர்பில் சகல தரப்பினரும் அக்கறை செலுத்துவதுடன் நமது இளைஞர்களை கொடிய போதைப் பழக்கத்திலிருந்து மீட்டெடுக்க முன்வரவேண்டும் என வலியுறுத்த விரும்புகிறோம்.

## தமிழ் மக்களின் அரசியல் ஸ்திரத்தை குலைக்கும் ஏகத்தலைமைப் பிடிவாதம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இது தொடர்பில் விளக்கமளிக்கவே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. "கூட்டமைப்பு பதிவு செய்வது தொடர்பில் எமக்கு அக்கறை கிடையாது. அதற்குமேல் எமக்கு உடன்பாடுமில்லை. தமிழரசுக் கட்சி நீண்ட வரலாற்றுப் பின்னணி கொண்டதொரு கட்சியாகும். எனவே அதன் தனித்துவத்தை மேற்படி கூட்டமைப்பின் பதிவு கெடுப்பதாக அமையும். எனவேதான் நாமிந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளோம்." (28-2-2011 பத்திரிகைச் செய்தி)

இக்கட்டுரை முன்நிறுத்த விரும்பும் கேள்வி என்னவெனில், நமது பிரச்சினை மக்களை மையப்படுத்தியா அல்லது நமது கட்சிப் பெருமைகளை நிலைநாட்டுவதா? அவ்வாறு பெருமை பேசும் அளவிற்கு எந்தவொரு கட்சியாவது நமது மக்கள் மத்தியில் தனித்துவமான இடமொன்றை பெற்றிருக்கிறதா? தவிர அது என்ன தனித்துவம்?

நமது கடந்த அறுபது ஆண்டுகால அரசியல் வரலாற்றை எடுத்துக் கொண்டால், எந்தவொரு கட்சியும் மக்கள் மத்தியில் தொடர்ச்சியான செல்வாக்கில் இருந்ததில்லை.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸில் இருந்து பிரிந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம்,1949 இல் தமிழரசுக்கட்சியை உருவாக்கினார். ஒரு தனிப்பெரும் கட்சியாக இருந்த தமிழரசுக்கட்சி 1972 இல் தன்னையொரு கூட்டணியில் இணைத்துக் கொண்டது.

1972 இல் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவராக இருந்த ஞானமூர்த்தியின் ஊக்கப்படுத்தலில் தமிழரசுக்கட்சி [The Federal Party -Mr.S.-J.V.Chelvanayagam], அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் [All Ceylon Tamil Congress -Mr.G.G.Ponnambalam] மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் [Ceylon Workers Congress - Mr.Sowmiyamoorthy Thondaman] ஆகியவை ஒன்றிணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி [TUF] என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது.

பின்னர், 1976 இல் மேற்படி கூட்டணி வட்டுக்கோட்டை மகாநாட்டுடன் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியாக பரிணமித்தது [TULF] http:-//tamilunitedliberationfront.org/history/.

இதன் பின்னர் தமிழசுக்கட்சி என்பது நமது அரசியல் அரங்கில் இருக்கவில்லை. இந்தக் காலத்தின் தலைமுறையை உதய சூரியன் சின்னத்தில் வலம்வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியே பிரதிநிதித்துவப்படுத்தியது.

இந்த இடத்தில் தமிழரசுக்கட்சியின் நிறுவனரான எஸ்.ஜே.வி.செல்வநாகயத்தின் தலைமைத்துவத்தை எண்ணிப்பார்ப்பது அவசியம்.

அன்றைய சூழலில் முதன்மையான தலைவராக விளங்கிய செல்வநாயகம் ஏன் தமிழரசுக்கட்சி என்னும் தனிக் கட்சிச் சிந்தனையை விடுத்து ஒரு ஐக்கிய முன்னனி தேவை என்று சிந்தித்தார்? தனது கட்சிப் பெருமை முக்கியம் என்று செல்வா கருதியிருந்தால் புதியதொரு சின்னத்தில் புதியதொரு கட்சியாக பதிவு செய்வதை அவர் ஏற்றிருக்கமாட்டார்.

செல்வநாயகத்திடம் இருந்த அரசியல் தூரநோக்கும் தனது காலத்திற்கு பிறகும் தமிழ் மக்களுக்கான உரிமைப் பயணம் ஆக்கபூர்வமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் அவர் கொண்டிருந்த அர்ப்பணிப்புமே இதற்குக் காரணமாகும். ஆனால் அவரின் வாரிசுகள் என்போர்......???

1980களின் பின்னர் கூர்மையடைந்து சென்ற இனமுரண் அரசியல் ஆயுத இயக்கங்களின் பிறப்பிற்கு வழிவகுத்தது. ஆயுத இயக்கங்களின் வருகை அதுவரை தமிழர்கள் செல்வாக்குச் செலுத்திய மிதவாதத் தலைமைகளை புறம்தள்ளியதுடன் இயக்கத் தலைவர்களை மக்களின் கதாநாயகர்களாகவும் ஆக்கியது.

இதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட இயக்க முரண்பாடுகளில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தனிப்பெரும் இயக்கமாக பரிணமித்தனர். இதிலிருந்து கடந்த மே 2009 வரையான காலப்பகுதிவரை விடுதலைப்புலிகள் என்ற நாமமும் புலிக் கொடி என்னும் சின்னமுமே ஈழத் தமிழர்களுக்குத் தெரிந்த ஒரேயொரு அரசியலாக இருந்தது.

விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னர் ஈழத் தமிழர்களின் அரசியல் லண்டும் மிதவாத அரசியல் தலைமைகளின் பக்கமாக திரும்பியிருக்கிற சூழலில்தான் லண்டும் கட்சிப் பெருமைகள் குறித்து நாம் விவாதிக்கத் தலைப்படுகிறோம்.

இன்று ஈழத் தமிழ் மக்களின் தலைவராக இரா.சம்பந்தர் வெளித் தெரிகின்றார். புலிகளின் வீழ்ச்சியே சம்பந்தர் லண்டும் ஈழத் தமிழர்களின் தலைவராகத் தெரிவதற்கான காரணமாகும். ஆனால், சம்பந்தர் ஒரு சிறந்த தலைமைத்துவத்தை தமிழ் மக்களுக்கு வழங்கிவருகின்றாரா என்றால் நிச்சயமாக பதில் இல்லை என்பதே இந்தக் கட்டுரையின் முடிவு. ஏன் இந்தக் கட்டுரை சம்பந்தர் சரியானதொரு தலைமைத்துவத்தை வழங்கவில்லை என்று வாதிடுகிறது? தலைசிறந்த அரசியல் தலைவரென அவரது அபிமானிகளால் கொண்டாடப்படும் இரா.சம்பந்தர் நடைமுறையில் அவ்வாறு இருக்கின்றாரா? சம்பந்தர் சரியானதொரு தலைமைத்துவத்தை வழங்கியிருந்தால் இன்று ஐக்கியப்பட்ட அரசியல் அமைப்பா அல்லது தனிக் கட்சிப் பெருமைகளா என்றவாறான முரண்பாடுகள் ஒருபோதுமே வந்திருக்காது.

**நந்தன் அரியரட்ணம்**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க.வுடனான கூட்டணி தேர்தலுக்கான உறவு மட்டுமே தமிழர் விவகாரத்தில் எங்கள் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை

## தொல். திருமாவளவன் பேட்டி



**சென்னை:**

சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் இருக்கும் அணியில் நாங்கள் இடம்பெற்றுள்ளது தேர்தலுக்கான உறவு மாத்திரமே. இதனால் ஈழத் தமிழர் விவகாரத்தில் எங்கள் நிலைப்பாட்டில் எங்களுக்கு இருக்கும் நிலைப்பாடு எப்போதும் மாறாது என விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

மேலும், அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து ம.தி.மு.க. வெளியேற்றப்பட்டது, அரசியல் நாகரிகம் இல்லாத நம்பிக்கை துரோகம் என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

தேர்தல் திகதி நெருங்கி வரும் நிலையில், தனது கட்சியின் தேர்தல் அறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்ட திருமாவளவன் அது குறித்து நிருபர்களுக்கு பேட்டியளிக்கையில்,

தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இடம்பெற்று 10 தொகுதிகளில் போட்டியிடுகிறது. தி.மு.க. கூட்டணியின் வெற்றிக்காக விடுதலை சிறுத்தைகள் கட்சி நாடு முழுவதும் பிரசாரம் மேற்கொள்ளவுள்ளது. அப்போது நாங்கள் மக்களை சந்திக்கும்போது, சிலவாக்குறுதிகளை முன்வைத்து பிரசாரம் செய்யவுள்ளோம். அந்த வாக்குறுதிகளையே தற்போது தேர்தல் அறிக்கையாக வெளியிட்டுள்ளோம். அதில், இலங்கைத் தீவில் நீடிக்கும் பிரச்சினைக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தொடர்ந்து குரல் கொடுக்கும். தமிழ் ஈழத்தை அங்கீகரிக்க வலியுறுத்தி ஐ.நா. பேரவைக்கு அழுத்தம் கொடுக்க பாடுபடுவோம்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர்களுக்கு மீண்டும் வாழ்வு அளிக்கும் பணிகளை தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலமாக நேரடியாக மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க போராடுவோம்.

தமிழக மீனவர்களின் பாதுகாப்பையும், இந்திய கூட்டரசின் எல்லைப் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு, இந்திய - இலங்கை ஒப்பந்தம் ரத்து செய்யப்படவும், கச்சதீவை மீட்டெடுக்கவும் தொடர்ந்து பாடுபடுவோம் போன்றன உட்பட பல முக்கிய வாக்குறுதிகள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து நிருபர்கள் திருமாவளவனிடம் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களின் விபரம் வருமாறு:-

**கே:-** அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறிய ம.தி.மு.க.வும் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று சொல்கிறீர்கள். தி.மு.க.வுடன் சேர்ந்து போட்டியிட கூறுகின்றீர்களா? அல்லது தனித்து போட்டியிட வேண்டும் என்று கூறுகின்றீர்களா?.

**ப:-** நம்பிக்கைத் துரோகத்திற்கு பாடம் புகட்டும் வகையில் போட்டியிட வேண்டும்.

**கே:-** ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் தொடர்ந்து காங்கிரஸ் அரசை எதிர்த்து வருகிறீர்கள். ஆனால், சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் இருக்கும் அணியில் இடம்பெற்றுள்ளீர்கள். இது பிரசாரத்தின்போது பாதிப்பை ஏற்படுத்தாதா?.


**ப:-** இது தேர்தலுக்கான உறவு. ஈழத் தமிழர் விவகாரத்தில் எங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறோம்.

**கே:-** தேர்தல் பிரசாரத்தை எப்போது தொடங்குகிறீர்கள்?.

**ப:-** முதலமைச்சர் கருணாநிதி திருவாரூரில் பிரசாரத்தை தொடங்குகிறார். அதில், நாங்களும் கலந்துகொள்வோம். அதன்பின்னர், தமிழகம் முழுவதும் பிரசாரம் மேற்கொள்வோம். புதுச்சேரியில் 12 தொகுதியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தனித்து போட்டியிடுவதாக முடிவு செய்துள்ளோம். இந்த நிலையில், புதுச்சேரி முதலமைச்சர் வைத்திலிங்கம் தொடர்பு கொண்டு, காங்கிரஸுடன் கூட்டணி வைத்துக்கொள்ள பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ளார். அவரிடம் 3 தொகுதிகள் கேட்டுள்ளோம் என்றார்.

# 2,500 ஆண்டுகள் பழைமையான இரும்பு உருக்குப் பட்டறை

**ஸ்ரீபெரும்புதூர்:**



ஸ்ரீபெரும்புதூர் அருகே, 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய, இரும்பு உருக்குப் பட்டறை மற்றும் பழங்கால சுவாமி சிலைகள், அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டன.

ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்துக்குட்பட்டது பால்நெல்லூர் கிராமம். தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இக்கிராமத்தில், காஞ்சிபுரம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மகா வித்யாலயா பல்கலைக் கழக அகழ்வாராய்ச்சி துறை மாணவர்கள், அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டனர். அப்போது அப்பகுதியில் கற்காலமனிதர்கள் வாழ்ந்ததை உறுதி செய்யும் வகையில், இரும்பு உருக்குப் பட்டறை கண்டுபிடிக்கப்பட்டது. இப்பட்டறை சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முந்தையது. பட்டறையில் பயன்படுத்தப்பட்ட இரும்பு தாதுப் பொருட்கள், இரும்பு பட்டறையில் உருக்கிய இரும்புக் கழிவுகள், மண் உருளைகள் கிடைத்துள்ளன. இது தவிர, பல்லவர் காலத்தைச் சேர்ந்த நான்கு கைகள் கொண்ட பெருமாள் சிலை, விஜயநகர பேரரசு காலத்து ஆஞ்சநேயர் சிலை போன்றனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

# அகதிகளின் எண்ணிக்கை தினமும் கணக்கெடுப்பு சட்ட விரோத வாக்களிப்பை தடுக்க நடவடிக்கை

**சென்னை:**

தமிழக சட்டசபை தேர்தலில், சட்ட விரோத வாக்களிப்பதை தடுக்கும் விதமாக, அகதிகளின் எண்ணிக்கை தினமும் சரிபார்க்கப்படுகிறது.

கடந்த தேர்தல்களில், வாக்காளர் அடையாள அட்டை இருந்தால் மட்டுமே வாக்களிக்க முடியும் என்ற நிலை இருந்தது. தற்போது அதை தளர்த்தி, சில ஆவணங்களைக் காட்டி வாக்களிக்கும் முறையை, தேர்தல் ஆணையம் நடைமுறைப்படுத்தியுள்ளது. இதைப் பயன்படுத்தி இறந்தவர், வெளியூர்வாசிகளின் வாக்குகளை பதிவு செய்ய, சில கட்சிகள் இரகசிய திட்டமிட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரும்பாலானோர், வெளிநாடுகளில் உள்ளனர். அவர்களின் வாக்குகள் ஆயிரக்கணக்கில் உள்ளன. இவற்றை சட்ட விரோத வாக்காக பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக, இலங்கை அகதிகளை பயன்படுத்த சில கட்சிகள் முடிவு செய்து, அதற்கான போலி ஆவணங்களை தயாரித்திருப்பதாக தெரிகிறது.

வாக்குச் சாவடி முகவர்களை சரிக்கட்டி, சட்ட விரோத வாக்குகளை, தான் சார்ந்த கட்சிக்கு கொண்டு வரவும் திட்டமிட்டுள்ளனர். இதைத் தடுக்கும் விதமாக, மண்டபம் முகாமில் உள்ள அகதிகள் அனைவரின் எண்ணிக்கையும், தினமும் கணக்கெடுக்கப்படுகிறது. மேலும் யாரும் வெளியில் செல்லாதபடி கண்காணிக்கப்படுகிறது. தேர்தல் நடக்கும் நாளில், வெளியில் வேலைக்குச் செல்லும் அகதிகளுக்கு, அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

# அனுஷ்கா, நாகர்ஜுனா வீடுகளில் வருமான வரித்துறை சோதனை

**ஹைதராபாத்:**



பிரபல தமிழ் - தெலுங்கு நடிகை அனுஷ்கா வீட்டில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் அதிரடி சோதனை நடத்தினர்.

ஆந்திராவின் கடலோர நகரமான விசாகப்பட்டினத்தில் முக்கிய இடம் ஒன்றை திரைத்துறையைச் சேர்ந்தவர்கள் வாங்கியதாக கூறப்பட்டதையடுத்து நடிகை அனுஷ்கா உள்ளிட்ட திரையுலக பிரபலங்கள் வசிக்கும் பஞ்சாரா ஹில்ஸ், ஜுபிலி ஹில்ஸ் ஆகிய பகுதிகளில் வருமான வரித்துறையினர் நேற்று முன்தினம் காலை சோதனை மேற்கொண்டனர்.



இதில் முன்னணி தெலுங்கு நடிகர்கள் நாகர்ஜுனா, ரவி தேஜா, தயாரிப்பாளர் சிவ பிரசாத் ரெட்டி ஆகியோரின் வீடுகள் அலுவலகங்களிலும் ஒரே நேரத்தில் சோதனை நடந்தது.

இதன்போது, கணக்கில் வராத பல சொத்துக்கள் விற்றது மற்றும் வாங்கியது தொடர்பாக சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது. மேலும், முன்கூட்டியே வரி செலுத்தியதிலும் சில திரையுலக பிரமுகர்கள் தவறான கணக்குகளைத் தந்து ஏமாற்றியுள்ளது தெரியவந்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு கைப்பற்றிய சபைகளில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களே தவிசாளர்கள்

உள்ளூராட்சி சபைகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்ற 12 உள்ளூராட்சி சபைகளுக்கும் அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களே தவிசாளர்களாகவும் தலைவர்களாகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 15 சபைகளில் போட்டியிட்டு 12 சபைகளைக் கைப்பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் உள்ளூராட்சி சபைகள் அனைத்தும் இயங்கவுள்ளன.

வெற்றி பெற்ற சபைகளுக்கு யாரைத் தவிசாளர்களாகவும், தலைவர்களாகவும் நியமிப்பது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், மாவை சேனாதிராசா ஆகியோரும் புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் ஆனந்த சங்கரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# பல்வேறு காரணங்களினால் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது

## எதிர்காலத்தில் தீர்மானங்கள் எடுக்கப்படலாம் என்கிறது அரசாங்கம்

உள்நாட்டில் பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தாலும் வேறுபல காரணங்களுக்காக அவசரகால சட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து அமுல்படுத்திவருகின்றது. எனினும் நிலைமைகள் சீரானதும் எதிர்காலத்தில் இது தொடர்பில் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் என்று பதில் அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான அனுரபிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு முடிவுகளை அறிவிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது

அவசரகால சட்டத்தை பல்வேறு காரணங்களுக்காக நாங்கள் நாட்டில் அமுல்படுத்தி வருகின்றோம். உள்நாட்டில் பயங்கரவாதம் தோற்டிக்கப்பட்டுள்ளது. எனினும் வேறு பல காரணங்கள் உள்ளன. அவை தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. எனவே அவசரகால சட்டத்தை அமுல்படுத்துகின்றோம்.

இதேவேளை அவசரகால சட்டத்தின் கணிசமான பகுதிகளை அரசாங்கம் நீக்கி விட்டது என்பது உங்களுக்கு தெரியும். மிகவும் சொற்பமான பகுதிகளே தற்போது உள்ளன. அவை தொடர்பிலும் எதிர்காலத்தில் அரசாங்கம் தீர்மானம் ஒன்றை எடுக்கும் என்பதனை அறிவிக்கின்றோம். நாட்டில் பல விடயங்கள் உள்ளன. அவசரகால சட்டத்தின் பல பிரிவுகளை தளர்த்தியுள்ளோம்.

தற்போது யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை ஓரளவு குறைத்துள்ளோம். எதிர்காலத்தில் தொடர்ந்து குறைக்கப்படுமா என்று என்னால் தற்போது கூற முடியாது. ஆனால் எதிர்காலத்தில் தீர்மானங்கள் எடுக்கப்படலாம்.

**அஞ்சல்...**(தொடர்ச்சி)

டப்படும் எனத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கலந்தாலோசிப்பதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கல்வித்துறையின் உயர் மட்ட அதிகாரிகள் பரீட்சைத்திணைக்கள அதிகாரிகளைச் சென்று சந்தித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கையில் , அஞ்சல் அடையாள அட்டையைக் காட்டி பரீட்சையில் தோற்றியோர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை வந்தபின்னர் அதன் பிரதி ஒன்றை எமக்கு அனுப்பி வைத்தால் அவர்களின் பரீட்சை முடிவுகள் வெளியி

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களின் வயதெல்லை 16 ஆய உள்ளதினால் சென்ற வருடம் பரீட்சை எழுதும்போது 16 வயதைப் பூர்த்தி செய்யாததினால் இவ்வருடம் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து அதுவரும்வரை காத்திருந்து அதன்பின்னரே பரீட்சை முடிவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக துரிதமாக மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு. சிவநந்தன் தெரிவித்துள்ளார்.

**இந்திய...**(தொடர்ச்சி)

வடபகுதி மீனவர்கள் கடற்படையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக மீன்பிடித் தடையால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தற்போது மீன்பிடித்தொழிலுக்குக் கட்டுப்பாடு அந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி காரணமாக இலங்கையின் வடபகுதி மீனவர்கள் கடும் இழப்பை எதிர்கொள்கின்றனர். இந்திய மீனவர்கள் தங்களின் நவீன தொழில்நுட்ப உதவியுடன் மீன்வளத்தை அப்படியே சூறையாடிக் கொள்கின்றனர். அதன் காரணமாக இலங்கை மீனவர்கள் சொற்பமாகவே மீன்பிடிக்க முடிகின்றது.

அத்துடன், இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல்களை மேற்கொள்வதாக கூறப்படுவது அப்பட்டமான பொய். அதனை கச்சதீவு திருவிழாவுக்கு வருகை தந்திருந்த இந்திய மீனவர்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள். அதன் காரணமாகவே அவர்கள் கடற்படை குறித்து பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

**இறுதிக்கட்ட...**(தொடர்ச்சி)

பீட்டர் பர்லே தனது தகவல் குறிப்பின் மூலம் இராஜாங்கத் திணைக்களத்துக்கு மேற்குறித்த விடயத்தை அறிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தம் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவசங்கர் மேனன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்கள்.

அதன்போதே அவர்கள் இருவருமாக இந்திய அரசின் நிலைப்பாட்டுக்கு இணங்க உடனடிப் போர் நிறுத்தமொன்றுக்கு இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளனர். அதன்பின் அவர்கள் அமெரிக்கத் தூதரைச் சந்தித்து அது குறித்து விளக்கியுள்ளனர்.

மிக விரைவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போர் நிறுத்தம் குறித்த அறிவிப்பை அடுத்து வரும் இரண்டொரு நாட்களுக்குள் வெளியிடுவார் என்று அவர்கள் உறுதியான எதிர்பார்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஆயினும் ஜனாதிபதி அதனை மேற்கொள்ளாது தொடர்ந்தும் விடுதலைப் புலிகளின் தலைமையை குறுகிய நிலப்பரப்புக்குள் சிக்க வைத்து யுத்தத்தை முன்கொண்டு செல்வதிலேயே ஆர்வம் காட்டியதாகவும் அந்தத் தகவல் குறிப்பு மேலும் தெரிவிக்கின்றது.

**இலங்கை...**(தொடர்ச்சி)

ஜெயலலிதா நேற்று வெளியிட்டார். திருச்சியில், ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை அவர் தாக்கல் செய்ததைத் தொடர்ந்தே இவ் அறிக்கை வெளியிடப்பட்டது.

அதில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

ஏழை மக்கள் வீடு கட்டுவதற்கு ரூ. 1.80 லட்சம் மானியமாக அளித்தல், ரேஷன் கார்ட் உள்ள அனைவருக்கும் 20 கிலோ அரிசி இலவசம், வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு 20 லீற்றர் தண்ணீர் இலவசம், குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் இலவச மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், நடுத்தர மக்களுக்கு ரூ. 1 லட்சம் மானியத்தில் 40 லட்சம் வீடுகள் கட்டித் தரப்படும்.

மாணவர்களுக்கு இலவச மடி கணினி, பத்து மற்றும் 12ஆம் வகுப்பு படிக்கும் அரசு, தனியார் மாணவர்களுக்கு ரூ. 1000 முதல் ரூ. 5000 வரை கல்வி உதவித் தொகை.

தாய்மார்களுக்கு இலவச மின்விசிறி, மிக்சி, கிரைண்டர், 58 வயதுக்கு மேல் உள்ள முதியவர்களுக்கு இலவச பஸ் பாஸ், வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு 4 ஆடுகள் இலவசமாக வழங்கப்படும், 6 கிராமங்களில் 60 ஆயிரம் பால் கறவை மாடுகள் இலவசமாக வழங்கப்படும்.

மீனவர் பாதுகாப்புப் படை, மீனவர்கள் நலனுக்காக கப்பல் பூங்கா அமைக்கப்படும், மீனவர் குடும்பத்திற்கான உதவித் தொகை ரூ. 2000 ஆக உயர்த்தப்படும்.

இலங்கை அகதிகள் அனைவரும் தமிழகத்திலேயே கௌரவமாக வாழ நடவடிக்கை எடுக்கப்படும், கச்சதீவை மீட்டு தமிழக மீனவர்களின் நலன்கள் காக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்சதீவை திரும்பப் பெற மத்திய அரசுடன் பேச்சு நடத்துவதுடன், ஈழத் தமிழர்கள் அமைதியாய் வாழ இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்தப்படும் என தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**நீதிமன்ற...**(தொடர்ச்சி)

மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய இவ்விடயம் குறித்து மேலும் கூறுகையில் :-

நாட்டில் 234 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடந்து முடிந்துள்ளது. இந்நிலையில் வேட்பு மனு நிராகரிப்பு தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள சபைகள் உள்ளிட்ட 101 உள்ளூராட்சி சபைகளுக்கும் தேர்தலை நடத்தவேண்டியுள்ளது.

இந்நிலையில் வழக்கு விசாரணைகள் முடிவுற்று தீர்ப்புக்கள் வெளியிடப்பட்டவுடன் எஞ்சியுள்ள 101 சபைகளுக்கும் தேர்தலை நடத்துவது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றார்.

கடந்த 17 ஆம் திகதி 234 உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்யும் நோக்கில் நடைபெற்ற தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணி 205 சபைகளையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 12 சபைகளையும் ஐக்கிய தேசிய கட்சி 9 சபைகளையும் கைப்பற்றியிருந்தன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் எந்தவொரு சபைக்கும் தேர்தல் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கல்களுக்கு மத்தியிலும் குடாநாட்டில்

## மின்சார நெருக்கடிக்கான தீர்வுத் திட்டம்



**-அமைச்சர் சம்பிக்க ரணவக்க**

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்துக்கு மின்சாரத்தை விநியோகிப்பதில் இரண்டு சிக்கல்கள் உள்ளன. யாழில் மின்சார இணைப்பு தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன. யாழ்ப்பாண பகுதிக்கு ஒரு மின்சார தொகுதியும் வவுனியா வரை ஒரு மற்றொரு மின்சார தொகுதியும் காணப்படுகின்றன. இரண்டுக்கும் தொடர்பில்லை. எனவே யாழ்ப்பாணத்திலேயே எரிபொருள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தையே அங்கு விநியோகிக்கவேண்டியுள்ளது என்று மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

எனவே ஏ-9 வீதியூடாக சுண்ணாகம் மற்றும் வவுனியா ஆகியவற்றை இணைப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். 2013 ஆம் ஆண்டில் இதனை செய்யவுள்ளோம். அவ்வாறு செய்யும்போது யாழ்ப்பாண மின்சார நெருக்கடி தீர்க்கப்படும். அத்துடன் 2012 ஆம் ஆண்டில் வன்னியின் அனைத்து பகுதிகளுக்கும் மின்சாரத்தை வழங்கிவிடுவோம். தற்போதைக்கு முல்லைத்தீவு மன்னார் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் பல இடங்களுக்கு மின்சாரம் வழங்கியுள்ளோம். இவ்வருட நடுப்பகுதியில் பூநகரிக்கும் வழங்கிவிடுவோம். மல்லாவி மடு புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு மின்சாரத்தை விநியோகிப்போம்.

யாழ் ஓசைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

செவ்வியின் முழு விபரம் வருமாறு

### நுரைச்சோலை அனல் மின் நிலையம்

மார்ச் மாதம் 22 ஆம் திகதி புத்தளம் நுரைச்சோலை அனல் மின்நிலையத்தை திறந்து வைத்தோம். அதன்மூலம் 300 மெகாவோட்ஸ் மின்சாரம் தேசிய மின்சார தொகுதியில் இணைகின்றது. இதற்கு நாங்கள் லக்விஜய அனல் மின்நிலையம் என்று பெயரிட்டுள்ளோம். காரணம் இப்பிரதேசத்துக்கே முதலில் விஜயன் வந்ததாக நம்பப்படுகின்றது. அத்துடன் இலங்கை வெற்றிபெறுகின்றது என்பதும் இதற்கு அர்த்தமாகும். நிலக்கரி மின்சாரம் என்பது எம்மை பொறுத்தவரை புதிய அனுபவமாகும். இந்த மின்நிலையம் 24 மணிநேரமும் இயங்கும் நிலையமாகும். இது மிகவும் பயன்தரும் விடயமாகும்.

எமது நாட்டின் மின்சார தேவையை பூர்த்தி செய்யவும் கைத்தொழில்துறைக்கு மின்சாரத்தையும் வழங்கவும் இந்த அனல் மின் நிலையம் பயன்படுத்தப்படும். இது எமக்கு புதிய அனுபவம். எனவே நாங்கள் ஜனவரி மாதத்திலிருந்து குறிப்பிடத்தக்களவு மின் உற்பத்தியை இங்கு மேற்கொண்டோம். அவை பரீட்சார்த்தமாக இடம்பெற்றது என்று கூறலாம். 22 ஆம் திகதியிலிருந்தே 300 மெகாவோட்ஸ் மின்உற்பத்தி ஆரம்பமாகியது.

### இந்த மின்நிலையத்தை அமைப்பதில் காணப்பட்ட சவால்கள்

இலங்கையில் நாம் நீர்மின்சார வளத்திலேயே தங்கியிருந்தோம். எனினும் படிப்படியாக நாட்டில் மின்சார தேவை அதிகரித்தது. மின்சாரத்துக்கான கேள்வி அதிரித்தது. ஒவ்வொரு தசாப்தத்திலும் மின்சார தேவை இரண்டு மடங்காகியது. எனவே மின் உற்பத்தியை அதிகரிப்பது குறித்து சிந்திக்கவேண்டியயேற்பட்டது. நீர் மின்வளம் போதுமானதாக இருக்கவில்லை. இலங்கை மின்சார சபையானது எப்போது 20 வருடங்களுக்கு பின்னர் வரப்போகும் நிலைமை தொடர்பிலேயே திட்டங்களை மேற்கொள்ளும். அதன்படி நிலக்கரி அனல் மின்நிலையமும் 20 வருடங்களுக்கு முன்னரே திட்டமிடப்பட்டது. மகாவலி வேலைத்திட்டம் முடிவடையும்போதே இது குறித்து சிந்திக்கப்பட்டது. அந்த வகையில் இந்த அனல் மின்நிலையத்தை முதலில் மகாவெல்ல பகுதியில் அமைக்க திட்டமிடப்பட்டது. அக்காலத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கு வந்த எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டது. பின்னர் மிரிஸ்ஸ அம்பாந்தோட்டை திருகோணமலை போன்ற இடங்களிலும் பிரேரிக்கப்பட்டது. ஆனால் அக்காலத்தில் ஏற்பட்ட எதிர்ப்பு காரணமாக அந்த முயற்சிகள் கைவிடப்பட்டன. இறுதியில் 1995 ஆம் ஆண்டு நுரைச்சோலை பகுதிக்கு கொண்டுவரப்பட்டது. பின்னர் 1996 ஆம் ஆண்டு நாட்டில் பாரிய மின்சார நெருக்கடி ஏற்பட்டது. எனினும் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் 2005 ஆம் ஆண்டு தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும் 2006 ஆம் ஆண்டு இதன் நிர்மாண பணிகள் ஆரம்பமாகின.

### நாடளாவிய ரீதியிலான மின்விநியோகம்

தற்போதைக்கு நாடளாவிய ரீதயில் 90 வீதமான பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுவிட்டது. 2012 ஆம் ஆண்டு நிறைவடையும்போது நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் மின்சாரம் விநியோகிக்கப்பட்டுவிடும். வடக்கு கிழக்கு மாகாணங்களை பொறுத்த வரை பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தை எடுத்துக்கொண்டால் எங்களுக்கு சிக்கல்கள் இல்லை. அங்கு மின்விநியோகம் சீராக உள்ளது. இதுவரை 60 வீதமான பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்கிவிட்டோம். எஞ்சிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதையும் விரைவாக மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். மேலும் கிழக்கு மாகாணத்தில் வீதிகள் நன்றாக உள்ளன. எனவே பாரிய சிக்கல்கள் இல்லை என்று கூறலாம்.

### யாழ்ப்பாண நிலைமை

எனினும் வடக்கு மாகாணத்தில் இரண்டு சிக்கல்கள் உள்ளன. இங்கு மின்சார இணைப்பு தொடர்பில் சிக்கல்கள் உள்ளன. யாழ்ப்பாண பகுதிக்கு ஒரு மின்சார தொகுதியும் வவுனியா வரை ஒரு மற்றொரு மின்சார தொகுதியும் காணப்படுகின்றன. இரண்டுக்கும் தொடர்பில்லை. இங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு மின்சாரத்தை வழங்குவதில் சிக்கல்கள் உள்ளன. யாழ்ப்பாணத்திலேயே எரிபொருள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தையே அங்கு விநியோகிக்கவேண்டியுள்ளது. அந்த வகையில் சில வேளைகளில் யாழ்ப்பாணத்தின் மின்சார தேவையை எங்களால் நிறைவேற்ற முடியாமல் உள்ளது.

### இணைப்பு

அதனால் நாங்கள் பாரிய திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளோம். அதாவது ஏ-9 வீதியூடாக சுண்ணாகம் மற்றும் வவுனியா ஆகியவற்றை இணைப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். 2013 ஆம் ஆண்டில் இதனை செய்யவுள்ளோம். அவ்வாறு செய்யும்போது யாழ்ப்பாண மின்சார நெருக்கடி தீர்க்கப்படும். அத்துடன் 2012 ஆம் ஆண்டில் வன்னியின் அனைத்து பகுதிகளுக்கும் மின்சாரத்தை வழங்கிவிடுவோம். தற்போதைக்கு முல்லைத்தீவு மன்னார் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் பல இடங்களுக்கு மின்சாரம் வழங்கியுள்ளோம். இவ்வருட நடுப்பகுதியில் பூநகரிக்கும் வழங்கிவிடுவோம். மல்லாவி மடு புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு மின்சாரத்தை விநியோகிப்போம்.

### உயிரியல் வாயு மின் உற்பத்தி

மேலும் மீள்குடியேறும் மக்களுக்கு மின்சாரத்தை இலவசமாகவே விநியோக்கின்றோம். அவர்களிடம் கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது. அவர்களின் வாழ்வாதாரம் ஸ்திர நிலைமையை அடையும்வரை வழங்குவோம். வடக்கு கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் உயிரியல் வாயு மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்களை அமைக்கவுள்ளோம். தற்போதைக்கும் எங்களுக்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. திருகோணமலை இவ்வாறான தனியார் மின்உற்பத்தி நிலையம் ஒன்று உள்ளது.

செவ்வி: ரொபட் அன்டனி

மன்னார் பூநகரி யாழ்ப்பாணம் காற்றாடி மூலம் மின்சாரம் பிறப்பிக்கப்படும் திட்டங்களை ஊக்குவிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். மேலும் யாழ்ப்பாணத்தில் உள்ள தீவுப்பகுதிகளுக்கு இங்குள்ள மின்சாரத்தை விநியோகிக்க முடியாது என்பதால் அங்கு சூரிய சக்தி மின்சார உற்பத்தியை ஊக்குவிக்கவுள்ளோம். மேலும் யாழ்ப்பாணத்தில் புதிய மின்நிலையம் ஒன்றை அமைத்து வருகின்றோம்.

### மின்சார சபை இலாபத்தில்

இலங்கை மின்சார சபை பல வருடங்களாக நட்டத்திலேயே இயங்கிவந்தது. 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலாபம் அடையும் நிறுவனமாக இருந்தது. 1995 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலாபம் [illegible]டம் என்ற இரண்டு நிலைமைகளும் காணப்பட்டன. எனினும் தற்போது இந்த நிறுவனத்தை இலாபம் அடையும் நிறுவனமாக மாற்றினோம். பல மாற்றங்களை கொண்டுவந்தோம். முக்கியமாக நிதி முகாமைத்துவத்தையும் மேற்கொண்டோம்.

### மின்கட்டணம் உயர்வடையுமா?

மின்கட்டணத்தை பொறுத்தமட்டில் 2008 ஆம் ஆண்டிலிருந்து 90 அலகுகளுக்கு குறைவாக பயன்படுத்துபவர்களுக்கு கட்டணங்கள்

அதிகரிக்கப்படவில்லை. 2008 ஆம் ஆண்டிலிருந்து ஒரே விலையில் இருப்பது மின்கட்டணம் மட்டும்தான். எரிபொருளின் விலையின் அடிப்படையிலேயே மின்கட்டணம் தீர்மானிக்கப்படுகின்றது. இதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். எரிபொருள் விலை அதிகரித்தால் மின்கட்டணம் அதிகரிக்கும். மின் அலகு ஒன்றை உற்பத்தி செய்யும் செலவு அதிகரித்துள்ளது. உற்பத்தி செலவை கட்டுப்படுத்தி குறைக்கவே நாங்கள் முயற்சிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் மலர்

# அறம் செய்ய விரும்பு

'செயற்பால தோறும் அறனே ஒருவற்கு உயற்பால தோறும் பழி' என்பது அறத்தின் அவசியத்தை வலியுறுத்தும் பொன்மொழி ஆகும்.

அறம் சிறப்பையும் அளிக்கும்; செல்வத்தையும் அளிக்கும்! ஆகையால் உயிருக்கு அத்தகைய அறத்தை விட நன்மையானது ஏதும் இல்லை.

ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தை விட நன்மையானது ஒன்றும் இல்லை. அறத்தைப் போற்றாமலும் மறப்பதைவிட கொடுமையானதும் இல்லை.

இளைஞராக உள்ளவர் பிற்காலத்தில் பார்த்துக்கொள்வார் என்று எண்ணாமல் அறம் செய்யவேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியாத் துணையாகும்.

'அறத்தாறு இது என வேண்டா சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை' அதாவது பல்லக்கை சுமப்பவனும் அதன் மேலிருந்து ஊர்ந்து செல்வோகியுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இது என்று கூறவேண்டா.

அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை புகழும் இல்லாதவை.

ஒருவன் அறவாழ்வு வாழ்கிறான் என்னும் பொழுது நாம் கருதுவது தீய செயல்கள் என்பவற்றைச் செய்யாது வாழ்கிறான் என்பதுவே அதன் பொருள். ஆகவே, அறம் என்பது நீதியையும் செம்மையான வாழ்வையுமே குறிக்கும்.

கொலை, களவு, கள், காமம், சூது போன்ற பஞ்சமாபாதங்களிலிருந்து விடுபட்டு வாழ்பவன் அறவாழ்வு வாழ்பவன் ஆவான். திரிகரணத்தாலும் அறவாழ்வு காணுபவன் எவனோ அவனே சுத்தமான அறவான் ஆவான்.

'அறம் செய்ய விரும்பு' என்பதிலுள்ள தரும நெறியானது நல்லொழுக்கப் பண்புகளோடு கூடிய நற்காரியங்களாம். அவ்வாறு மற்றவர்கள் பொருட்டு ஒருவன் கருணை நிரம்பிய உள்ளத்தோடு புரியும் தருமமானது மிக உயர்ந்ததாகக் கணிக்கப்படுகின்றது.

*''இன்னறும் கனிச்சோலைகள் செய்தல்*
*இனிய தண்ணீர் சுனைகள் இயற்றல்*
*அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் நாட்டல்*
*பின்னர் உள்ள தருமங்கள் யாவும்*
*பெயர் விளங்க ஒளிர நிறுத்தல்*
*அன்னையாவிலும் புண்ணியம் கோடி''*
*ஆங்கொரு ஏழைக்கு எழுத்தறிவித்தல்*

என்பது பாரதியார் கூறும் உபதேசம். மனிதராக பிறந்த நாமெல்லோரும் அறவாழ்வில் நாட்டமுள்ளவராக வாழ்ந்து மேன்மையடைவோம்.

**செ. இலக்கியா**
*தரம் - 06*
*யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி*

## ஜோன் மில்டன்



உலகப் புகழ்பெற்ற கவிஞர் ஜோன் மில்டன் 1608 - 1974 காலப்பகுதியில் வாழ்ந்தவர். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். ஒரு வியாதியால் கண் பார்வையை இழந்துவிட்ட நிலையிலும் அவர் அமரத்துவமான நிலையிலும் ஆங்கிலக் கவிதைகளை எழுதினார்.

ஆங்கில இலக்கியத்தில் அவரது கவிதைகள் இன்றும் பெரிய பொக்கிஷமாகப் போற்றப்படுகின்றன.

ஒரு சமயம் அவரது நண்பர் ஒருவர் அவரிடம், ''உங்கள் குடும்ப வாழ்க்கை பற்றி சில விபரங்களை கூறமுடியுமா?'' என்று கேட்டார்.அதற்கு மில்டன், ''என்னுடைய படைப்புக்களே உங்களுக்குத் தேவையான விபரங்களைத் தரும் என்று கருதுகிறேன். இருந்தாலும், சில விஷயங்களை சொல்லுகிறேன். எனக்குத் திருமணமாகி என் மனைவி வீட்டுக்கு வந்த பின் நான் எழுதிய நூலின் பெயர் 'இழந்த சொர்க்கம்'. என் மனைவி இறந்து நான் தனி மனிதனாகிவிட்ட பிறகு நான் எழுதிய நூலின் பெயர் 'திரும்பப்பெற்ற சொர்க்கம்' என்றார்.

மனைவி சரியில்லாததால் அவர் அடைந்த துன்பம் எத்தகையது என்பதை உணர்ந்த அவரது நண்பர் மனம் வருந்தினார். அந்த வேதனையை சாதனையாக மாற்றிவிட்ட அவரது திறமையை என்னவென்று சொல்வது?



கே.எஸ்.சிவஞானராஜா
பாலசுப்பரமணிய வித்தியாலயம் ஆனைக்கோட்டை



செ.இலக்கியா தரம் 6
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

- சீல் என்ற மீனினம் மணிக்கு 23 கி.மீ. வேகத்தில் நீந்தும்.
- அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.
- கடல் புறாக்கள் நீரில் மிதந்துகொண்டே தூங்கும்.
- பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.
- மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்தும்.
- உலகில் முதுகெலும்புடன் தோன்றிய முதல் உயிரினம் மீன்.
- உலகிலேயே அதிக குரங்கினங்கள் வாழும் நாடு பிரேசில்.
- குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்கும்.
- புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும் திறன் படைத்தது.


சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்சட்டை கழன்றதால் புள்ளிகளை இழந்த தற்காப்பு கலை வீரர்

தற்காப்புக் கலை நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு தனது திறமைகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்த 20 வயது இளைஞர் எதிர்பாராத தர்மசங்கடத்துக்கு ஆளானார். நூற்றுக் கணக்கான மக்கள் திரண்டிருந்த அரங்கில் தனது திறமைகளைக் காட்டிக் கொண்டிருந்த அவரின் காற்சட்டை திடீரென கழன்று விழுந்து விட்டது. இந்தக் காட்சியை அக்கு வேறாக ஆணி வேறாக படம் பிடித்தும் விட்டனர். கீனன் ஸ்டோன் என்பவருக்குத் தான் இந்த அனுபவம் ஏற்பட்டது.





வேர்ஜீனியாப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இவர் சீன தற்காப்புக் கலையில் கறுப்புப் பட்டி பெறுவதற்கான தகுதி காண் நிகழ்வின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கலிபோர்னியாவில் உள்ள ஒரு அரங்கில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இவர் மிகச் சிறப்பான முறையில் தனது திறமைகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

நடுவர்களும் மெய் மறந்து இவரின் ஆற்றலை ரசித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் சற்று நேரத்தில் தனது கால் சட்டைப் பட்டி கழருவதை இவர் உணர்ந்தார். எதுவும் செய்ய முடியவில்லை. மெல்ல மெல்லக் கழன்று அப்படியே நழுவி விழுந்து விட்டது.

இறுதியில் மொத்தப் பத்துப் புள்ளிகளில் இவருக்கு 7.7 புள்ளிகள் மட்டுமே கிடைத்தது. அடுத்த ஆண்டு காற்சட்டையை இறுக்கமாகக் கட்டிக் கொண்டு மீண்டும் போட்டியிடப் போவதாக இவர் தெரிவித்துள்ளார்.

# பேஸ்புக்கால் வந்த வினை கன்சர்வேடிவ் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட தம்பதிகள்





சிறு பிள்ளைகள் விளையாடும் கொலிவோக்ஸ் பொம்மைகளோடு கடந்த டிசம்பர் மாதத்தில் பேஸ்புக்கில் போஸ் கொடுத்தமைக்காக கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட கன்சர் வேடிவ் கட்சி உறுப்பினர்கள் இருவரும் ராஜினாமாச் செய்துள்ளனர்.

பில் எதரிஜ் என்பவரும் அவரின் மனைவியுமே இவ்வாறு ராஜினாமாச் செய்துள்ளனர்.

அரசியல் ரீதியான சில தவறுகளைச் சுட்டிக்காட்டவே இவர்கள் இருவரும் இவ்வாறு சிறு பிள்ளை பொம்மைகளொடு போஸ் கொடுத்திருந்தனர்.




# அமெரிக்க படையை எதிர்த்து போர் வீரனாக மடிவேன்

## கடாபி அதிரடி பேச்சு



உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளுக்கு எதிரான போரில் லிபிய படைகளுக்கு வெற்றி நிச்சயம். தவறினால், எதிர்த்துப் போராடி வீரமரணம் அடைவேன் என்று லிபிய ஜனாதிபதி கடாபி நேற்று முன்தினம் தெரிவித்தார். லிபியாவில் 40 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதி கடாபிக்கு எதிராக ஒரு பிரிவினர் கடந்த மாதத்தில் கிளர்ச்சியில் இறங்கினர். போராட்டம் தீவிரமடைந்ததில், கிழக்கு பகுதியின் பல நகரங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்றினர்.

அவர்களை விரட்டியடிக்க லிபிய படைகளை ஏவினார் கடாபி. இருதரப்பு மோதலில் பலர் பலியாகினர். கடாபி பதவி விலக அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் வலியுறுத்தின. அவர் கேட்காததால், ஐ.நா. பாதுகாப்பு சபை அனுமதியுடன் லிபிய படைகள் மீது தாக்குதல் தொடங்கின. கடந்த சனிக்கிழமை தொடங்கிய தாக்குதல் நீடித்துக் கொண்டிருக்கின்றது. கிரீஸ் நாட்டின் கடல் பகுதியில் உள்ள இராணுவ தளத்தில் இருந்து நோர்வே, அமெரிக்க போர் விமானங்கள் லிபிய தலை நகர் திரிபோலி மீது குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.

அதில் பல இடங்கள் தீப்பற்றி எரிந்தன. கடாபி மாளிகை அருகிலும் குண்டுகள் விழுந்து வெடித்தன. இந்த குண்டு வீச்சில் அப்பாவி மக்கள் பலர் பலியானதாக லிபிய அரசு டி.வி செய்தி வெளியிட்டது. இதற்கிடையே, கடந்த ஒரு வாரத்தில் முதல் முறையாக திரி போலியில் தனது மாளிகை வளாகத்தில் ஆதரவாளர்கள் இடையே கடாபி நேற்று முன்தினம் உரையாற்றினார். அதை அரசு டி.வி நேரடியாக ஒளி பரப்பியது. அப்போது அவர் கூறுகையில், நீண்ட காலமோ, குறைந்த நாட்களோ போரை எதிர்கொள்ள தயாராகி விட்டோம்.

உள்நாட்டு எதிரிகளோ, வெளிநாட்டினரோ (அமெரிக்க கூட்டு படைகள்) வீழ்த்தாமல் விட மாட்டோம். நியாயமற்ற இந்த அத்துமீறலை அனுமதிக்க முடியாது. லிபிய மக்களுக்கு வெற்றி[illegible]கர முடியும் என்று நம்புகிறேன். அது என்னால் முடியாமல் போனால் இறுதி வரை எதிர்த்து நின்று போர் வீரனாக மடிவேன் என்றார்.

# சமூகசேவையில் விருப்பமுள்ள கனேடியப் பெண் படுகொலை



கல்காரி பிரதேச கெலடோனில் என்ற இடத்தில் கடந்த வாரம் கொலைசெய்யப்பட்ட நிலையில் 20 வயது பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது. இவர் ஒரு வழித்துணை நிறுவனத்துக்காகப் பணியாற்றி வந்தவர். சமூக சேவைத்துறையில் மேலதிக கற்கை நெறியொன்றை மேற்கொள்ள வேண்டும் என இவர் விருப்பம் கொண்டிருந்தார் என்று இந்த நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொராபிரீலென்ட் என்ற இந்தப் பெண் இனிமையான சுபாவம் கொண்டவர். ஒரு சமூக சேவகியாக வந்து தனிப்பட்டவர்களின் தேவைகளுக்கு உதவுவது தான் இவரின் நோக்கமாக இருந்தது.

இவரின் இழப்பு எமது நிறுவனத்துக்கும் ஒரு இழப்பாகும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொராபிரீலென்ட் அண்மையில் தான் வன்கூவரிலிருந்து ரொறன்ரோவுக்கு இடம் பெயர்ந்திருந்தார்.

கெச்சட்லேடீஸ் என்ற வழித்துணை அமைப்புக்காகத்தான் இவர் பணியாற்றிவந்தார். இவருக்கான கட்டணம் ஒரு மணித்தியாலத்துக்கு 400 டொலர்கள் அல்லது ஒரு நாளைக்கு 4000 டொலர்கள்.

இவர் தனக்கு புற்றுநோய்க்கான சிகிச்சைப் பெற வேண்டியுள்ளது என்றும் இந்த நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார். இந்தக் கொலையின் மர்மம் பற்றி பொலிஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஒரு வழிப்பாதை' விதிமுறையை மீறுவோருக்கு விநோத தண்டனை

(வட்டுக்கோட்டை நிருபர்)

யாழ். நகர வீதிகளில் 'ஒரு வழிப்பாதை' வீதி ஒழுங்கை மீறும் சைக்கிள் பயணிகள் வந்த வழியில் திரும்பி தமது சைக்கிள்களைத் தோளில் தூக்கிவைத்த வண்ணம் நடந்தசெல்லும் பரிதாபகரமான காட்சிகளை கடந்த சில நாட்களாகக் காணக் கூடியதாகவுள்ளது.

ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் யாழ். நகர வீதிகளில் போக்குவரத்து கண்காணிப்புப் பணிகளைத் துரிதப்படுத்திய பொலிஸார், 'ஒரு வழிப்பாதை' விதிகளை மீறுவோரையும் சமாந்தரமாக சைக்கிள்கள், 49 CC மோட்டார் சைக்கிள்களில் செல்வோரையும் மறித்து போக்குவரத்து ஒழுங்குவிதிகள் பற்றி அறிவுறுத்தியும் எச்சரிக்கை விடுத்தும் வந்தனர்.

பொலிஸாரின் அறிவுரைகளை செவிமடுக்க மறுக்கும் சில இளைஞர், யுவதிகள் தொடர்ந்தும் போக்குவரத்து வீதி ஒழுங்குகளை மீறிவந்தனர். இதனை அவதானித்த போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் வீதி ஒழுங்குவிதிகளை மீறி பயணிப்போரை அழைத்து அவர்களது சைக்கிள்களை தோளில் காவிச் செல்லப் பணிக்கின்றனர்.

சைக்கிள்களில் சமாதந்தரமாகப் பயணிக்கும் மாணவர்களை எச்சரிக்கை செய்து விடுவிப்பது அல்லது சக்கரங்களின் காற்றைத் திறந்துவிடுவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாணவர் அல்லாதவர்கள் வீதி ஒழுங்குகளை மீறும்போது அவர்களை நீதிமன்றத்திற்குக் கொண்டுசென்று நீதிவான் முன்னிலையில் ஆஜராக்கி தண்டப் பணம் கட்டச்செய்கின்றனர்.

வீதிக்கு வீதி கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பொலிஸார், வாகனச் சாரதிகளிடம் வாகன வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம்என்பவற்றையும்பரிசீலனை செய்து வருகின்றனர்.




# நல்லூர் ப.நோ.கூ. சங்கம் நடப்பாண்டு புதிய அங்கத்தவர்கள் இணைப்பு

ஏழாலை,

நல்லூர் ப.நோ.கூ.சங்கம் இவ்வாண்டுக்கான புதிய அங்கத்தவர்களை இணைத்து வருகின்றது.

கூட்டுறவுச் சங்கத்தினை பலப்படுத்தும் நோக்கிலும் புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்வதற்குமாக சங்கப் பரப்பெல்லையில் வதியும் உள்ள 18 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் அங்கத்தவர்களாக சேர்ந்துகொள்ள முடியும் எனவும் பங்குப் பணமாக ஒருவர் நூறு ரூபாவினைச் செலுத்தி அங்கத்துவத்தினைப் பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தினுள் அங்கத்தவர்களாகச் சேரவிரும்புவோர் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று அதனை முறையாகப் பூர்த்தி செய்து வழங்கி அங்கத்தவராக முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வர்த்தக நிலையங்களில் திருட்டுக்களை தடுப்பது தொடர்பான கலந்துரையாடல்

(வட்டுக்கோட்டை நிருபர்)

காரைநகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடனான கலந்துரையாடல் ஒன்று காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காரைநகர் கடற்படை பொதுசன தொடர்பு அதிகாரி, ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் இராணுவ பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

காரைநகரிலுள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுடனான இக்கலந்துரையாடலில் காரைநகர் வர்த்தக சங்கத் தலைவர் க. தம்பிராசா கருத்துத் தெரிவிக்கையில்,

2011 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் இன்றுவரை காரைநகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் 26 தடவைகள் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இறுதியாக வாரிவளவிலுள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றில் இரவுவேளையில் நடைபெற்ற பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து விழிப்படைந்த காரைநகர் வர்த்தகர்கள் ஒன்றிணைந்து உதவி அரசாங்க அதிபர் ஊடாக இன்றைய கலந்துரையாடலை ஒழுங்குசெய்துள்ளனர். எதிர்காலத்தில் இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் இடம் பெறாதிருப்பதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென இக் கலந்துரையாடலின் போது கேட்டுக் கொண்டனர்.


# வயாவிளான் ஞானவைரவர் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பம்

தெல்லிப்பழை,

வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட வயாவிளான் தெற்கு - ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

படையினர் வழங்கிய அனுமதியைத் தொடர்ந்து 21 வருடங்களின் பின்னர் இம்முறை உற்சவம் பிராயச்சித்த அபிஷேகத்துடன் ஆரம்பாகி 14 நாட்களாக இடம் பெற்று வருகின்றது. உற்சவத்தின் இறுதி நாள் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இப்பகுதியில் இதுவரை மக்கள் மீள்குடியமர படைத்தரப்பு அனுமதி வழங்கவில்லை. பூசை வழிபாட்டிற்கு மட்டுமே அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கிளிநொச்சி விவசாயபீடத்தை கிளிநொச்சி பிரதேசத்திற்கு கொண்டு செல்வதற்கான கலந்துரையாடல் ஒன்று ஆளுநர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் ஆளுநர் பணிமனையில் நடைபெற்றுவதை படத்தில் காணலாம்.

# யாழ். மாநகர சபை நடத்தும் கலைசார் வகுப்புக்கள்

யாழ். மாநகர சபையின் கலாசாரப் பிரிவினால் புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் பிற்பகல் 2.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்தில் கர்நாடக சங்கீத, நடன வகுப்புக்களையும்மேலைத்தேச - கீழைத்தேச வாத்தியக் கருவி வகுப்புக்களையும் பட்டதாரி ஆசிரியர்களால் நடத்துவதற்கு யாழ். மாநகர முதல்வரால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ் வகுப்புக்களுக்கான மாதாந்த பயிற்சிக் கட்டணமாக 150 ரூபாவும் அனுமதிக் கட்டணமாக ஆயிரம் ரூபாவும் அறவிடப்படும்.

இதற்கான விண்ணப்பப்படிவத்தினைப் பெறவிரும்புபவர்கள் யாழ். மாநகர சபை கலாசாரப் பிரிவினருடன் தொடர்புகொள்ளமுடியும் என முதல்வர் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 1186 என்னும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்புகொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலோசனைக் கூட்டம்

சாவகச்சேரி,

சாவகச்சேரி நகராட்சி மன்ற நகர அபிவிருத்தி ஆலோசனை சபைக் கூட்டமும் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலும் நாளை 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மன்றத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக மன்றின் செயலாளர் கொ. ஜக்கீல் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் ஊடகத்துறையினருக்கானதேவை யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகிறது

## - பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

(வட்டுக்கோட்டை நிருபர்)

''யாழ்ப்பாணத்தில் ஊடகத்துறையினருக்கான தேவை அதிகரித்து வருகிறது. இந் நிலையில், தேவையான பயிற்சிபெற்ற ஊடகவியலாளர்களை உருவாக்கும் நோக்குடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையம் ஊடகவியல் தொடர்பான புலமை சார் பயிற்சிநெறிகளை வழங்கிவருகிறது.''

-இவ்வாறு யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கைத் தமிழ் ஊடகமும் தொழில்சார் புலமையும் என்ற பொருளிலான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

ஊடக வளங்கள் பயிற்சிமைய விரிவுரை மண்படத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில்,

எதிர்காலத்தில் ஊடகத்துறையில் நுழைபவர்கள் சர்வதேச தொடர்பாடல் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். பத்திரிகைகளில் கடமையாற்றும் எழுத்தாளர்கள் தமக்குத் தேவையான தகவல்கள் எல்லாவற்றையும் சரியான புள்ளி விபரங்களோடு மடிகணினியில் பதிவுசெய்து வைத்திருத்தல் வேண்டும். இ-மெயில், இன்ரநெற் தொடர்பான பயிற்சியும் புலமையும்பெற்றிருத்தல் வேண்டும்.

முற்காலத்தில் சிங்களம் படித்தால் வேலைவாய்ப்புப் பெறலாம் என்று சொன்னார்கள். லேக்ஹவுஸ் நிறுவனத்தில் பத்திரிகையாளராக சேர்வதற்கு சிங்கள மொழியறிவு தேவைப்பட்டது. இன்று சர்வதேச தொடர்பு மொழியான ஆங்கிலத்தில் புலமை இல்லாதவர்கள் ஊடகத்துறையில் திறமையாகப் பணியாற்றமுடியாத நிலை தோன்றியுள்ளது.

இன்று ஊடகக் கல்வி பாடசாலைகளில் தரம் 10, 11 மாணவர்களுக்கு தெரிவுப்பாடங்களில் ஒன்றாகக் கற்பிக்கப்படுகிறது. கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த வருடம் ஊடகக் கல்வி ஆரம்பித்துவைக்கப்பட்டது. இந்த வருட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஊடகவியல் பாடத்தில் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புக்காக ஊடகக் கல்வி ஒரு பாடமாக உள்ளது. ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் 2004ஆம் ஆண்டிலிருந்து இதழியல் டிப்ளோமா கற்கை நெறியினை நடத்திவருகிறது. தற்போது பகல் நேர, பகுதி நேர வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணத்துக் கல்விப்புலம் தொடர்பாக பின்நோக்கிப் பார்க்கின்றபோது கல்வித்துறை சார்ந்தவர்கள் எந்தத் தவறும் இழைக்கவில்லை. இடப்பெயர்வுகளின் போது கூட அதிபர்கள் தாம்இடம்பெயர்ந்த இடங்களில் பாடசாலைகளை நடத்தி எமது பிள்ளைகள் கல்வி பெற உதவியிருக்கிறார்கள்.

தமிழர் அரசியலைப் பொறுத்தவரை பின்நோக்கிப் பார்த்தால் அது துன்பகரமாகவே உள்ளது. தமிழ் அரசியல் தலைமைகள் என்ன செய்தார்களோ தெரியாது. நான் அரசியல்வாதி அல்ல. அரசியலில் ஈடுபடப் போவதுமில்லை. கல்வித்துறை சார்ந்தவன் நான். எனவே, கல்வித் துறை சார்ந்த பணியை சரியாக முன்னெடுத்துச் செல்வதே எனது பணியாகும்.

நாவலர் பரம்பரையில் வந்தவர்கள் நாங்கள். தமிழ் மொழியை எழுத்துப் பிழையின்றி இலக்கணத் தூய்மையோடு எழுதவேண்டும் என கேட்டுக்கொண்டார். யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் ச. கதிர்காமத்தம்பி 'ஊடகத்துறை வளர்ச்சிப் போக்கு' என்னும் தலைப்பிலும், ஓய்வுபெற்ற பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கையாளர் செல்லப்பா நடராசா 'ஊடகவியலாளர் பணிப் பண்புகள்' என்ற தலைப்பிலும், யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் ம. கணேசலிங்கம் 'ஊடகமும் செய்திகளின் நம்பிக்கைத் தன்மையும்' என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்தினர்.

## தையல் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி,

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் தையல் பயிற்சிக்கு மகளிரை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு ஒப்படைக்கும்படியும், நவீனமுறையில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் சங்கத் தலைவி திருமதி. லோ. நவரட்ணம் அறிவித்துள்ளார்.

## விண்ணப்பம் கோரல்

(வட்டுக்கோட்டை நிருபர்)

இலங்கை காணி சீரமைப்பு மற்றும்அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் பொறியியலாளர் தரம் - 2, பொறியியலாளர் உதவியாளர் தரம் - 3, உதவி முகாமையாளர் (களஞ்சியம்) ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்களைக்கோரியுள்ளது.

குடிசார் எந்திரவியல் விஞ்ஞான இளமாணிப் பட்டம் பெற்றவர்கள் பொறியியலாளர் தரம்- 2க்கும், தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள் பொறியியல் உதவியாளர் தரம் -3க்கும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் வேலையுடன் தொடர்புடைய துறையில் 6 வருட தொழிற்தகைமை அனுபவம்உள்ளவர்கள் உதவி முகாமையாளர் பதவிக்கும் விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரக் கோவை, சான்றிதழ்களின் பிரதிகள் என்பவற்றை பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளப் பிரிவு), இலங்கை காணி சீரமைப்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், இலக்கம் 03 ,ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாவத்தை, வெலிக்கடை, இராஜகிரிய என்ற முகவரிக்கு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

## சகல பாடங்களிலும் அ தரச் சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவன்

யாழ்ப்பாணம், வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் முதன்மைப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் சென்ற வரும் நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சையில் செல்வன் திருமூர்த்தி சேந்தன் சகல பாடங்களிலும் அதிவிசேட சித்தி (9 அ) பெற்றுள்ளார்.

இப்பாடசாலை கல்விச் செயற்பாட்டிலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் பல்வேறு சாதனைகளைப் புரிந்துவந்த போதும் க.பொ.த. (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளில் சகல பாடங்களிலும் அதிவிசேட சித்திகளை ஒரு மாணவரும் பெறாதிருந்தமை பெருங்குறையாக இருந்தது. இக்குறையும் செல்வன் தி. சேந்தனால் நிவர்த்திக்கப்பட்டமை குறித்து மெய்கண்டான் சமூகத்தினர் பெருமிதமடைவதாக அதிபர் தெரிவிக்கின்றார்.

தரம்- 1 முதல் தரம் -11 வரை பண்ணாகம் - மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற பண்ணாகத்தைச் சேர்ந்த இம் மாணவனின் பெற்றோரும் இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் என்பதுடன் பட்டதாரியான இவரது தாயார் திருமதி. ஜெயமலர் திருமூர்த்தி இப்பாடசாலையில் ஆசிரியையாகப் பணியாற்றியுள்ளார்.



பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் உப அதிபர் சி.சிவஞானசுந்தரம், அதிபர் ச.திரவியராசா, பிரதி அதிபர் கி.குகநாதன், உபஅதிபர் திருமதி அனுசூயா சற்குணசிங்கம் ஆகியோர் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினர் உரையாற்றுவதையும் வெற்றிபெற்ற மாணவர் ஒருவருக்கு பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசறை பிரதேச சபையில் காதர், ஞானதிலகவுக்கு தலா இவ்விரு வருடங்கள் தலைமைப் பதவி

## ஆட்சி மாற்றம் குறித்த நடவடிக்கைகள் பயனளிக்கவில்லையாம்

(பதுளை, பண்டாரவளை மேலதிக நிருபர்கள்)

பசறை பிரதேச சபையின் ஆட்சி மாற்றம் குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பயனளிக்காத நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியே, பசறை பிரதேச சபையின் ஆட்சியை அமைக்கவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ் ஆட்சி பிரகாரம் இருபது வருடங்களுக்கு மேலாக அரசியல் அனுபவமுள்ளவரும் ஏற்கனவே பசறை பிரதேச சபையில் பிரதித் தலைவராகவும் சபை உறுப்பினருமாக இருந்த செல்லையா பத்மநாதன் மீண்டும் பசறை பிரதேச சபையின் பிரதித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் சபையின் தலைவர் தொடர்பான இழுபறி நிலைக்கு உறுதியான தீர்வினை பசறை தொகுதி ஐ.தே.க. அமைப்பாளர் க. வேலாயுதம் ஏற்படுத்தியுள்ளார்.

அதனடிப்படையில், பசறை பிரதேச சபைக்கான தேர்தலில் 3612 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்த ஏ.எம். காதர், 2480 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்த ஆர்.எம். ஞானதிலக ஆகிய இருவருக்குமிடையேயிருந்து வந்த கடும் போட்டி முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மேற்கண்ட இருவருக்கும் தலா இவ்விரு வருடங்கள் என்றடிப்படையில் தலைமைப் பதவி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆர்.எம். ஞானதிலக, பிரதேச சபையின் ஆட்சி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் இருக்கும்போது எதிர்க்கட்சியில் இருந்து வந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், முஸ்லிம் இனத்தவரொருவர் பசறை பிரதேச சபையின் தலைவராக இரு வருடங்கள் பதவியேற்கவுள்ளமை இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கூட்டொப்பந்த பேச்சுவார்த்தை

(பண்டாரவளை மேலதிக நிருபர்)

தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பில் முதலாளிமார் சம்மேளனத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பேச்சுவார்த்தைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தோட்ட தொழிற் சங்க கூட்டமைப்பு என்பவற்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் காலாவதியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புற்று நோயாளர்கள் மரணத்தின் வாயிலிலேயே எம்மை சந்திக்கின்றனர்

## விஷேட வைத்திய நிபுணர் அநுருத்த கூறுகிறார்

(பண்டாரவளை மேலதிக நிருபர்)

புற்று நோயாளர்கள் பொதுவாக மரணத்தின் வாயிலிலேயே எம்மை சந்திக்கின்றனர். இதனால் அவர்களுக்கு உச்சக்கட்ட சிகிச்சை அளிக்கும் வாய்ப்பு குறைவாகவே காணப்படுகிறது.

நோயின் ஆரம்பத்தில் இவர்கள் எம்மிடம் வருவார்களாயின் நோயை கட்டுப்படுத்த முடியும் என்று பதுளை புற்று நோய் சிகிச்சைப் பிரிவு விஷேட வைத்திய நிபுணர் அநுருத்த தெவரப்பெரும தெரிவித்தார்

புற்றுநோய் தொடர்பாக மக்களை விளிப்பூட்டும் வகையிலான கண்காட்சியொன்று எதிர்வரும் 28ஆம் திகதி முதல் ஏப்ரல் மூன்றாம் திகதி வரை இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பதுளை பொது வைத்தியசாலை புற்று நோய் சிகிச்சைப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள புற்று நோயை வெற்றிக் கொள்வது எவ்வாறு? என்ற கருப்பொருளில் இடம் பெறவுள்ள கண்காட்சி தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

பணிப்பாளர் ஏ.எல்.எம். நஸீர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் காணப்படும் வாய்ப்புற்று நோயைவிட வித்தியாசமான ஆபத்தான வாய்ப்புற்று நோயொன்று பதுளைப் பகுதிகளில் காணப்படுகிறது. இந்தப் புற்று நோயானது இளைஞர்கள் மத்தியிலேயே அதிகம் காணப்படுகிறது.

புற்றுநோய் சாதாரணமாக 50 வயதை தாண்டியவர்களையே தாக்கும். ஆனால் இங்கு 40 வயதுக்குட்பட்டவர்கள் நோயினால் பாதிக்கப்பட்டு இருப்பதைக் காண முடிகிறது.

அதுமட்டுமன்றி தோட்ட பிரதேசங்களில் வாய்ப்புற்று நோயாளர்களின் தொகை அதிகரித்து வருகிறது. ஆனால் அவர்கள் சிகிச்சைக்கு வருவதில்லை. அவர்கள் வீடுகளிலேயே முடங்கி காணப்படுகின்றனர்.

அவர்களுக்கு நோய் தொடர்பில் கூடுதல் தெளிவு இல்லை. சிலர் நோய் எது என தெரியாமலேயே உயிரிழந்து விடுகின்றனர்.

இவ்வாறு இந்த நோய் தொடர்பில் மக்களை விளிப்பூட்டும் வகையில் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் ஏப்ரல் மூன்றாம் திகதிவரை பதுளை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் கண்காட்சியொன்றை ஏற்பாடு செய்துள்ளோம்.

இதனைப் பார்வையிடுவதன் மூலம், மக்கள் புற்றுநோய் தொடர்பில் தெளிவு பெறக் கூடியதாக இருக்கும் என்றார்.

# லிபியா மீது அமெரிக்க கூட்டுப் படைகள் மேற்கொள்ளும் தாக்குதல் கண்டிக்கத்தக்கது

## அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி

(சம்மாந்துறை மேலதிக நிருபர்)

லிபியா மீது அமெரிக்க கூட்டுப்படைகள் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும். மனித நேயம் கொண்ட சகல தரப்பினரும் மிலேச்சத்தனமான இத்தாக்குதலை எதிர்த்து உரத்துக் குரல் கொடுக்க வேண்டும். இவ்வாறு அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி, லிபியா மீதான அமெரிக்க கூட்டுப்படைகளின் தாக்குதலைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் அரசியல் பிரிவான மேற்படி பொது ஊழியர் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் எஸ். லோகநாதன், செயலாளர் ஐ. எம். இப்றாலெவ்வை ஆகியோர் ஒப்பமிட்டு இந்த அறிக்கையை விடுத்துள்ளனர்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"லிபிய மக்களைப் பாதுகாப்பதற்காகவே தமது நடவடிக்கையெனக் கூறிக் கொண்டு மக்களை அழிக்கும் செயலாகவே அமெரிக்க ஏகாதிபத்திய கூட்டுப்படைகளின் தாக்குதல்கள் அமைந்துள்ளன. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் அனுமதியுடனான நடவடிக்கையென்ற முகமூடியை அணிந்து கொண்டு அமெரிக்காவும் அதன் உற்ற நண்பர்களான பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளின் கூட்டுப்படைகள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் காட்டுமிராண்டித்தனமானதாகும்.

லிபிய வளங்களைச் சூறையாடவும், தமது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை மேற்கொள்ளவும் இந்தத் தாக்குதல்கள் மூலம் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் முனைந்துள்ளமை உலகமறிந்த உண்மையாகும். மனித உரிமைகள் பற்றியும், மனித நேயம் என்பவற்றையிட்டும் குரல் கொடுப்பதாகப் பாசாங்கு செய்து உலகை ஏமாற்றிக் கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதன் நேச நாடுகளும் அதன் நடவடிக்கைகளுக்கான பிரதிபலனை அனுபவிக்க வேண்டிய நிலைமை விரைவில் உருவாகியே தீரும்.

லிபியாவில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சி அவர்களது உள்நாட்டு விவகாரமாகும். அதனை அவர்களே தீர்த்துக் கொள்ள வாய்ப்பளிப்பது அவர்களது இறைமைக்குக் கொடுக்கும் கௌரவமாகும். ஆனால் 'உலகப் பொலிஸ்காரன்' என அகந்தை கொண்ட அமெரிக்கா லிபிய நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையில் மூக்கை நுழைத்துக் கொண்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

# கஞ்சா வைத்திருந்த நபருக்கு 9,900 ரூபா அபராதம் விதிப்பு

(நாவிதன்வெளி நிருபர்)

இரண்டு கட்டு (5 கிராம்) கஞ்சா வைத்திருந்தவருக்கு கல்முனை நீதிவான் நீதிமன்றத்தால் இரண்டு மாத கடூழியச் சிறைத் தண்டனையும், ஒன்பதாயிரத்து தொளாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக மருதமுனை பிரதேசத்தில் கஞ்சா விற்பனை செய்துவந்த மேற்படி நபர் பல தடவைகளில் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை பெற்று வந்துள்ளதாக கல்முனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எஸ்.எம். சதாத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கல்முனை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கல்முனை நிதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோதே நிதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.எம். ரிஸ்வி, மேற்குறித்த தண்டனையை வழங்கினார்.

அபராதப் பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் ஒரு மாத காலம் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென நீதிபதியினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தேசிய டெங்கு வாரம் 23 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஆரம்பம்

மண்டூர்,

தேசிய டெங்கு வாரம் கடந்த 23 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆரம்ப தினத்தன்று அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் சோதனையிடப்பட்டன.

நுளம்பு பெருகுவதற்கு அதிக வாய்ப்பு உள்ள டயர் கடைகள், டயர் மீள் நிரப்பு நிலையங்கள், பஸ் டிப்போக்கள் என்பன நேற்று வியாழக்கிழமை சோதனையிடப்பட்டன.

இன்று வெள்ளிக்கிழமை பாடசாலைகளிலும் நாளை சனிக்கிழமை வீடுகளிலும் சோதனை இடப்படுவதுடன் 27 ஆம் திகதி பொது இடங்கள், மயானங்கள், நகரங்கள் முதலிய இடங்கள் துப்புரவு செய்யப்படும்.

புகையிரதப் பாதைகள், ஆறுகள், உரிமை கோரப்படாத நிலங்கள் என்பன 28 ஆம் திகதியும் வழிபாட்டுத்தலங்கள், முன்பள்ளிகள் என்பன 29 ஆம் திகதியும் சோதனையிடப்படவுள்ளன.

கடந்த 3 மாதத்துள் 2546 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டு அவர்களுள் 27 பேர் இறந்துள்ளனர். மேல் மாகாணத்திலேயே அதிகூடிய நோயாளர்கள் இனம் காணப்பட்டனர். அதில் 1328 பேர் அடங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் கற்போம்

பிரதேச சபை - பிரதேசியசபாவ

நகர சபை - நகர சபாவ

மாநகர சபை - மாநகர சபாவ

பாராளுமன்றம் - பார்லிமெந்துவ

மாகாண சபை - பலத் சபாவ

பிரதேச சபை உறுப்பினர்கள் - பிரதேசிய சபாவ மந்திரிதுமா

நகரசபைஉறுப்பினர்கள்-நகரச பாவ மந்திரிதுமா. இப்படியே ஏனைய சபை உறுப்பினர்களை யும் அழைப்பர்.

முதலமைச்சர் - பிரதான எமதி

அமைச்சர் - எமதிதுமா அல்லது மந்திரிதுமா

பிரதி அமைச்சர் - நியோஜ எமதி

பிரதமர் - அகமதி

சபாநாயகர் - கதாநாயக துமா

பிரதி சபாநாயகர் - நியோஜ கதா நாயகதுமா

எதிர்கட்சித் தலைவர் - விபக்ச நா யகத்துமா. இவைகள் அரசியல் ரீதியில் பயன்படுத்தும் சொற் களாகும்.

**இனி காலங்கள் பற்றி பார்ப்போம்**

அதிகாலை-உதேமாந்தர

காலை-உதே

மதியம்-தவாலய

பிற்பகல்-பஸ்வரு

மாலை-அவச

இரவு- ராத்திரிய

நள்ளிரவு-மத்திம ராத்திரிய

நேரத்திற்கு-வெலாவட்ட

பிந்தி-பானுவெலா

சரியான நேரம்-ஹரிவெலவா

கெட்டநேரம்-நரக்க வெலாவ

படிக்கின்ற காலம்-இகென காலய

சண்டைக்காலம் - ரண்டுகாலய

விடுதலைக்காலம் - நிதாஸ்கா லய

சமாதான காலம்-சமாதான காலய

பயிற்சிக்காலம் - புகுனுக்கிரிய காலய

மாரி காலம்-வெசிக் காலய.

**மீண்டும் அடுத்த பாடத்தில் சந்திப்போம்**

● வேலு. ஸ்ரீவராஜா

---

கொஞ்சம் சிந்தித்துப் பார்
உன் வாழ்வுக்கு பின்னே
என் காதலின் ஆழம்
புரியும்
* * * * *
முரசறைந்துவிட்டு
ஊமையாய் மாள்கிறேன்
இந்த காதல்
உலகத்தை உலுக்குகிறது

என் இதயத்தில்
அனுமதியில்லாமல்
குடியிருந்தவளே!
நீ சென்ற பின்பு
வேறொருத்திக்கு
இடம் கொடுக்க
காதல் ஒன்றும்
போலியல்ல

வே.வே.அகிலேஸ்வரன்

---

# SPOKEN ENGLISH

## Conversation (உரையாடல்)

இரு நண்பர்களான ரஜீவனும் முகுந்தனும் ஒரு சனிக்கிழமை காலை வீதியில் சந்திக்கின்றனர். அவர்களுக்கிடையில் இடம்பெறும் உரையாடல்.

Two Friends namely Rajeevan and Muhundan meet each other on the road on a Saturday morning and start conversing.

ரஜீவன்: காலை வணக்கம் முகுந்தன். இன்று பிற்பகல் ஏதேனும் நிகழ்ச்சிகள் உனக்கு இருக்கின்றனவா?

*Rajeevan: Good Morning Muhundan. Do you have any programme in the afternoon today?*

முகுந்தன்: ம்..ம்..... உண்மையில் இன்று பிற்பகல் நான் ஓய்வாக இருப்பேன்.

*Muhundan: m..m... actually I will be free this afternoon.*

ரஜீவன்: நல்லது. இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற இருக்கும் ஆங்கில நாடகத்திற்குச் செல்வதற்கு விருப்பமா?

*Rajeevan: Then it fine. would you like to go to an English Drama with me the in the evening at the University Kailasapathy Auditorium Jaffna.*

முகுந்தன்: என்ன நாடகம்?

*Muhundan: What is the Drama?*

ரஜீவன்: இது ஒரு சேக்ஸ்பியரின் நாடகம்.

*Rajeevan: It's a Shakespear's Play.*

முகுந்தன்: எனக்கு இந்த ஆங்கில நாடகத்தில் விருப்பம் இல்லை.

*Muhundan: I am not interested in such English Plays.*

ரஜீவன்: ஆகவே, இன்று மாலை என்ன செய்யப்போகிறாய்?

*Rajeevan: So! What are you going to do this evening?*

முகுந்தன்: நான் இன்று வீட்டிலிருந்து தொலைக்காட்சி பார்க்கப்போகிறேன்.

*Muhundan: I'd rather stay at home and watch television.*

ரஜீவன்: ஏன், இன்றைய நாளில் ஏதேனும் நல்ல நிகழ்ச்சிகள் இருக்கின்றனவா?

*Rajeevan: Why! Are there going to be any good Programme this evening?*

முகுந்தன்: ஆம். இன்று இந்தியா மற்றும் தென் ஆபிரிக்கா நாடுகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது.

*Muhundan: Oh, yes. live telecast of the cricket between India and South Africa will be on the TV.*

ரஜீவன்: சரி, உனக்கு கிரிக்கெட் போட்டி பார்ப்பதில் விருப்பம். ஆகவே, நான் இன்னொருவருடன் போகிறேன்.

*Rajeevan: Then. it's Okay. you'd better watch the cricket on TV. I will find someone else to go with me.*

முகுந்தன்: தயவுசெய்து உன்னுடன் வராததற்கு என்னை தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம்.

*Muhundan: Please, Don't miss understand me for not joining you.*

ரஜீவன்: ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று விருப்பம். நேரம் செல்கின்றது. ஆகவே, நாங்கள் பின்னர் சந்திப்போம்.

*Rajeevan: It's taste differs. Everyone has his/her own taste. It's getting late, dear! We will meet again. see you! good bye!*

முகுந்தன்: போய் வருக.

*Muhundan:Good bye!*

எஸ். சிவசுப்பிரமணியம்
முன்னாள் வருகை தரு விரிவுரையாளர்
யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெயார் கலரிங்



'ஹெயார் கலரிங்' என்பது பேஷன் உலகில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஒரு விஷயமாக இன்று உருவாகிவிட்டது. சிலர் தங்கள் கூந்தலுக்கு அழகு சேர்ப்பதற்காகவும், சிலர் தங்களின் நரைமுடிகளை மறைப்பதற்காகவும் ஹேர் கலரிங் செய்கின்றனர். ஒருவரின் தோற்றத்தை வேகமாக மாற்றுவதற்கான சிறந்த வழி ஹெயார் கலரிங். தற்போது ஹெயார் கலரிங், பலதரப்பட்ட கூந்தல் தன்மைகளுக்கு ஏற்ப, பல்வேறு வண்ணங்கள் மற்றும் தரங்களில் கிடைக்கின்றன.

**'ஹெயார் கலரிங்' வகைகள்:**

ஹெயார் கலரிங் செய்வதற்காக பயன்படுத்தப்படும் வண்ணங்கள், திரவம், பவுடர், ஒயில் கிறீம்கள் மற்றும் ஜெல்கள் உட்பட பல வகைகளில் கிடைக்கிறது. நிரந்தர ஹெயார் கலரிங் செய்வதற்காக ஜெல் மற்றும் பிற பொருட்கள் ஆகியவையும், தற்காலிக மற்றும் குறிப்பிட்ட காலம் நிரந்தரமாக இருக்கும் செமி-பெர்மனன்ட் கலரிங் செய்வதற்காக, மஸ்காரா, கிரேயான்ஸ் மற்றும் வண்ண கூந்தல் ஸ்பிறேக்கள் ஆகியவை பயன்படுத்தப் படுகின்றன.

கூந்தலின் நீளத்தைப் பொறுத்து, அதற்கு ஹெயார் கலரிங் செய்வதற்கான செலவும் ஏற்படும். குட்டையான மற்றும் நடுத்தர அளவிலான கூந்தல் வகைகளுக்கு, 'ஹெயார் கலரிங்' செய்தால், மிக அழகாக தோற்றமளிக்கும்.

'ஹெயார் கலரிங்' செய்பவர்கள், நிரந்தமாக செய்துகொள்வதா அல்லது தற்காலிகமாக செய்துகொள்வதா என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நரை முடியை மறைப்பதற்காக ஹேர் கலரிங் செய்ய விரும்புபவர்கள், நிரந்தமான ஹெயார் கலரிங் முறையை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மேலும், ஒட்டுமொத்த கூந்தலையும் ஹெயார் கலரிங் செய்துகொள்வதா அல்லது ஹைலைட் மட்டும் செய்துகொள்வதா என்பதையும் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

**ஹெயார் கலரிங் முறைகள்:**

ஹைலைட்டிங், ஸ்ட்ரீக்கிங், பிராஸ்டிங், பிங்கர் பெயின்ரிங் ஆகியவை ஹெயார் கலரிங் செய்யப்படும் பல்வேறு முறைகள். ஆனால், இன்றைய நவீன இளைஞர்கள் பொதுவாக, ஹை லைட்டிங் மற்றும் ஸ்ட்ரீக் கிங் ஆகியவற்றையே விரும்புகின்றனர். கூந்தல் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு வண்ணங்கள் பூசப்படுவதற்கு 'ஹைலைட்டிங்' என்று பெயர். பிறவுண் மற்றும் கோல்டன் நிறங்கள் மாநிற சருமத்தினருக்கும், சிவப்பு நிறம் நல்ல வெண்மையான சருமத்தினருக்கும் பொருத்தமாக இருக்கும் என நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

ஹெயார் கலரிங் கூந்தலில் நீண்ட நாட்கள் இருக்க வேண்டும் என விரும்புகிறவர்கள், கொப்பர் அல்லது சிவப்பு நிற கலரிங் செய்வதை முடிந்த வரை தவிர்க்கலாம். ஏனென்றால், இவை விரைவில், வெளிறிவிடும் தன்மை கொண்டது. ஹெயார் கலரிங் செய்த பின், அதற்கென தகுந்த ஷாம்பு மற்றும் கண்டிஷனர்களையே பயன்படுத்த வேண்டும். ஹெயார் கலரிங் செய்த பின், எவ்வாறு கூந்தலை பராமரிப்பது என்பதற்கு, கூந்தல் சிகிச்சை நிபுணரிடம் ஆலோசனை பெற்று செயல்படலாம். ஹெயார் கலரிங் செய்வதற்கு பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்கள் நல்ல தரமானவை தானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது. நிரந்தரமான, வளமான தலைமுடி வேண்டும் என விரும்புவோர் 'ஹேர் கலரிங்' ஆசைக்கெல்லாம் அடிபணியக் கூடாது.

**மினுமினுப்பான கழுத்துக்கு....**

சிலர் பார்க்க அழகாக இருப்பார்கள். ஆனால், அவர்களது கழுத்துப் பகுதி மட்டும் கறுத்துப்போய் காணப்படும். வெயிலில் அலைவது கூட இதற்கு காரணமாக இருக்கலாம். அதனால், முகத்திற்கு பயன்படுத்தும் மேக் - அப்பை கழுத்து பகுதிக்கு சேர்த்துப் போடுவது நல்லது.

**அதற்கு சில டிப்ஸ்:**

- கோதுமை மா, ஓட்ஸ் பவுடர், பாசிப்பயறு மா - இந்த மூன்றையும் சமமாக எடுத்து பாலுடன் திக்காக குழைத்துக்கொள்ளவும். அதை கழுத்தில் தடவி சில நிமிடங்கள் மசாஜ் செய்து 20 நிமிடம் அப்படியே விட்டுவிடுங்கள். பிறகு கழுவிக் கொள்ளவும்.
- பப்பாளிப் பழத்தின் தோல், எலுமிச்சை பழத்தோல், ஆரஞ்சு பழத்தோல் - இதில் ஏதாவது ஒன்றை நன்றாக அழுத்தி கழுத்தில் தேய்க்கலாம்.
- முட்டைக்கோசை அரைத்து அந்த சாறையும் கறுப்பாக நிறம் மாறிய கழுத்தில் தேய்க்கலாம். இதனுடன் சிறிது தேன் அல்லது எலுமிச்சை சாறு கலந்து தேய்ப்பது கழுத்து கருமையை போக்குவதோடு மினுமினுப்பையும் தரும்.
- பயத்தம் மா, ஒலீவ் ஒயில், ரோஸ் வோட்டர் - இவற்றை ஒன்றாகக் கலந்து கழுத்தில் பூசினாலும் கருமை நிறம் மறையும்.
- சிலருக்கு செயின் போட்டு, அதனால் பின் கழுத்து கறுத்துப் போய் இருக்கும். அதனை போக்க சிறிது பால், தேன், எலுமிச்சை சாறு கலந்து கழுத்தில் தடவி 10 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் அலசி விடவும். கடலை மா, தயிர் கலந்தும் தடவலாம்.

# நீரிழிவு நோயாளர்களுக்கான உணவு
# 'இவாபம்'

நீரிழிவு நோயாளிகளுக்கான இவாபம் பத்துப் பேருக்களவாக அளவீடு செய்யப்படுகின்றது.

தேவையான பொருட்களும் அளவு விபரமும்

முளைக்கீரை-100கிராம், கடலை-100கிராம்," போஞ்சி-100கிராம், பயறு-100கிராம், கரட்-100கிராம், தக்காளி-100கிராம், அப்பிள்-01, வெங்காயம்-100கிராம், உள்ளி, புளி-50கிராம், மிளகு, சீரகம், வெந்தயம்-தேவையானளவு, உழுத்தும்மா-250கிராம், ஏனையன-100 கிராம், நல்லெண்ணெய்-தேவையானளவு, கறிவேப்பிலை, உப்பு-தேவையானளவு.

**செய்கை முறை:**

கடலை, பயறு இரண்டினையும் முன்னதாக நன்றாக ஊறவிடவும், மிளகு, சீரகம், வெந்தயம் மூன்றையும் நன்றாகப் பொடி செய்துகொள்ளவும். ஏனையவற்றை சிறிது சிறிதாக வெட்டிக்கொள்ளவும். இட்லிச்சட்டியில் நீர் விட்டு நன்றாகக் கொதிக்க வைக்கவும். வெட்டப்பட்ட போஞ்சி, கரட், தக்காளி, வெண்டிக்காய், அப்பிள், உள்ளி, வெங்காயம், கறிவேப்பிலை யாவற்றையும் பொட்டளி செய்து இலேசாகக் கரைத்து வைக்கப்பட்ட உப்பு-புளி கரைசலில் தோய்த்து இட்டலிச் சட்டியில் அவிக்கவும். பின்னர் உள்ளுடனாக்குக.

சூடாக்கப்பட்ட தோசைக்கல்லில் தோசைமாவினை நல்லெண்ணெயோடு வார்த்து உள்ளுடன் வைத்து மீண்டும் அதன் மேலும் தோசை மாவினை வார்த்து புரட்டி எடுக்கவும். இவாபம், தோசையினால் உள்ளுடன் செய்யப்பட்டு தேவையான வடிவங்களுக்கேற்ப தயாரித்து சதுரமாகவோ வட்டமாகவோ முக்கோணமாகவோ எவ்வாறாயினும் பரிமாற வசதியாக ஒரு நேர பரிபூரண உணவாகிவிடும்.

ஆம், சாப்பிடுங்கள். சகல ஊட்டச்சத்துக்களும் 'இவாபம்' உணவில் அடங்கியுள்ளது.

இ-இலைவகை
வா-வாசனைத்திரவியங்கள்
ப-பருப்புவகை,பழவகை
ம்-சகலருக்கும் சம்மதமானது

இஃது ஒரு சிற்றுண்டியாகவும்,காலை உணவாகவும், பயணத்திற்கேற்ப இரவுணவாகவும், மாணவர்களின் மூளை வளர்ச்சிக்கேற்ப உணவாகவும், ஓய்வூதியர்களை உற்சாகப்படுத்துவதாகவும் மொத்தத்தில் சகலருக்குமேற்ற ஒரு பரிபூரண உணவாக 'இவாபம்' இலாபகரமானதாக வெல்லப்படுகிறது. இவாபம்! ஆம்! ஒரு சுகதேகியாக வாழ அது ஓர் புதிய உணவு.

சாப்பிடுங்கள்! சாப்பிடுங்கள்!!

கே.எஸ். சிவஞானராஜா
கொக்குவில்

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1000 நடனக் கலைஞர்கள்

**'ஏழாம்** அறிவு' படத்திற்காகத் தான் எல்லா ஹால்களையும் பிஸியாக வைத்திருக்கிறார்கள். இப்படத்தில் 1,000 நடனக் கலைஞர்களுடன் ஒரு பாடலை அமைக்கப் போகிறார். ஏ.ஆர். முருகதாஸ். 'சந்திரலேகா' படத்தில் தான் இப்படி 'லைவ்' வாக நடனக் கலைஞர்களை வைத்து பிரமாண்டமாக ஒரு பாடல் காட்சியை உருவாக்கினார் அமரர் எஸ்.எஸ். வாசன். அதுபோலவே அமைய வேண்டும் இந்த பாடல் காட்சியும் என்று நினைத்தாராம்.

இவ்வளவு பேரை ஆடவைக்க வேண்டும் என்றால் ரிகர்ஷல் இல்லாமல் நடக்குமா? அதற்காகத் தான் குழு குழுவாகப் பிரித்து சென்னையில் பல இடங்களில் ஆட வைக்கிறார்களாம். இன்னொரு முக்கிய செய்தி. இப்படத்தில் 'நாடோடிகள்' அபிநயா -சூர்யா நடிக்கும் பிளாஷ்பேக் காட்சியில் அவருக்கு ஜோடியாக நடிக்கிறீங்களா? என்று கேட்க ஹோர்ர்ரேய்ய்.. என்று தாவி தாவிக் குதித்தராம் அபிநயா. சின்ன கேரக்டர் தான் என்று முருகதாஸ் சொன்னதையெல்லாம் கேட்கிற நிலையில் இருந்தால்தானே அதெல்லாம் காதில் விழும்?







சினிமா உலகம்

அஷ்வி ராஜ்யம்

# ஓம் சாந்தி

**வைஜெயந்தி** மூவிஸ் சார்பில் அஸ்வினிதத் தயாரிக்கும் படம் 'சக்தி'. தெலுங்கில் ரிலீசாகியுள்ள இந்தப் படத்தை தமிழில் 'ஓம் சக்தி' என்று டப் செய்துள்ளனர். ஜூனியர் என்.டி.ஆர். - இலியானா நடிக்க மெஹர் ரமேஷ் இயக்கி உள்ளார். மணிசர்மா இசை. இதன் பாடல் வெளியீட்டு விழா சென்னையில் நேற்று முன்தினம் நடந்தது. பி.வாசு வெளியிட கே.எஸ். ரவிக்குமார் பெற்றார்.

விழாவில் பிரபு பேசியாவது:- "இந்தப் படம் பிரமாண்ட அரங்குகள் அமைத்து உருவாக்கப்பட்டுள்ளது. அதற்காகவே பல கோடிகள் செலவுசெய்திருக்கிறார் தயாரிப்பாளர். ஒருகாலத்தில் படங்கள் செட்டுகளில் உருவானது. ஏவி.எம் ஸ்டுடியோவுக்குள் வந்தால் ஒருபுறம் எனது தந்தை படம் மறுபுறம் சித்தப்பா எம்.ஜி.ஆர். படம். இன்னொரு புறம் ஜெமினி மாமா, ஜெய்சங்கர் படம் நடந்துகொண்டிருக்கும் மதிய வேளைகளில் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவோம். பிறகு ரஜனி, கமல் காலகட்டம் வந்தது. பிறகு சினிமா அரங்கத்தை விட்டு வெளியே போனது. உறவுகளும் பிரிந்தன. சினிமா மீண்டும் செட்டுகளுக்கு வரவேண்டும். நிறைய படங்கள் செட்டில் எடுக்கவேண்டும். அப்போது மாமன், மச்சான் என்று உறவுகளும் மலரும்." - இவ்வாறு பிரபு பேசினார்.

விழாவில் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் ராம நாராயணன், பிலிம் சேம்பர் தலைவர் கல்யாண், பாடலாசிரியர்கள் நா. முத்துக்குமார், பிறைசூடன், ஸ்டண்ட் சிவா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சினி ...

- 'நஞ்சுபுரம்' பட ஷூட்டிங்கி...
றபோது காட்டுப் பகுதியில் கொ...
தாக இருந்த எறும்புகள் மோ...
கால்களை கடித்து பதம் பார்த்த...
- கிரிக்கெட் பிரியையான பி...
ஹைதராபாத் ஷூட்டிங்கில் இரு...
யா -வெஸ்ட் இண்டீஸ் மேட்ச...
பார்க்க சென்னை வந்தார்.
- சரித்திரக் கதை படத்தில் ...
வேடத்தில் நடிக்கவிரும்புகிறார்...
- சத்தியாராஜ், சாந்தனு நடி...
'ஆயிரம் விளக்கு' அடுத்த மாத...
கிறது.
- 'பாணா காத்தாடி'க்குப் பிற...
பொழுதும் உன் கற்பனைகள்' ...
தில் நடிக்கிறார் முரளி மகன் ...
அவருக்கு ஜோடியாக அமலா...
இது முழு நீள ரொமான்டிக் கதை...
- தான் நடிக்கும் '...ன்மார்' தெ...
பட ஆடியோ விழாவில் நடன...
ஒப்புக்கொண்டுள்ளார் த்ரிஷா
- இந்திரா காந்தி போன்ற தலை...
போல் நடிப்பது தான் சவா...
சில்க் ஸ்மிதா போன்ற நடி...
வேடத்தில் நடிப்பது வித்...
னுக்கு சுலபமாம்.
- 2010 ஆம் ஆண்டின் இந்தியா...
நிகோல் பரியா. ரஜனியை ...
நேரில் விருப்பம் தெரிவித்திரு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்ஸ்

...டிங்கிற்குச் சென்
...் கொத்து கொத்
... மோனிகாவின்
...ார்த்தன.
...ன பிரியாமணி
...் இருந்து இந்தி
...மட்ச்சை நேரில்

...தில் இளவரசி
...கிறார் சமந்தா.
...ு நடித்துள்ள
... மாதம் ரிலீசா

... பிறகு 'முப்
...னகள்' படத்
...கன் அதர்வா.
...அமலா பால்.
...க் கதையாம்.
...' தெ...ங்குப்
...நடனம் ஆட
...ரிஷா
... தலைவர்கள்
... சவாலானது.
... நடிகைகள்
... வித்யாபால

...இந்திய அழகி
...யை நேரில்
...த்திருக்கிறார்.




# நீண்ட இடைவெளிக்குப் பின்

**நீண்ட** இடைவெளிக்குப் பிறகு 'அகிலா' என்ற படத்தை இயக்கிறார். ஆர்.கே. செல்வமணி. இதில் ஆனந்தன் என்ற வழக்கறிஞர் ஹீரோ. பெங்களூர் மாடல் ஹர்தாசா ஹீரோயின். பஞ்சு அருணாசலம் பாடல்கள் எழுதுகிறார். ஆதித்யன் இசை,கணேஷ்ராம் ஒளிப்பதிவு.

படம் ப்ற்றி ஆர்.கே.செல்வமணி கூறியதாவது ,அரசுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நசுக்கப்படும் அப்பாவி மக்கள் பற்றிய கதை. எனது முந்தைய படங்க ள் போன்று இதுவும் நிஜ சம்பவங்களின் அடிப்படையிலானது. அந்த சமயம் எது என்பதை இப்போது சொல்ல முடியாது. முதல் கட்டமாக சென்னையில் படப்பிடிப்பு தொடங்குகிறது. இரண்டாவது கட்ட படப்பிடிப்புக்கள் மேற்கு வங்கம், உத்ராஞ்சல், ஜார்கண்ட் பகுதிகளில் நடக்கிறது.



ஓம் சக்தி

# ரஹ்மானை கொப்பியடித்த கத்தரினா

**ஸ்லம்டாக்** மில்லியனேர் படத்தில் தான் இசையமைத்த பாடலை கத்தரினா கைப் தோன்றும் விளம்பரத்தில் பயன்படுத்தியதை எதிர்த்து வழக்குத் தொடரவுள்ளார்.

பிரபல இந்திய நடிகை கத்தரினா கைப் நடித்த விளம்பரப்படமொன்று சமீபத்தில் ரிலீசானது. இதில் ஸ்லம்டாக் மில்லியனேர் பாடலைப் பயன்படுத்தி இருந்தனர். இந்த விளம்பரத்தைப் பார்த்த இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் அதிர்ச்சியடைந்தார். காரணம், பாடலின் முழு உரிமையையும் ரஹ்மனிடம் தான் உள்ளது.

இதை எந்த வகையில் பயன்படுத்த வேண்டும் என்றாலும் அவரது அனுமதி அவசியம். ஆனால், கத்தரினா விளம்பரத்தை உருவாக்கியவர்கள் எந்த அனுமதியையும் பெறவில்லை.

இதையடுத்து அந்த விளம்பரத்துக்கு எதிராக வழக்கு தொடர ஏ.ஆர். ரஹ்மான் முடிவு செய்துள்ளார். இது பற்றிய சட்ட விவகாரங்களை கவனிக்கும் படி தனது வக்கீல்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ரஹ்மான் தரப்பில் இதுபற்றிக் கூறும்போது விளம்பரப் படத்தை தயாரித்தவர்களிடம் எனது வக்கீல்கள் தொடர்புகொண்டு விளக்கம் கேட்டுவருகிறார்கள். விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நடவடிக்கை கத்தரினாவுக்கு எதிரானதல்ல. கொபிரைட் உரிமையை மீறும் வகையில் இந்த விளம்பரம் தயாரித்தவர்கள் மீதுதான் என்றார்.

கத்தரினாவும் ஏ.ஆர். ரஹ்மானும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு நிதிதிரட்ட ஆல்பம் ஒன்றில் பணியாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.



## 'சண்டக் கோழி - 2 ' ஆம் பாகம் விரைவில்...

**புனித்** ராஜ்குமார் நடிக்கும் கன்னடப் படத்தை இயக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார் கவுதம் மேனன். தமிழ், இந்தி என பல்வேறு மொழிப்படங்களில் வில்லன் வேடங்களிலும் சண்டைக் காட்சிகளிலும் நடித்த அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பாப் கிரிஸ்டோ நேற்று முன்தினம் காலமானார். விஷால் 'சண்டக் கோழி' படத்தின் 2ஆம் பாகம் உருவாகிறது. ஹீரோ, இயக்குனர், இசையமைப்பாளர் என முதல் பாகத்தில் பணியாற்றயவர்களே மீண்டும் இணைகிறார்கள். உதவி இயக்குனராக இருந்தபோது எஸ். ஏ. சந்திரசேகரன் நிறைய அட்வைஸ் செய்வதர். அது எல்லாம் இப்போது உதவுகிறது என பூரிக்கிறார் இயக்குனர் ஷங்கர். 'மகிழ்ச்சி' படம் இயக்குய கவுதமன் அடுத்து 'பேரன்பு' படத்தை இயக்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை - இந்திய மக்களின் உறவுப் பாலமாக கச்சதீவு

அரசியல்வாதிகளால் இரு நாடுகளுக்கும் இடையில் சர்ச்சைக்குரிய பிரதேசமா? உறவுப்பாலமா? என்பதை உறுதிப்படுத்த முடியாத நிலையில் கச்சதீவு இருந்துவருகிறது. புனித அந்தோனியார் ஆலயத்தின் மூலம் இலங்கை - இந்திய மக்களின் உறவுப் பாலமாக கச்சதீவு விளங்கிவருகிறது.

இம்முறை இப் பெருவிழாவில் இலங்கை, இந்திய மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டனர்.

இடைக்காலத்தில் நாட்டுச்சூழல்களால் மக்களின் வரவு பெரிய அளவில் இல்லாதிருந்தது. யுத்தத்தின் பின்னர் முதன்முறையாக இலங்கை, இந்திய மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்ட உற்சவமாக இம்முறை உற்சவம் கணிக்கப்படுகின்றது. சுமார் 3 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இதில் கலந்துகொண்டனர். இலங்கை மக்களை விட இந்திய மக்கள் இதில் அதிகமாகும்.

பிரார்த்தனைகளில் அனைத்து மக்களுமே ஈடுபட்டபோதும் இரு நாட்டு மக்களும் ஒருவருடன் ஒருவர் பரஸ்பரம் நட்புறவு பூணுவதிலும் ஆர்வம் காட்டினார். இம்முறை இந்தியத் தரப்பில் இருந்து அந்த நாட்டுப்பொருட்கள் வரவில்லை. கடுமையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் இதனால் தாங்களைப் பொருட்கள் எடுத்துவர அனுமதிக்கப்படவில்லை எனவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். இங்கிருந்து சென்றவர்களும் பெரிய அளவில் எதனையும் எடுத்துச்செல்லவில்லை. அதனால், பண்டமாற்றுக்கள் எதுவும் பெரிதாக இடம்பெறவில்லை.

இலங்கை மக்கள் எவ்வித தடைகள், கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படாதபோதும் பெருமளவு பொருட்களைக் கொண்டுசெல்வதில் ஆர்வம் காட்டவில்லை. ஒருசிலர் தம்முடன் 'ராணி சோப்' போன்றவற்றை எடுத்துச்சென்றனர். நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தற்காலிகமாக விற்பனை நிலையம் ஒன்றை அமைத்திருந்தது. இந்திய மக்கள் தாம் விரும்பிய பொருட்களை அங்கு வாங்கிக் கொண்டனர். இந்திய சாரங்கள் விற்பனைக்கு இருந்தன. எனினும், இலங்கை மக்கள் அதைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. காரணம், அவற்றின் விலை அதிகப்படியானவை என்பதனாலாகும்.

> இருநாட்டு மக்களின் சுமுகமமான உறவு நிலை பலமாக அமையவும், இந்த புனித பூமியில் கூடியுள்ள மக்கள் கடந்த கால கசப்புணர்வுகளை மறந்து புதிய வாழ்க்கைக்கு மாறவும், கோடி அற்புதரின் ஆசி வேண்டி இருநாட்டு குருமார்களும் திருப்பணிப் பூசையை ஒப்புக்கொடுத்தனர்.

உணவுப் பொருட்களின் விலைகள் கொஞ்சம் அதிகம் என இந்திய பக்தர்கள் விசனப்பட்டனர். எனினும், இந்தப் பொருட்களை இங்கு கொண்டுவருவதில் உள்ள சிரமங்களையும் யாழ்ப்பாணத்து விலைகளையும் கூறி இங்கே உங்களுக்கு இப்பொருட்கள் மலிவாகக் கிடைக்கின்றன என்றபோது திருப்திப்பட்டுக் கொண்டனர்.

இம்முறை நடைபெற்ற இவ் உற்சவத்தின் சிறப்புக்கு நெடுந்தீவு கடற்படையினரின் சேவைகள் முக்கியமாக இருந்தன. பாதுகாப்பு முதற்கொண்டு மின்சாரம், குடிதண்ணீர் விநியோகம் போன்ற அத்தியாவசிய சேவைகள் தடைப்படாதவாறு அவர்கள் பார்த்துக்கொண்டனர். அத்துடன், இந்திய மக்களின் நலன்களைப் பேணுவதற்கென முதல் தடவையாக ஒரு பிரிவும் அமைக்கப்பட்டிருந்தது இந்திய மக்களுக்கு திருப்தியளித்தது எனலாம்.

உற்சவத்தின் இறுதி நாளன்று அனைத்து மக்களுக்கும் உணவு, தண்ணீர் என்பன படையினரால் வழங்கப்பட்டன. வடபிரதேச கடற்படைத் தளபதி வீரசேகர இதனை மக்களுக்கு வழங்கிவைத்தார்.

யாழ். செயலக கடமைகளை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் மு. நந்தகோபாலன் கவனித்தார். நெடுந்தீவு பிரதேச சபை, ஈ.பி.டி.பி. கட்சியினர், யாழ். நெடுந்தீவு - இராமேஸ்வரம் செஞ்சிலுவைச் சங்கங்கள், கடற்படை, தீவுப்பகுதி சுகாதார வைத்திய அதிகார பணிமனை போன்றோர் மக்களின் வசதிகளையும் தேவைகளையும் நிறைவேற்றுவதில் அக்கறையுடன் காணப்பட்டனர். நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தனியார் நிலையங்கள் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டன.

ஆலயம் நெடுந்தீவு கடற்படையினரால் நன்கு புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது டன் மக்கள் திருப்பலி பூசைகளை தடையின்றி பார்க்கக் கூடியதாக ஆலயத்தையொட்டி தென்பகுதியில் பெரிய மேடை ஒன்றையும் அமைத்துத்திருந்தார்கள். இந்த மேடையில் குருமார்கள், உயரதிகாரிகள் அமர்ந்திருந்தனர். பொது மக்கள் படகுகளில் இருந்து வசதியாக இறங்கக் கூடியதாக தற்காலிகமாக பாலமும் கடற்படையினரால் அமைக்கப்பட்டிருந்தது.

இருநாட்டு மக்களின் சுமுகமமான உறவு நிலை பலமாக அமையவும் இந்த புனித பூமியில் கூடியுள்ள மக்கள் கடந்த கால கசப்புணர்வுகளை மறந்து புதிய வாழ்க்கைக்கு மாறவும் கோடி அற்புதரின் ஆசிவேண்டி இருநாட்டுக் குருமார்களும் திருப்பணிப் பூசை ஒப்புக்கொடுத்தனர்.

நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு. அமலராஜ் அடிகள் தலைமையில் நடைபெற்ற உற்சவத்தில் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மஹிந்த ஹத்துருசிங்க, வட பிராந்திய கடற்படைத் தளபதி வீரசேகர, யாழ். அரசாங்க அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

திருநாள் அன்று அந்தோனியார் திருச்சொரூப பெருவிழாத் திருப்பலி 9.30 மணிக்கு நிறைவடைந்தது. பண்டைக் காலம் தொட்டு இற்றைவரை இந்திய - இலங்கை மக்கள் சந்திக்கும் ஓர் உறவுத் தீவாக கச்சதீவு இருக்கவேண்டுமென இரு நாட்டு மக்களும் விரும்புகிறார்கள்.

○ தூருந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவலுப் பெறாது போன ஒப்பந்தங்கள் (பகுதி மூன்று)

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

இந்த மூன்று சட்டங்களும் அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்டன. இந்த சட்டங்களின் விளைவாக மலையகத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் ஏறக்குறைய பத்து இலட்சம் பேர் தமது இலங்கைப் பிரஜாவுரிமையை இழந்தனர். தேசிய வருமானத்தை ஈட்டும் சுட்டெண் என வர்ணிக்கப்பட்ட உழைக்கும் வர்க்கத் தொழிலாளர்கள் தேசிய சுமையாளர்கள், நாடற்றவர்கள் என நாமம் சூட்டப்பட்டார்கள். இதில் பிரஜாவுரிமை பறிப்புச் சட்டத்தை எதிர்த்து நின்ற ஜி.ஜி. பொன்னம்பலம் வாக்குரிமை பறிப்புச்சட்டத்தை ஆதரித்தார். இதனால், இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் இரண்டு தலைமைத்துவம் உருவாக வழிசமைத்தது. இது மலையகத் தமிழர் வாழ்விலும் பாதிப்பை ஏற்படுத்தியது.

ஒரு தலைமைத்துவத்திற்கு ஜி.ஜி. பொன்னம்பலமும், 1949 டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி உருவான இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் தலைமை தாங்கினார்கள். இந்த முரண்பாடு 1972 ஆம் ஆண்டு தமிழர் கூட்டணி உதயமாகும்வரை நீடித்தது. இதுவரை இலங்கையின் எஜமானர்களாக இருந்து இலங்கை மக்களைப் பிரித்து முதுகில் சவாரிசெய்த ஏகாதிபத்திய முதலாளித்துவவாதிகளான வெள்ளைக்காரத் துரைமாருக்குப் பதிலாக தேசிய முதலாளித்துவக் கட்சிகள் தமிழ் மக்களது முதுகில் சவாரிவிடும் நிலைமையை உருவாக்கியது.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பெரும் பதவிப்போட்டி தலைதூக்கியது. டி.எஸ். சேனநாயக்க தீவிரமான வலதுசாரிப் போக்குடையவர். அவர் தனக்குப் பின்னர் தனது வாரிசாக தனது மகனான பிரமச்சாரி டட்லி சேனநாயக்கவையே பிரதமராக்க வேண்டும் என கவர்னரான சோல்பரிப் பிரபுவிடம் கேட்டுக்கொண்டார். தீவிர மிதவாதப்போக்குடைய எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க பிரதமர் பதவி கிடைக்காது என்பதை உணர்ந்து கொண்ட போது 1951 ஆம் ஆண்டு ஐ.தே.கட்சியை விட்டு விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார்.

1952 ஆம் ஆண்டு எதிர்பாராதவிதமாக மார்ச் மாதம் 24 ஆம் திகதி காலிமுகத் திடலில் குதிரைச்சவாரி செய்துகொண்டிருந்த டி.எஸ். சேனநாயக்க குதிரையிலிருந்து தவறி வீழ்ந்து இறந்தார். இதனால், சோல்பரிப் பிரபு 26.03.1952ஆம் ஆண்டில் டட்லி சேனநாயக்கவை பிரதமராக நியமித்தார். அவர் சிலகாலம் பிரதமராகப் பதவிவகித்து விட்டு பாராளுமன்றைக் கலைத்தார். இதனால், 1952ஆம் ஆண்டு இலங்கை மக்கள் பொதுத்தேர்தல் ஒன்றுக்கு முகம்கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

1952ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்று டட்லி சேனநாயக்க மீண்டும் பிரதமரானார். தமிழ்ப் பகுதிகளில் தமிழரசுக்கட்சி 02 தொகுதிகளில் வெற்றி பெற்றது. கோப்பாய் தொகுதிகளில் வன்னியசிங்கமும், திருமலைத் தொகுதியில் சிவபாலனும் வெற்றிபெற்றார்கள். ஏனைய தொகுதிகளில் ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸ் வெற்றி பெற்றது.

காங்கேசன்துறைத் தொகுதியில் தந்தை செல்வா 1947 இல் சுப்பையா நடேசனைத் தோற்கடித்து வெற்றிபெற்றார்.

1952 இல் காங்கேசன்துறைத் தொகுதியில் சுப்பையா நடேசன் தேர்தலில் தந்தை செல்வாவைத் தோற்கடித்து வெற்றிபெற்றார். இதுபற்றி ஜி.ஜி. பொன்னம்பலம் மேடைகளில் பேசும் போது பின்வருமாறு பெருமிதப்பட்டார்:

1947 தேர்தலில் ஜே.ஜே.வி. செல்வநாயகத்தைப் பயன்படுத்தி சுப்பையா நடேசனைத் தோற்கடித்தேன். 1952 இல் இதே தொகுதியில் சுப்பையா நடேசனைப் பயன்படுத்தி ஜே.ஜே.வி. செல்வநாயகத்தை தோற்கடித்தேன்.

தமிழ் சமூகம் அவலத்திற்குள் தள்ளப்பட்டுள்ள போதும் தமிழர் தலைமைகள் ஆளை ஆள் அறுக்கும் கைங்கரியத்தைக் கைவிடவில்லை என்பதற்கு இத்தகைய உரைகையே உரைக்கல்லாகும்.

(தொடரும்)

## சட்டமும் சமூகமும் 20






சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# வாழ்க்கை கொடுக்கப்பட்டது ஏன்?

வாழ்க்கை மீண்டும் ஒருவருக்குக் கொடுக்கப்படும் என்பது நிச்சயமில்லை. இந்தமுறை அது ஏன் தரப்பட்டுள்ளது என்பதில் கூட நிச்சயமில்லை. நீ அதற்குத் தகுதியானவனா? அதை நீ சம்பாதித்திருக்கிறாயா? உயிர் வாழ்தல் அதை உனக்கு கொடுக்கக் கடமைப்பட்டுள்ளதா? அது ஒரு சுத்தமான பரிசு, உயிர் வாழ்தலின் அதிகமான நிறைவின் மூலம் வரும் பரிசு. நீ அதற்குத் தகுதியானவனா இல்லையா என்றெல்லாம் அது கவலைப்படுவதில்லை. அது உனது தகுதிகளை பற்றிக் கேள்வி கேட்பதில்லை. உனது நன்னடத்தை, ஒழுக்கம் இவை பற்றி விசாரிப்பதில்லை. உன் மீது எந்த வேண்டுகோளையும் விதிப்பதில்லை; எந்தவிதமான விதிமுறைகளும் இன்றி வெறுமனே அது உனக்குத் தரப்படுகிறது. இந்தப் பரிசு ஒரு வணிக ரீதியானது அல்ல. உன்னிடம் எந்தவித எதிர்ப்பார்ப்புக்களையும் அது பதிலுக்குக் கேட்பதில்லை. உன்னிடம் அதைக் கொடுத்து நீ என்ன வேண்டுமானாலும் செய்துகொள் என்று முழுச் சுதந்திரத்தையும் அது அனுமதிக்கிறது.

**ஓஷோ**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 20

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | ■ | 05 | 06 | 07 |
| 08 | 09 | ■ | 10 | 11 | 12 | ■ | 13 |
| 14 | 15 | 16 | ■ | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | ■ | ■ | 25 | ■ |
| 26 | ■ | 27 | 28 | 29 | 30 | ■ | 31 |
| ■ | 32 | 33 | 34 | 35 | ■ | 36 | 37 |
| 38 | 39 | ■ | 40 | 41 | 42 | 43 | ■ |
| 44 | 45 | 46 | 47 | ■ | 48 | 49 | 50 |

**இடமிருந்து வலம்**

1. சூரியனின் மற்றொரு பெயர்
5. நூறு (குழம்பியுள்ளது)
8. மீனுக்கு எதிரி
10. துன்பத்தில் இருப்பவர்களுக்கு வழங்க வேண்டியது.
14. மின்னிணைப்பிற்கு உதவுவது (திரும்பியுள்ளது)
17. நொடி
21. குழந்தைகள் தாயிடம் எதிர்பார்ப்பது (குழம்பியுள்ளது)
27. மாணவர் கல்வியில் முன்னேற இது அவசியம் (குழம்பியுள்ளது)
32. சந்ததி
36. வினாச்சொற்களில் ஒன்று (திரும்பியுள்ளது)
38. வீடு கட்டுவதற்குப் பயன்படும்.
40. கூடைசெய்ய உதவுவது (குழம்பியுள்ளது)
44. தகவல் தொடர்புகளின் ஒரு முறை
48. இனிய ஓசை

**மேலிருந்து கீழ்**

1. அறுசுவைகளில் ஒன்று
2. நித்திரைக்கு உகந்தது
4. உனது (தலைகீழ்)
5. கால்நடைத் தீவனம்
7. பொருட்கள் விற்கும் - வாங்கும் இடம்
16. பூமி (குழம்பியுள்ளது)
19. சோற்றுடன் உண்பது
24. உடனடித் தேவையை சொல்வது.
31. புத்தகம்/நூல் (தலைகீழ்)
32. வாகனம்
36. ஒரு கிழமை (குழம்பியுள்ளது)
38. ஒரு நட்சத்திரம் (இறுதி எழுத்தில்லை
42. நாங்கள் (திரும்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி 18க்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பி | ர | ம் | ம | ச் | சா | ரி | ■ |
| ■ | ம | து | ர | ம் | ■ | பூ | மி |
| ஆ | ணி | ■ | ம் | அ | மா | ■ | ச் |
| ர | ச | னை | ■ | ச | து | ர | ம் |
| வா | ந் | தி | ■ | ■ | ளை | ப | ச |
| ர | தி | ■ | கூ | னி | ■ | ம | ■ |
| ம் | ர | ஆ | ■ | ச | ச் | சி | ன் |
| ■ | ன் | மை | ந | ■ | தை | வ | தே |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. **மு. அமரலிங்கம்**
   இல.09, வின்செற் வீதி,
   கொழும்பு-06.
2. **வி. தர்சனன்**
   தரம் 09, யாழ். இந்துக்கல்லூரி
   யாழ்ப்பாணம்.
3. **உ.சாம்பவி**
   இல.40, கோணாவளை லேன்
   கொக்குவில் கிழக்கு கொக்குவில்.

**குறுக்கெழுத்துப் போட்டி 20க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**
குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.**




"டீச்சரை திருமணம் முடிச்சது தப்பா போச்சு"
"ஏன்?"
"நான் சுட்ட அப்பம் சரியா வரலைனு நூறு அப்பம் சுடுமாறு தண்டனை கொடுத்திட்டா!"




"எங்க மாமி எப்போதும் என்னோடு போட்டா போட்டிதான்!"
"அப்படியா? இப்போ என்ன நடந்தது?"
'நான் கர்ப்பமா இருக்கிறேனு அவங்களும் கர்ப்பமா இருக்க வேணுமாம்!"




" உயிரோட இருநூறு பல்லிகள் கிடைக்குமா?
"எதற்கு?"
"வீட்டைக் காலி பண்ணப் போகிறேன் வீட்டுக்காரர் வீட்டில் உள்ளது உள்ளபடி இருக்க வேண்டுமென்று கூறிவிட்டார்!'




"ஏன் அந்த 41 ஆம் நம்பர் அறையிலுள்ள பேஷண்டுக்கு கிச்சு கிச்சு மூட்டினாய்?"
- டாக்டர்

"அவருக்கு உயிர் இருக்கிறதா என்று பார்க்க!"
-நர்ஸ்




"அவர் ஒரு குழந்தை டாக்டர்!"
"அப்படியா?"
"ஆமாம், யாராவது பீஸ் தராவிட்டால்
தரையில் புரண்டு புரண்டு அழுவார்!"




மனைவி - "நாம் கலியாணம் பண்ணி பத்து வருஷமாச்சு ஏதாவது சேர்த்து வச்சிருக்கீங்களா?"

கணவன் - "ஓ, ஆபீஸ் டைப்பிஸ்ட்டை சேர்த்து வச்சிருக்கிறேன்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

> பிறந்த நாட்கள் வரும் போது ஒருவருக்கொருவர் வாழ்த்துச் சொல்லி பரிசுகள் பரிமாறப்படுவது வழக்கம். இளைஞன் ஒருவன் தன் நண்பியின் விருப்பத்திற்கமைவாக பல வசதிகளையும் கொண்ட செல்போன் ஒன்றை பரிசளித்திருக்கிறான். நண்பியும் மிகுந்த ஆர்வத்துடன் பெற்று அச்செல்பேசியை இயக்கிப் பார்த்தபோது அதில் பல ஆபாசக் காட்சிகள் அவள் கண்முன்னே - எதிரே தோன்றின. அடுத்த வந்த நாட்களில் அவர்களது வழமையான சந்திப்பு காதலாக மாறியது. இறுதியில் அவர்களுக்கிடையிலான நட்பின் நெருக்கம் அந்த மாணவியின் கருப்பை வரை ஊடுருவிச் சென்றபோது தான் நட்பின் விபரீதம் புரிந்தது. பெற்றோர்களே! பெண்பிள்ளைகளுக்கு வழங்கப்படும் பரிசுப் பொருட்களில் கண்காணிப்புடன் இருங்கள்.

நட்பு என்பது இரண்டு உள்ளங்களுக்கிடையில் இருக்கும் புனிதமான தொடர்பு. காலம் செல்லச்செல்ல அதன் வேர் நீண்டு வளர்ந்து செல்லும் தன்மை உடையது.

யாழ். குடாநாட்டிலுள்ளவர்களிடமுள்ள நட்பு குறித்து அதிகம் பிரஸ்தாபிக்கத் தேவையில்லை. இருந்தும் ஆண்-பெண் என்ற இருபாலாருக்கிடையில் இடம்பெறும் நட்பு குறித்து இங்கு சொல்லித்தான் ஆகவேண்டும் என்ற நிலை. ஒரு ஆணும் பெண்ணும் நட்புப் பாராட்டலாமா? அந்த நட்பு ஆக்கபூர்வமானதாக அமைந்து, ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு விட்டுக் கொடுத்து நடக்கும் பயனுள்ள திசை நோக்கிச் செல்லுகிறதா என்பது கேள்விக் குரியது.

ஆண்-பெண் நட்பு என்ற வட்டத்தின் எல்லையைக் கடக்கத் தூண்டும் பதின்ம வயது பருவத் தீண்டல்கள் உச்சமடையும் போது சிக்கலுக்குரியதாகி விடுகிறது.

விரும்பியவர்களிடத்தில் மனம் பல விதிகளை மீறவிரும்பும். அதுவும் எதிர்ப் பாலினத்தவராயின் மனம் ஆயிரம் வித்தைகள் காட்டும். நட்புக்கும் காதலுக் குமிடையேயுள்ள வரம்பு எது? இவை தான் நட்பின் எல்லைக் கோடுகள்- வரன்முறைகள் என்பன பற்றி ஆண்-பெண் நட்பை தெளிவான வரையறைக்குள் கொண்டவர முடியாது.



யாழ். குடாநாட்டை பொறுத்தவரை ஆண்-பெண் நட்புக்கள் பெருகியுள்ள இச்சந்தர்ப்பத்தில் நட்பை வளர்க்கும் பெண்களின் நிலை தொடர்பாக அதிகம் சிந்திக்கவேண்டிய நேரமிது. அண்மையில் தென்மராட்சிப் பகுதியில் நடந்த ஒரு சம்பவம் சிந்திக்கற்பாலது. பாடசாலையில் உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் மாணவிக்கு இளைஞன் ஒருவனுடன் நட்பாகப் பழகும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நட்புக்கு இலக்கணமாக திகழ்ந்தனர். நாட்கள் செல்லச்செல்ல அவர்களுக்கிடையிலான அன்பின் நெருக்கம் பெருகியது. காதல் என்ற வெள்ளம் அருவியெனப் பாய்ந்தது. பிறந்த நாட்கள் வரும் போது ஒருவருக்கொருவர் வாழ்த்துச் சொல்லி பரிசுகள் பரிமாறப்படும். ஒரு கட்டத்தில் அவ்விளைஞன் தன் நண்பியின் விருப்பத்திற்கமைவாக நவீன வசதிகளையும் கொண்ட செல்போன் ஒன்றை பரிசளித்திருக்கிறான். மாணவியும் மிகுந்த ஆர்வத்துடன் பெற்று அத் தொலைபேசியை இயக்கிப் பார்த்தபோது பல ஆபாசக் காட்சிகள் அவள் கண் முன்னே - எதிரே தோன்றின. அடுத்த வந்த நாட்களில் அவர்களது வழமையான சந்திப்பு காதலாக மாறியது. இறுதியில் அவர்களுக்கிடையிலான நட்பின் நெருக்கம் அந்த மாணவியின் கருப்பை வரை ஊடுருவிச் சென்ற போது தான் நட்பின் விபரீதம் புரிந்தது.

மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் வழக்கமாகிவிட்டன. தற்போது தொலைபேசிக் கலாசாரம் தலைதூக்கியுள்ளதால் பல்வேறு வேண்டத்தகாத விளைவுகள் ஏற்படுகின்றன என்பது பற்றி பல தடவைகள் இங்கு சுட்டிக் காட்டியிருந்தோம்.

தொலைபேசியில் சில நன்மைகள் இருந்தாலும் பல தீமைகளும் உண்டென்பதை யாராலும் மறுக்கமுடியாது. தொலைபேசியை தவறாக உபயோகிக்கும் பண்பாடு எம்மவரிடையே தலை தூக்கியுள்ளது. குரங்கின் கையில் பூமாலை போல போகக் கூடாத கைகளுக்கு தொலைபேசி சென்றுள்ளதன் விளைவை நாம் இப்போது அறுவடை செய்துகொண்டிருக்கின்றோம். எது சரி? எது தவறு என்று புரிந்துகொள்ளாத சந்ததியிடம் எந்த ஒரு பொருளைக் கொடுத்தாலும் பயனுள்ள முறையில் பயன்படுத்துவார்கள் என எதிர்பார்க்கமுடியாது.

அது போலவே, தொலைபேசியும் இன்று தவறான முறையில் உபயோகப்படுவதால் பல்வேறு விளைவுகளை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

வயது வேறுபாடின்றியும், பால்வேறுபாடின்றியும் கைத்தொலைபேசிப் பாவனை எல்லை மீறுகின்றன. குறிப்பாக, பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குள்ளும் அதுவும் பாடவேளைகளில் கூட பயன்படுத்தி வருகின்றனர். அலுவலக ஊழியர்களும் அலுவலக நேரங்களிலும் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால், பாடசாலை மாணவர்கள் கல்வி கற்றல் என்ற நிலையிலிருந்தும் ஊழியர்கள் தமது கடமையிலிருந்தும் நமுவி-வழுவிச் செல்லும் துர்ப்பாக்கிய நிலைகளை இங்கு தரிசிக்கக் கூடியனவாக இருக்கின்றன.

அண்மையில்கூட யாழ். நகரின் பிரபல பாடசாலை ஒன்றில் வகுப்பறைக்குள் செல்பேசியைப் பயன்படுத்தும் மாணவர்களை படம் எடுத்து இணையத்தளம் ஒன்றில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது.

தற்போது செல்போன்கள் பல ரகங்களில் பல்வேறு வசதிகளைத் தாங்கி புழக்கத்திற்கு வந்துள்ளன. இவற்றைத் தவறாகப் பயன்படுத்தும் இன்றைய இளம் சமூகத்திடம் பல ஆபாசப்படங்களைத் தரவிறக்கம் செய்து பார்த்து ரசிக்கும் பண்பாடு மேலோங்கியுள்ளது. தான் பார்த்து ரசிப்பது மட்டுமன்றி மற்றைய சகாக்களின் செல்பேசிக்குள் 'புளூருத்' மற்றும் 'எம்.எம்.எஸ்.' மூலம் அனுப்பி அவர்களையும் தவறான வழிக்கு இட்டுச்செல்கின்றனர். இதனால், இளம் சந்ததி தவறான வழிகளை நாடிச்செல்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கின்றனர்.

இத்தகைய எல்லை மீறிய கைத் தொலைபேசிப் பாவனைக்கு பெற்றோரேல முதற்காரணம் என்பதை ஏற்றுத் தான் ஆகவேண்டும். எந்த ஒரு பெற்றோரும் தமது பிள்ளைகள் தவறான பாதையில் செல்வதற்கு விரும்ப மாட்டார்கள். என்றாலும் பிள்ளைகளின் வற்புறுத்தல்களுக்கும், பிடிவாதங்களுக்கும் அமைவாக இத்தகைய தவறான பாதைக்கு இட்டுச் செல்லும் கைத்தொலைபேசிகளை வாங்கிக் கொடுக்கும் போது மிக அவதானமாக இருக்கவேண்டும்.

ஏனெனில் பதின்ம வயதுடையவர்கள் சரி- பிழை, நல்லது-கெட்டது எவை என ஆராயமல் வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு அழிந்துபோகக் கூடிய சாத்தியக்கூறுகளும் உண்டென்பதை மறந்துவிடாதீர்கள். எனவே தான் உங்கள் பிள்ளைகள் குறித்து விழிப்புடன் இருந்து அவர்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து, அவர்கள் விடும் தவறுகளைத் திருத்தி, அவர்களை நல்வழிப்படுத்தி நல்ல பாதைக்கு இட்டுச் செல்வது

— உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பொட்டுக்கடை பால் அப்பம்

மாற்றலாகிய கையோடு கொழும்புக்கு வந்துவிட்டான் சரவணன். மனைவிக்குப் புதிய சூழல் ஒத்துக்கொள்ள சில நாட்களாகியது. வெள்ளவத்தையில் அடக்கமாக ஒரு அனெக்ஸ் எடுப்பதற்கு அவன் பட்ட அலைச்சல் கொஞ்சமல்ல.

அன்று மாலை நேரம் கடைத்தெருவுக்கு அவளை அழைத்துச்சென்றான். தேநீர் கடையொன்றில் அப்பம் தயாரிப்பதை ஆவலோடு பார்த்தாள். அவர்கள் அப்பம் போடும் முறை அவளுக்கு அதிசயமாக இருந்தது. சிறிய இரும்புச் சட்டிகள் இரண்டை காஸ் அடுப்புகளில் வைத்து அப்ப மாவை இரண்டிலும் வார்த்துவிட்டு தகரக் கிண்ணியால் மூடிவிட்டார்கள். பின்னர் இரும்பு கிடுக்கை ஒன்றால் திறந்து அப்பத்தை தட்டகப்பை ஒன்றால் எடுத்தார்கள்.

"பருத்தித்துறையில் நாங்க அப்பம் சுடுகிறது இப்படியே?"

"நீர் உம்மடை வேலிப்பொட்டுக் கடையை எண்ணிக்கொண்டீராக்கும்."

"இரண்டு சட்டி பாவிப்பம். கீழ் சட்டியை அடுப்பில் வைப்பம். அதுக்கு மேல தணலிட்டு நிரப்பிய மறு சட்டியை வைப்பம். இடுக்கிக்குப் பதிலாக இரண்டு குச்சிகளைப் பயன்படுத்துவம். தணல் சட்டியைத் தூக்கவும் வைக்கவும், அப்பமா வார்த்த கீழ்ச்சட்டியத் தூக்கி அப்பத்தைச் சீராகத் துளாவவும் அந்த இரண்டு குச்சிகள் பயன்படும். அதுக்கு நல்ல அனுபவம் தேவை. ஒரு முறை நான் சுடேக்கை அப்பத்தைக் கொட்டி தணல் சட்டியையும் உடைச்சுப் போட்டன். அதுக்குப் பிறகு ஆச்சி அந்தப் பக்கம் விடுறதில்லை."

"நல்ல கெட்டித்தனம்."

சரவணனுக்குப் பருத்தித்துறை பொட்டுக் கடைகள் நினைவு வந்தன. கிடுகு வேலியை வெட்டிப் பொட்டு ஒன்றை அதில் அமைத்திருப்பார்கள். நாலடி நாலடி வெளிப் பொட்டுக்கு அப்பால் பத்தி ஒன்று அல்லது குடில் ஒன்று இடப்பட்டு அடுப்புக்கள் வைக்கப்பட்டிருக்கும். அதன் முன் அமர்ந்து மாலை நேரங்களில் பலகாரங்கள் சுடுவார்கள். தோசை, அப்பம், இட்டலி என்றிருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட கடைகள் இருந்தன. பலகாரங்களை வாங்கி உண்பவர்கள் அப்பொட்டுக்கு இப்பால் இடப்பட்டிருக்கும் குத்திகளில் அமர்ந்திருப்பர். தனதுபின்னேர இளம்பசியைத் தீர்ப்பதற்காக சரவணன் பொன்னாச்சியின் பொட்டுக் கடைக்கு தவறாது வருவான். பொன்னாச்சியின் பால் அப்பத்திற்கு அப்பிரதேசத்தில் கடும் போட்டி இருந்தது. சில நேரங்களில் மணிக்கணக்கில் காத்திருக்கவும் நேர்ந்தது.

பொட்டுக்களால் எப்படிப் பார்த்து, வருகைதந்த ஒழுங்கில் வாடிக்கையாளர்களைக் கவனிக்க பொன்னாச்சியால் முடிகிறதோ?


இழவு வீட்டில் தம்பட்ட மேளக்காரனின் கைகளிலுள்ள தடிகளின் இலாகவம் ஆச்சியின் கைகளுக்கு வந்துவிடும். இரண்டு குச்சித் தடிகள் அவரின் கரங்களில் இலாவகமாக நடனமிடும்.

"எனக்கொரு முட்டையப்பம் போடனை..."

"அப்ப கொஞ்சம் பொறு மோனை... மச்ச சட்டி வைக்கவேணும் சட்டி சூடாக வேணும்" என்பாள் ஆச்சி.

"இதிலை ஊத்தினால்... என்ன? மச்சமும் மரக்கறியும் தான் ஒட்டுதோ?"

"ஒட்டுதோ இல்லையோ? விரதகாரர் இங்க வந்து சாப்பிடுகிறவை கண்டியோ? நான் ஆசாரமாக இருக்க வேணும்."



ஒவ்வொரு பின்னேரமும் பொன்னாச்சி சுடுகின்ற பால் அப்பம் எனக்கு அவசியமானது. ஒரு நாள் மழை ஓய்ந்த பின்னேரம் சென்றேன். பால் அப்பங்களைச் சுட்டு தன் முன்னுள்ள சுளகில் ஓர் இளம் பெண் போட்டுக்கொண்டிருந்தாள். எனக்கு வியப்பாக இருந்தது.

வழக்கமாகச் சுடுகிற ஆச்சி எங்கே?

"அவவுக்கு இன்று சாதுவாகச் சுகமில்லை. நான் அவவின்ர பேர்த்தி. நான் நல்லாச் சுடுவன்"

"நீங்கள் என்ன படிச்சனீங்கள்?"

'எங்களை ஆச்சி ஓ.எல் வரை படிப்பிச்சவ.. அதுக்குப் பிறகு நிற்பாட்டிப் போட்டா.. அதுவும் உங்களைப் போல பொடியளால எங்களை விட்டால் தானே? பின்னால வரத்தொடங்கி விட்டான்கள்.. அந்தக் கரைச்சல் பொறுக்காமல் ஆச்சி நிற்பாட்டிப்போட்டா. இந்தனைக்கும் ராஜினி வாயாடி... துணிச்சல் காரி. தனக்குப் பின்னால் வந்த ஒரு பொடியனைப் பார்த்து, "சரி, இப்படியே கச்சேரிக்குப் போவமா? அங்க றிஜிஸ்ரர் பண்ணுவமா..? என்று கேட்டாள். அதோட ஓடினவன் தான்... தாரணி கலகலவெனச் சிரித்தாள். வெண்கலச் சிரிப்பாக சரவணனுக்குப் பட்டது.

அடுப்புக்கு முன் அவள் குந்தியிருந்தாள். அழகான பெண் தான். அப்பங்களைச் சுளகிலிருந்து எடுத்து நீட்டும் போது சிவந்து காணப்பட்ட அவள் கரத்தின் கவர்ச்சி அவனைக் கிறுங்கவைத்தது. அவள் குந்தியிருந்த போது அவள் பின்னழகு அவன் சிந்தையைக் கலைத்தது. அவன் தன்னை இழந்து சில கணங்கள் இருந்தான்.அடுத்த ஐந்து நாட்களும் ஒழுங்காக வந்து அவளிடம் நட்போடு பேசவும் செய்தான்.

அவளுடைய தாயும் தந்தையும் ஒரு தம்பியும் இராணுவத்தின் குண்டுவீச்சில் பலியாகிவிட்டார்கள். யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து ஐயனார் கோவில் நோக்கி ஏவிய ஷெல்லிற்குப் பலியானவர்களில் புது மணமக்கள் மட்டுமல்லர். அதனைப் பார்க்கச்சென்ற அவர்களும் அடங்கினர். எஞ்சியவர்கள் அவளும் அவளுக்கு முன் ஒரு பத்து நிமிடம் முன்னர் பிறந்த அக்கா ரஜனியும் தான். அவர்கள் இருவரும் இரட்டையர். அசப்பில் ராஜியும் தாரணியும் இருவரும் ஒரே மாதிரி இருப்பர். பெற்றோர் இறந்த பின்னர் இவர்கள் இருவரையும் வளர்க்கும் பொறுப்பை பொன்னாச்சி ஏற்றுக்கொண்டாள்.

பொன்னாச்சிப் பேர்த்திக்குப் பதிலாக அப்பம் வார்க்கும் தாரணிக்காக அவன் இரக்கப்பட்டான்.

அதற்குப் பிறகு பல நடந்துவிட்டன. அவன் கிளறிக்கல் சோதனையில் சித்தி பெற்றுக் கொழும்புக்குப் பயணமான போது அம்மா ஒரு விடயத்தில் பிடிவாதமாக நின்றாள்.

"இப்பவே வயது இருப்பத்தி எட்டு ஆகிவிட்டது. உனக்குச் சுமையெண்டு தங்கச்சிமார் இல்லை. கொழும்புக்குப் போறதெண்டால் ஒரு கலியாணம் செய்திட்டுப் போ. அவ்வளவுதான்..."

"செய்யிறன் நான் விரும்பியவளைத் தான்..?"

"காதலா? எனக்குத் தெரியாமல் இங்கயே காதலிச்சிட்டியா?"

"அப்படி இல்லை... அவளில சாதுவா விருப்பம் அவ்வளவுதான். அவளுக்கும் தெரியாது."

"ஆரடா?"

சரவணனுக்குத் தன் எண்ணத்தைச் சொல்ல சந்தர்ப்பம் வாய்த்தது. தயங்கித் தயங்கிச் சொன்னான்.

அவன் யாரென்று சொன்னதும் அம்மா சத்தமிட்டாள்.

"உனக்கென்ன விசரே? எங்கட அந்தஸ்து என்ன? சாதி சனம் என்ன? பொன்னாச்சியின் அந்தஸ்து என்ன? ஏணி வைச்சாலும் எட்டாது நினையாதை.. அங்க மாளப்போறியே? சிவப்புத் தோலில மயங்கிவிட்டாய்.."

"அப்ப கதையை விடனை.. நான் முதலில் வேலைக்குப் போறன்.." சரவணன் கொழும்புக்கு வந்துவிட்டான். மேலும் இரண்டாண்டுகள் கழிந்தன. அவன் மனப்போக்கை மாற்றமுடியவில்லை.

"இப்படியே விட்டியென்றால் கடைசியில முதலிற்கே மோசம். ஆரையாவது சிங்களப் பெட்டையை அல்லது கூடவே வேலைபார்க்கிற கொழும்புப் பெட்டையை இழுத்துவந்திடப் போகிறான். இது பரவாயில்லை. ஊருக்கை"

கடைசியில் அம்மா இறங்கிவந்தாள்.

"உன் விருப்பப்படி பேசி முற்றாகிவிட்டது. பொன்னாச்சி சந்தோசத்தோடு ஒத்துக்கொண்டாள். உத்தியோக மாப்பிளை, சீதனமில்லாமல் கிடைப்பானே? எல்லாம் விதிப்படி நடக்கும். வீடு வளவோட சீதனம் வாங்கி செய்திருக்கலாம்."

திருமணம் முடிந்தது.

"தாரணி இப்படி உட்கார்.."

"நான் தாரணியல்ல ராஜனி, தாரணியின் அக்கா.. உங்களைப் பற்றி தாரணி நிறையச் சொன்னாள்..."

"என்ன கடும் யோசனை..? என்று கேட்டாள் சரவணனின் மனைவி ராஜினி.

"அப்படி ஒன்றுமில்லை. பொட்டுக் கடை பால் அப்பத்தை எண்ணிக் கொண்டன்."

"அதோட அதைச் சுடுகிற தாரணியையும் எண்ணிக் கொண்டியளா? ஏமாந்திட்டியள்.."

"விசர்க் கதை கதையாதை... அதை எல்லாம் உன்னைக்கண்டதும் மறந்திட்டன். சிங்கள ஆக்கள் அப்பம் போடுறத வியப்போடு நீ பார்த்தாய். இவர்கள் அப்பத்திற்குப் பால் விடமாட்டினம். எங்கட பால் அப்பத்தின்ட ரேற்ஸ்ரே தனி.. அதை அடிக்க எவராலும் முடியாது..."

தாரணி ஏனோ நினைவில் வந்தாள்.

•கே. குணராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைப்போமா?



(சென்ற வாரத் தொடர்ச்சி...)

சமுதாயத்தில் உள்ள பெற்றோர்கள் தங்களுக்குள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதும், ஒருவருடைய அனுபவத்திலிருந்து மற்றவர்கள் கற்றுக்கொள்வதும் அவசியமானது. தேவையற்ற மறைப்புகளை விட்டு விட்டு, வசை பாடல்களை நிறுத்திவிட்டு, திறந்த மனதுடன் பிரச்சினைகளை அணுகி, அவற்றைப் புரிந்துகொண்டு, பொருத்தமான தீர்வுகளைக் காண உதவவேண்டும்.

**சிறுவர்களுக்கான அமைப்புக்கள்:**

சிறுவர்களுக்கான அமைப்புகள் பொதுவாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளை இலக்காகக் கொண்டு இயங்குவதனைக் காணலாம். ஆனாலும், இந்த அமைப்புக்கள் சிறுவர்களுக்கு வரக்கூடிய பாதிப்புகளைக் குறைக்கும் வண்ணமும் தொழிற்பட வேண்டும்.

அரச அதிகாரம் உடைய மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக்களும், உலகளாவிய மட்டத்தில் செல்வாக்குடைய அமைப்புக்களும் 'வருமுன் காத்தல்' தொடர்பாக சிந்திப்பதும், செயற்படுவதும் முக்கியமானது. சிறுவர்களுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் தனி நபர்களும், அமைப்புக்களும், நிறுவனங்களும் புதிய பார்வைகளை உள்வாங்கி, தகுந்த வழிகளில் திருத்தத்திற்குள்ளாவதனையும் இவ்வமைப்புகள் உறுதிசெய்ய வேண்டும்.

அத்தோடு, இவ்வாறான சம்பவங்களால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் இனிமேலும் அவ்வாறான ஆபத்துக்கள் வராது காப்பதற்குரிய வலுவூட்டும் வகுப்புக்களும் தொடர் நிகழ்வுகளும் அவசியமானவை. புனர்வாழ்வளிக்கும் தத்துவங்களை அடிப்படையாக் கொண்ட 'நம்பிக்கை இல்லங்'களும் தேவைப்படுகின்றன.

**சட்டம் ஒழுங்கு மற்றும் நீதித்துறை:**

பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு நீதிகிடைப்பதனையும், தொடர் பராமரிப்பு கிடைப்பதனையும் புனர்வாழ்வு கிடைப்பதனையும் சிறுவர் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு மற்றும் நீதித்துறைசார் அமைப்புகள் உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு வீட்டைவிட்டு வெளியேறுவதற்கும்,பாதுகாப்பில்லாது உறவுகொள்வதற்கும் பின்னால் பலருடைய பங்களிப்பு அல்லது பொறுப்பற்ற தன்மை காணப்படுகிறது என்பதனை இந்நிறுவனங்கள் புரிந்துகொள்ள வேண்டும். வெறுமனே தனியாள் சார்ந்து இந்நிலையை நோக்கி, அந்தத் தனியாளுக்கு தண்டனை கொடுப்பது பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையமாட்டாது.

சில வேளைகளில் பாதிக்கப்பட்ட பெண்பிள்ளை வீட்டையிழந்து - தான் படித்த பாடசாலையிழந்து 'ஒழுக்கங்கெட்ட' பிள்ளையாக 'சீர்திருத்த' இல்லங்களுக்குப்போகும் அதேவேளை, அதில் சம்பந்தப்பட்ட 'ஆண்மகன்' பிணையில் வெளிவந்து சுதந்திரமாக நடமாடி தனது வாழ்வைக் கொண்டுபோவதனையும் காணலாம். இது மிகவும் வேதனையானது. இதுபற்றி நாம் மேலும் படைப்பாக்கத் திறனோடு சிந்திக்க வேண்டியது அவசியமானது.

**ஊடகங்கள்:**

ஊடகங்கள் இந்த விடயத்தை மிகவும் பொறுப்புணர்வுடன் கையாள வேண்டும். அதிஷ்டவசமாக யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகைகள் இந்த விடயத்தை மிகவும் கவனமாகவே கையாளுவது அவதானிக்கப்படுகிறது. அவற்றுக்கு எமது பாராட்டுக்கள் உரித்தாகுக. இதுபோன்று ஏனைய ஊடகங்களும் பொறுப்புணர்வுடன் இந்த விடயத்தைக் கையாள வேண்டும்.

இலக்கியங்களில் வருகின்ற, கதைகளில் வருகின்ற, ஊடகங்களில் வருகின்ற செய்திகள் தொடர்பான மருட்கை நீக்கம் அவசியமானது. இலக்கியச் சுவைக்காகச் சொல்லப்படும் விடயங்கள் நிஜவாழ்க்கைக்குச் சாத்தியப்பட மாட்டாது.

**வைத்தியக்கலாநிதி சா. சிவயோகன்**
(உள மருத்துவ நிபுணர்)

# வீட்டு வைத்தியம்

- உலர்த்திப் பொடி செய்த ஒரஞ்சுத் தோலைக் காய்ச்சாத பாலுடன் கலந்து பரு, தழும்புகள் காணப்படுகின்ற இடங்களில் தடவிவந்தால் நல்ல பலன் கிடைக்கும்.
- அலர்ஜியால் ஏற்படும் தும்மலைப் போக்க 3/4 டீஸ்பூன் விபூதியை உள்ளங்கையில் வைத்து தண்ணீர் கலந்து மூக்கு மற்றும் அதன் இரு பகுதிகள் ஆகியவற்றில் தடவவும். விபூதி உலருமுன்பே தும்மல் நின்றுவிடும்.
- தொண்டைப் புண்ணைக் குணப்படுத்த இது ஒரு சிறந்த முறை 1/2 கப் தண்ணீரில் 3,4 கிராம்பு, 2 தேக்கரண்டி சர்க்கரை, 5 துளி நெய் ஆகிய வற்றை கலந்து கொதிக்கவைத்து சாப்பிடவும்.
- பயணத்தின் போது ஏற்படும் தொந்தரவுகளை நீக்க - புதிய இஞ்சித் துண்டை தோல் சீவி நறுக்கவும். ஒரு கிண்ணத்தில் சிறிது சர்க்கரையோடு இதைப்போடவும். சிறிது கொதிக்கும் தண்ணீரை ஊற்றவும். 5 நிமிடங்களுக்குப் பிறகு அதைக் குடிக்கவும். நீண்ட பயணத்திற்கு முன்பு இதைக் குடிப்பதால் பயணக்களைப்பு, அஜீரணம், வாந்திவரும் உணர்வு இவற்றைக் கட்டுப்படுத்தலாம்.



- அறுகம் புல் சர்க்கரை நோயாளிகளுக்கு நல்ல பலனைத் தரும்.
- விக்கலை கட்டுப்படுத்த 3, 4 முள்ளங்கி இலைகளை மென்று வந்தால் தானாகவே நின்றுவிடும்.
- கடுமையான மலச்சிக்கலுக்கு 1/2 கப் பசளிக் கீரையைச் சாப்பிடவும்.
- வயிற்றுப் பொருமல், வலி போக உலர்ந்த அப்பிள் தோலை எலுமிச்சைச் சாறு, சர்க்கரையோடு சேர்த்து கொதிக்கவைத்துக் குடிப்பதால் நல்ல பலன் கிடைக்கும்.
- வியர்வை நாற்றத்தைப் போக்க துளசி இலை, கசகசா, பாலேடு, லேவண்டர் ஆயில் சேர்த்து அரைத்து உடல்முழுவதும் தடவிய பின்னர் குளிக்கவும்.
- தோலில் வீக்கம், அரிப்பு நீங்க சோடியம் பை கார்பனேட் கலந்த தண்ணீரை அந்த இடங்களில் தடவ வேண்டும்.
- கண்ணில் விழுந்த தூசிதுகளை எடுக்க ஒரு டம்ளரில் விளிம்பு வரை தண்ணீர் விட்டு நிரப்பி கண்ணை அதில் மூழ்கவைத்து விழியை உருட்ட வேண்டும். தூசி தன்னால் அகன்று விடும்.
- பளீரென்று வெண்மையான பற்களுக்கு 1/4 டீஸ்பூன் சோடியம் பைகார்பனேட்டை ஒரு எலுமிச்சைத் துண்டில் தூவி அதைக் கொண்டு பல் துலக்கவும்.
- தொண்டைக்கமறல்,தொண்டைப் புண்ணுக்கு நிவாரணம் இதோ - ஏலக்காய், லவங்கப் பட்டை சேர்த்த தண்ணீரால் (தொண்டையில்) வாய் கொப்பளிக்க வேண்டும்.
- நீரிழிவுநோய் மற்றும் பல உடல்நலப் பிரச்சினைக்கு வெந்தயம் சிறந்த ஆயுள்வேத மருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் மொழி கொண்டு உள்ளத்து உணர்வை வெளிப்படுத்திய கதகளி ஆற்றுகை



இந்தியாவின் பிரதேச நடன நாடக வடிவமாக கதகளி விளங்குகின்றது. கேரளாவிற்குரிய தனித்துவமான பழமைவாய்ந்த வடிவமாக விளங்கும் கதகளி ஆற்றுகையானது கலைத்துவத்திலும் அழகியலிலும் தன்னெழுச்சி பெற்ற வடிவமாகும். வீரமிக்க தாண்டவ மோடி, நடனம், நடிப்பு, இசை, அபிநயங்கள், முத்திரைகள், முகபாவங்கள், வர்ணப்பகட்டான வேடவுடை, ஒப்பனைகள் என்பவற்றால் உலகப் புகழ்பெறும் வடிவமாக விளங்குகின்றது.

சிறப்புமிக்க கதகளி ஆற்றுகையினது நேரடித் தரிசனமானது இந்தியாவின் 65 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய உயர்ஸ்தானிகராலயத்தால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 31.01.2011 அன்று மாலை 6.00 மணிக்கு கேரள கோட்டக் கல்வி பி.எஸ்.பி. நாட்டிய சங்கதின் கலைஞர்களின் ஆற்றுகையின் மூலம் எமக்கு பார்க்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. இத்தகைய நேரடித் தரிசனத்தின் ஊடாக கதகளி ஆற்றுகை சார் அம்சங்களை குறிப்பிடலாம்.

ஆற்றுகையினுடைய ஆரம்ப வழிபாட்டுப் பாடல் இறையருள் வேண்டிப் பாடப்படும். இரண்டாவதாக ஆரம்ப நடனத்தில் இரண்டு பாத்திரங்கள் பங்குபெறும். இது நாடகத்தின் பிரதான பாத்திரங்களாக இருக்கும். ஆற்றுகைக்கு முன் நிகழ்த்தப்படும் பாடல்கள், தாள வாத்திய இசைகள் இசைப் பிரியர்களுக்கும், கலை வல்லுநர்களுக்கும் ஆற்றலை வெளிப்படுத்த வாய்ப்பாக அமையும்.

ஒப்பனையானது நடிகரதும் ஒப்பனை விற்பன்னரதும் பொறுப்பு. ஒவ்வொரு நடிகரும் தனது ஒப்பனையின் அடிப்படை வர்ணத்தை வரைய வேண்டும். ஒப்பனை விற்பன்னர்கள் இறுதி ஒப்பனை செய்வார். ஒப்பனை இட சூழலில் அமைதி பேணப்படும்.

மேடையில் ஏறும் முன் குருவுக்கும் கடவுளுக்கும் வணக்கம் செலுத்துவர். ஆற்றுகை வெற்றி வேண்டி ஆற்றுகையாளர் முடியை அணிந்து கொள்வர்.

குத்துவிளக்கின் முன்பே ஆற்றுகை இடம்பெறும். தனித்து மேடையில் நிற்கும் பாத்திரம் தனது இயக்கத்தை மத்திய மேடைப் பகுதியில் நிகழ்த்தும். இரு பாத்திரம் நிற்கும்போது மேடையின் வலது புறம் முக்கியப்படுகின்றது.

வர்ணப்பகட்டான வேட உடை ஒப்பனை பெருத்த கரப்புடுப்புக்கள், விஸ்தாரமான தலையணிகள், முக ஒப்பனைகள் நடிகரை மிகைப்படுத்திக் காட்டும். ஒப்பனையில் முழு முகத்துக்குமான சட்டகமாக வெள்ளை பயன்படுத்தப்படும். காதிலிருந்து தாடை வழி அமைக்கப்படும் வெள்ளை சட்டகம் சுட்டி எனப்படும்.

ஆண் பாத்திரத்திற்கு நீளக் கையுடைய கோட் பின்புறமாக கட்டப்பட்டிருக்கும். கடுமையாக கஞ்சி போடப்பட்ட துணி இடுப்பைச் சுற்றி பல தடவை அணியப்பட்டு பாத்திரத்தை மொத்தமாக காட்ட முழந்தாளுக்கு கீழ் வரை உள்ள ஆடைமீது துணிகள் சுற்றப்படும். மோடிப்படுத்தப்பட்ட முடிகள், கரப்புக்கள், நெஞ்சுப் பட்டம், நீண்ட மடிப்புச் சால்வை பயன்படுத்தப்படும். ஆபரணங்கள், முடிகள், பாரமற்ற மரச் சட்டங்களால் ஆக்கப்பட்டு பல வர்ணத் தாள்கள், கண்ணாடிகள் ஒட்டப்பட்டிருக்கும்.

பெண் பாத்திர வேட உடை ஆண்களை விட சற்று பருமன் கொண்டதாக இடுப்பைச் சுற்றி பெரிது படுத்தப்படும். மார்புப்பட்டை பெண்ணைக் காட்ட பயன்படுத்தப்படும். ஆண்கள் நடிப்பதால் தலைமயிர் கொண்டை உருண்டையாக்கப்பட்டு அவற்றின் மேல் மொட்டாக்கு அணிவதுடன் தோடு, காப்பு என்பனவும் அணியப்படும்.

எளிமையான மேடையில் ஒரு சதுர நாற்காலி மட்டும் இருந்து மேடைப் பொருளாக நடிக்க பயன்படுத்தப்படும். கைப் பொருட்களின் பயன்பாடு ஆற்றுகையாளரின் செய்கையைக் கொண்டு வெளிப்படுத்தப்படும். இடது கை கடிவாளம் பிடிக்க வலது கை மணிக்கட்டு அசைவு சவுக்கடியை உவமிக்கும். இங்கு பொருட்கள் அனைத்தும் ஊடகமாக பயன்படுத்தப்படும். மேடை காட்சியானது சைகைகளாலும் உடல் இயக்கத்தாலும் சிருஷ்டிக்கப்படும் கதகளி ஆற்றுவோரின் நடனத்திறனிலும் நடிப்புத் திறனிலும் தங்கியுள்ளது.

சிக்கல் நிறைந்த அடவுக் கோலங்கள், தூய நடனக் கோர்வைகள், பல்வகைப்படுத்தப்பட்ட நடன அமைப்புக் கோலங்கள் என்பவற்றை ஆற்றுகை செய்ய வேண்டும். கால்களை அகட்டி முழந்தாள்களை வெளியே மடித்து நிற்பர். மேல் உடம்பு ஒரு தனிக்கூறாக செயற்படும். மேடையில் உடல் ஒரு தனி முழுமைக் கூறாக அசையும். நான்கு அடிப்படை அடவுக்கோலங்களில் கதகளி நடனம் தங்கியுள்ளது.

உரையாடல்களிடையே தூய நடன முடிவுகள் இடம்பெறும். நாடக மனநிலை வாத்தியங்களாலும் பாடல்களினாலும் நன்கு இணைக்கப்படும். பெண் பாத்திரத்திற்கான நடனம் பார்வையாளரை கவரும் வகையில் அமையும்.

முழு நாடக பாடத்தை பாடும் பாடகர்கள் கதகளியின் இராகத்தை இசைப்பர். செண்டை, மத்தளம், சேமக்கலம் போன்ற தாள ஒலிக்கருவிகள் பயன்படுத்தப்படும். பல்வகைப்பட்ட தாள ஒலிக்கருவிகள் இணைந்து ஒரு பூரணமான ஒளிச்சூழலை ஏற்படுத்தும். கதகளி இசையில் 6 தாள ராகங்கள் தெரிவுசெய்யப்படும். ஒவ்வொன்றும் 3 காலங்களில் பயன்படும். காம உணர்வு, வீர உணர்வு, கடும் கோப உணர்வு என்பன பயன்படும்.

வாய்ப்பாட்டு தனித்துவமான மோடியில் பயன்படுத்தப்படும். பிரதான பாடகர் முக ஆற்றுகை மனநிலையை தொனியை வகுப்பார். இவர் மேடை முகாமையாளர் போன்று செயற்படுவார். சேமக்கலத்தை தடியால் தட்டுவார்.

நடனக்காரர் பிரதான பாடகரின் வழிக் குறிப்பின் படியே செயலாற்றுவர். பிரதான வாத்தியமாக செண்டை, மத்தளம் என்பன பயன்படுத்தப்படும்.

உடல் அசைவுகளின் மிகைப்படுத்தப்பட்ட போக்கும் கண்களின் அபிநய லாவண்யமும் கால்களின் அசைவுக் கோலமும் இந்நடன நாடகத்தின் சிறப்பாகும்.

இக்கதகளி ஆற்றுகையானது இரவிரவாக ஆடப்படும். முழு நீள ஆற்றுகையின் ஒரு பகுதி மட்டுமே கைலாசபதி கலையரங்கில் ஆற்றுகை செய்யப்பட்டது. பாத்திரங்கள் மன்னன் நளனாகவும், ராணி தமயந்தியாகவும் உருவகிக்கப்பட்டு இச்சரிதத்தின் இரண்டாம் பருவத்தின் முதல் பகுதியாக நளனுக்கும் தமயந்திக்கும் இடையே நடைபெற்ற திருமணப் பகுதியும் நளன் தமயந்தியை விட்டு வெளியே செல்லும் பகுதி வரை ஆற்றுகை செய்யப்பட்டது.

ஆற்றுகையாளர்களாக கோட்டக்கல் சந்திரசேகர், கோட்டக்கல் வாசுதேவன், கோட்டக்கல் ஹறிக்குமார் ஆகியோரும் பாடகர்களாக கோட்டக்கல் நாராயணன், மது ஆகியோரும் செண்டை வாத்தியக் கலைஞராக கோட்டக்கல் பிரசாத், வாத்தியக் கலைஞராக கோட்டக்கல் ரவி ஆகியோரும், ஒப்பனைக்கலைஞராக கோட்டக்கல் பாலகிருஸ்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர். நேரடித் தரிசனமாக எமக்கு கிடைத்த கதகளி ஆற்றுகையானது தனது மூலகமாக உடல்மொழியையும் பாடலையும் வாத்தியக் கருவியையும் கொண்டு நாடக சூழியல் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்திய சிறப்பினைக் காணக்கூடியதாக உள்ளது.

● எஸ்.ரி. குமரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி காணும் யாழ்ப்பாணமும் எதிர் நோக்கும் முட்டுக்கட்டைகள்



**யாழ்**ப்பாணத்தில் இப்பொழுதெல்லாம் சிலர் அபிவிருத்தி பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தூக்கத்தில் கூட அதுவே நினைப்பாகவும் இருக்கின்றது. எவ்வாறாயினும் 'வடக்கின் வசந்தம்' வீசுவதாகக் காட்ட அவர்கள் பாடுபடுகின்றார்கள். மூடப்பட்ட வீதிகள் திறக்கப்படுகின்றன. படைத்தரப்பிடமிருந்து கட்டடங்கள் கூட விடுவிக்கப்படுகின்றன. உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு கூட நடப்பதாகவும் கூறுகின்றார்கள்.

உண்மையில் இவையெல்லாம் யாழ்ப்பாணத்தில் இயல்புவாழ்க்கையை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சியென சொல்லிக்கொள்ளலாம். ஆனால், முழத்தொருக்கொரு காவலரணும், படைச்சிப்பாயும் இருக்கும் வரை எதுவுமே நடந்துவிடப்போவதில்லை. இராணுவகட்டுபாட்டில் இருந்த இடங்கள் திறந்துவிடப்படுகின்றன. இவ்வாறு திறந்து விடப்படுகின்றமையை அபிவிருத்திகுள் வகைப்படுத்துவது பொருத்தப்பாடற்ற செயற்பாடே.

யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி எவ்வாறு இருக்கின்றது? மே 19,2009 அதன் பின்னராக 'ஏ-9' வீதி பொது மக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்பட்ட பின்னர் சூழல் மாற்றமடைய தொடங்கிவிட்டது. தெற்கிலிருந்து பெரும்பாலான வங்கிகள் தமது கிளைகளை விரிவாக்கிவிட்டன. யாழ். நகரில் ஆரம்பமாகி இப்போதெல்லாம் சிறிய நகரங்களுக்கும் அவை வேகமாக சென்றுகொண்டிருக்கின்றன. தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரங்கள் கூட இராணுவக்காவலரண்கள் போல முழத்துக்கொன்று என்று வந்துவிட்டன. இப்போதெல்லாம் இந்தியா, ஹொங்ஹொங் வங்கிகள் கூட தங்கள் கிளைகளைத் திறக்கின்றன.

அதேபோன்று, கடன் வழங்கும் நிறுவனங்கள் கூட புற்றீசல் போல பல்கிப்பெருத்துவிட்டன. உங்கள் அனைவருக்கும் கடன் தருவதற்காகவே அவை வீதி வீதியாக துரத்திச்செல்கின்றன. உங்களுக்கான வாகனமொன்றைக் கொள்வனவு செய்து தர அவர்கள் தயாராகவே இருக்கிறார்கள். ஆனால், கடன் பட்ட பின் அவர்களது கிடுகிப்பிடியினுள் மூச்செடுக்க முடியாததென்பதெல்லாம் தனியான கதை.

தென்னிலங்கையிலில் இருந்து வந்து சேர்ந்த தெருவோர வியாபாரி முதல் சுப்பர் மார்கெட் வரையென யாழ்ப்பாணதில் விரிந்துகிடக்கின்றன. பெரும்பாலான கிராமத்து சந்திகளெல்லாம் இப்போது தென்னிலங்கை தெருவோர வியாபாரிகளுக்கென்றாகி விட்டன. பெரும்பாலும் தெருவோர வியாபாரிக்கு அருகாக மினிமுகாமோ அல்லது இராணுவ காவலரணோ நிச்சயமாக இருக்குமென்பது அனைவருக்கும் தெரிந்தே இருக் கின்றது. கூட்டு தொழில்முயற்சி என்பதால் உள்ளூர் அதிகார சபைகளோ,



பொலிஸ் தரப்புக்களோ கண்டுகொள்வதேயில்லை. ஆனால் கடைகளுக்கு முன்னால் குப்பை கொட்டியதாக குற்றஞ்சாட்டி உள்ளூர் வர்த்தகர்கள் பலரும் இப்போது நீதிமன்றப் படியேறிக்கொண்டிருக்கிறார்கள். சட்டமும் பெரும்பாலும் திரும்பிப் பாராதவொன்றாகவே இருக்கின்றது.

மறுபுறத்தே, உள்ளூரிலும் தெருவோரங்களெங்கும் புதிது புதிதாக வர்த்தக நிலையக் கட்டடங்கள் முளைத்துக்கொண்டேயிருக்கின்றன. பெரும்பாலும் புலம்பெயர்ந்த உறவுகளது முதலீடுகளும் சிலவேளைகளில் இதில் இருக்கலாம். எவ்வளவு வேகமாக இத்தகைய வர்த்தக நிலையங்கள் முளைக்கின்றனவோ, அதே வேகத்தி[illegible] விடுகின்றன. மக்களிடையே கொள்வனவுக்கான வலு வீழ்ச்சியடைந்துள்ளமையே இதற்கு காரணமாகியிருக்கலாம்.

ஆனால், குடாநாட்டைப் பொறுத்தவரை விவசாய நடவடிக்கைகளாயினும் சரி, தொழில் முயற்சிகளாயினும் சரி, சொல்லிக்கொள்ளத் தக்கதான முன்னேற்றம் எதுவும் எய்தப்பட்டிருக்கவில்லையென்பதே உண்மையாகும். விவசாய நடவடிக்கைகள் குடாநாட்டினில் குறைவடைந்தே செல்கின்றது. பெருமளவில் விவசாய மேட்டுக் காணிகள் இப்போது கட்டடங்களால் நிரம்பிவழியத் தொடங்கியுள்ளன. இறுதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் விவசாயம் செய்யப்படாது கைவிடப்படும் மேட்டுக் காணிகளின் அளவு அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

மறுபுறத்தே குடாநாட்டுக்கான தரைவழிப்போக்குவரத்துக்கள் சுமுகமடைந்து இரு வருடங்களை எய்தவுள்ள நிலையில் குடாநாட்டினில் எந்தவொரு தொழிற்சாலைகள் கூட உருவாக்கப்பட்டிருக்கவில்லை. அரசு எதையுமே செய்திராத நிலையில புலம்பெயர் தமிழ் தொழில் முயற்சியாளர்களுக்கும் முட்டுக்கட்டை போடப்பட்டேயுள்ளது. குறிப்பாக ஆட்படுகொலைகள், கடத்தல்களென மீண்டும் நெருக்குவாரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில் தொழில் நடவடிக்கைகளில் எவருமே முதலீடுகளை மேற்கொள்வார்களென்பதும் எதிர்பார்க்க முடியாததொன்றே.

ஆனாலும், குடாநாட்டு கடலுணவுகளுக்கும் காய்கறி, பழங்களுக்குமான சந்தைவாய்ப்பு தொடர்ந்தும் தெற்கினில் நன்றாகவே இருக்கின்றது. ஆனால், உள்ளூர் மீனவனுக்கோ விவசாயிக்கோ சொல்லிக் கொள்ளத் தக்கதாக எதுவுமே எஞ்சுவதில்லை. மறுபுறத்தே உள்ளூரில் கட்டுப்பாடற்று அதிகரித்திருக்கும் இவற்றின் விலைகள், உள்ளூர் சாதாரண மக்களையும் அடித்துப்போட்டிருக்கின்றதென்பதும் மறுக்க முடியாததொன்றாகும்.குடாநாட்டில் புதிய வேலைவாய்ப்புக்களோ தொழில்முயற்சிகளோ சொல்லிக் கொள்ளத்தக்க அளவினில் அதிகரித்திருக்காமை, மக்களது வாழ்வாதாரத்திலும் மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கவில்லை. மூன்று தசாப்த கால யுத்தம், ஏதோவொரு வகையில் இழப்புக்களையே குடாநாட்டு மக்களிடையே ஏற்படுத்தியே சென்றிருக்கின்றன. அது உயிரிழப்பாகவோ சொத்திழப்பாகவோ இருக்கலாம். அவ்வகையில், பொருளாதார ரீதியில் மேம்பாடு அடையமுடியாத நிலையிலுள்ள மக்களிடம் எஞ்சியிருப்பவற்றை சூறையாடவே தெற்கு முயற்சிக்கின்றது.

அவ்வாறான சுரண்டலுக்கு அரிதாரம் பூசியே அபிவிருத்தி வசந்தமென அடையாளப்படுத்தல்கள் தொடர்கின்றன. உண்மையில் நாடொன்றின் அபிவிருத்தியென்பது குடியானவனின் பொருளாதார வளர்ச்சியிலேயே தங்கியிருக்கின்றது. அதற்கான அடிப்படைக் கட்டுமானங்கள் ஏற்படுத்தப்படாத வகையில் அபிவிருத்தி என்பது ஏற்படப்போவதில்லை.

ஆனால், யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் அபிவிருத்தி எனும்பெயரில் எஞ்சியுள்ளவற்றையும் சுரண்டுவதே தொடர்கின்றது. வீடமைப்பு, வீதி அகலிப்பென அமைச்சர்கள் சகிதம் பிரமாண்டப்படுத்தப்படுபவை எவையுமே நடந்துமுடிந்ததாகத் தகவலேயில்லை. பெரும்பாலானவை அடிக்கல் நாட்டும் நிகழ்வுடனேயே முடிவுக்கு வந்துவிடுகின்றன. அது இந்தியாவின் வீடமைப்புத் திட்டமாயினும் சரி, சீனாவின் வீதி அகலிப்பாயினும் சரி, உண்மை அதுவாகவே இருக்கின்றது.

சாதாரணமாக அலுவலகங்களுக்கான கட்டடங்கள் திறப்பதை மற்றொரு தரப்பு அபிவிருத்தியென காட்ட முற்படுகின்றது. பத்து வருடங்களுக்கு மேலாக திறக்கப்படாதிருந்த கட்டடங்களை கூட வர்ணம் பூசி திறந்துவைத்து அபிவிருத்தியென்கின்றார்.

மறுபுறத்தே வாகனங்களை வாங்கவோ வீடு வாங்கவோ முண்டியத்து கடன் தரும் வங்கிகள், விவசாய முயற்சிகளுக்கோ புதிய தொழிலுக்கான முதலீட்டிடுக்கோ தயாராகவில்லை. சாதாரண கோழி வளர்ப்புக் கடனுக்கே ஆயிரம் சட்டதிட்டங்கள் கதைக்கும் அரச வங்கி முகாமையாளர்களே இன்னும் உள்ளனர்.

உண்மையான அபிவிருத்தியொன்று எட்டப்பட வேண்டுமானால் இராணுவச் சூழல் இல்லாததாக்கப்பட வேண்டும். அமைதியான சூழலுக்கு வழிகோல வேண்டும். அச்சமற்றதோர் சூழலிலேயே தொழில்முயற்சிகள் புதிதாக உருவாகும். தொழில்முயற்சியாளர்களும் வர வேண்டும். வரவேற்கப்பட வேண்டும்..

பகலவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்





சங்ககால மன்னர்களுக்கிடையே போர்கள் நடைபெற்றதை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிந்துகொள்ளலாம். தமிழர்களுக்கிடையில் - ஒரே இனக் குழுமத்திற்குள் இடம்பெற்ற போர்களினால் தென்னிந்தியப் பிராந்தியமே சுடுகாடாகக் காட்சியளித்ததாக அறியக்கிடக்கின்றது.

அக்கால அரசர்களிடையே காணப்பட்ட அதிகாரப் போட்டிகளால் பெரும் சமர் வெடித்தது. இருதேசங்களைச் சேர்ந்த அரசர்கள் தமக்கிடையே அடிக்கடி பொருதிக்கொண்டதால் அழிவுகளே எஞ்சின. வெற்றிபெற்ற அரசனது தேசத்தில் வெற்றிக் கொண்டாட்டங்கள் களை கட்டியிருக்கும். அதே நேரத்தில், தோல்வியுற்ற மன்னனின் தேசத்தில் மரண ஓலங்கள் விஞ்சியிருக்கும். ஒரே இனத்திற்கிடையே இந்த இரு நிகழ்வுகளையும் தரிசிக்கக் கூடியதாக இருந்ததாம்.

இரு தேசங்களைச் சார்ந்த அரசர்களின் பகையினால் ஒரே நாட்டு, ஒரே மக்கள், சகோதரர்கள் பலியெடுக்கப்பட்ட அவலங்கள் நடந்தேறியது. அக்காலத்தில் எமது இனத்திற்கிடையே இருந்த ஒற்றுமையீனம் தற்போதும் தமிழினத்திற்குள் படர்ந்திருப்பது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. காரணம், எமது முன்னோர்களில் மூத்தகுடிகளிலிருந்த பரம்பரை அலகுகளின் செல்வாக்கு இப்போது எங்களிடத்திலும் இருக்கிறது. அவ்வளவுதான்.

சங்ககாலத்தில் போர் என்பது தவிர்க்கமுடியாத இடத்திலிருந்தது. தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தாய் நிலத்தைக் காப்பதென்பது முக்கிய கடமையாக இருந்தது.

அக்காலத்தில் போர்களில் ஆண்களே ஈடுபட்டனர். பெண்கள் யுத்த களத்திற்குச் செல்லமாட்டார்கள். இருந்தும் வீரப் புதல்வர்களைப் பெற்ற அவர்களை சிறந்த வீரர்களாக உருவாக்கி தைரியமூட்டி யுத்த களத்திற்கு மனநிறைவோடு அனுப்புவது அவர்கள் வரித்துக் கொண்ட கடமையாக இருந்தது. அக்காலத்திலே வாழ்ந்த வீரத்தாய் ஒருத்தியினுடைய வீரச் செயல் குறித்து ஆராய இக்கட்டுரை விளைகிறது.

சங்க காலத்தில் இடம்பெற்ற போர்களை வெட்சிப்போர், கரந்தைப் போர் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

வெட்சிப் போர் என்பது ஒரு மன்னனுடைய செல்வத்தைக் கவர்வதற்காக அல்லது அவனது இராஜ்ஜியத்தை நிலைநிறுத்துவதற்காக இன்னொரு தேசத்து மன்னன் மேல் போர் தொடுப்பது வெட்சிப்போர் என்ற வகைக்குள் அடக்கம் பெறுகிறது.

கரந்தைப் போர் என்பது ஒரு மன்னன் போரின் போது தான் இழந்த மண்ணைக் கைப்பற்றுவதற்காகப் போர் தொடுக்கின்றான். இதனை கரந்தைப்போர் என்ற வகைக்குள் அடக்கப்படுகின்றது. இதனால், ஒரு நாட்டு மன்னன் இன்னொரு நாட்டு மன்னன் மேல் போர் தொடுத்து நிலங்களைக் கைப்பற்றுவதும் நிலங்களை இழந்து தோற்ற மன்னன் மீண்டும் தனது படைகளைத் திரட்டிக்கொண்டு இழந்த பிரதேசங்களைக் கைப்பற்றுவதும் வழமையாக இடம்பெற்றதனால் அடிக்கடி நிகழ்ந்த யுத்தத்தால் தமிழர் தேசம் சின்னாபின்னமாகிப் போயிருந்தது.

அப்படியொரு கடும் போர் இரு தேசங்களுக்கிடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரு நாட்டு தமிழ் உறவுகளும் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக்கின்றனர். இருந்தும் சண்டையின் இறுதியில் ஒரு முடிவு வரும் தானே. ஒரு நாட்டு மன்னன் இன்னொரு நாட்டு மன்னனை வென்றுவிட்டான்.

தோற்ற மன்னனின் படைகள் புறமுதுகிட்டு ஓடி வருகின்றன. யுத்த களத்தில் பிணங்கள் சிதறிக் கிடக்கின்றன. யுத்தத்தில் தோற்ற படைகளது யுத்த படைக்கலங்கள் எல்லாவற்றையும் எதிரிப்படைகள் கவர்ந்துசெல்கின்றன. இப்படியிருக்கையில், தனது மகனை அதுவும் வயதில் குறைந்த சிறுவனை வெற்றித் திலகமிட்டு அனுப்பிவைக்கின்றாள் வீரத்தாய் ஒருவர். அவள் தனது நாட்டுப் படைகள் தோற்றதாகக் கேள்விப்பட்டு செருக்களத்திற்கு விரைகிறாள். அப்போது எதிரில் எதிர்ப்பட்ட வீரர்கள், உனது மகன் புறமுதுகிட்டு ஓடிவரும்போது எதிரிப்படையின் அம்புபட்டு இறந்துவிட்டான் என்ற செய்தியைத் தெரிவிக்கிறார்கள். உடனே, எனது மகன் புறமுதுகிட்டு ஓடிவந்து இறந்தது உண்மையானால் அவன் வாய் வைத்து சுவைத்த முலைகளையும் அறுத்தெறிவேன் என்று சபதமெடுத்து சினத்துடன் செருக்களத்திற்கு ஓடுகிறாள்.

ஆங்காங்கு சிதறுப்பட்டுக் கிடந்த உடலங்களை ஒவ்வொன்றாகப் பார்த்து ஒருவாறு தனது மகனின் உடலத்தை கண்டுபிடித்துவிட்டாள். அவ்வுடல் மிகவும் சிதைந்த நிலையில் இருந்தது. சிதைந்த உறுப்புக்களை ஒன்றாக அடுக்கி அவன் விழுப்புண் அடைந்த முறையை ஆராய்ந்த போது அவன் மார்பிலேயே அம்பு பாய்ந்ததை அறிந்து தான் தன் மகனைப் பெற்ற போது அடைந்த சந்தோசத்தையும் விட இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்ததுடன் தனது அருந்தவப் புதல்வனின் தலையை தன் மார்புடன் அணைத்து அவனின் வீரச் செயலை நினைத்து அளவிறந்த ஆனந்தமடைந்தாள்.

இப்படியான வீரத்தாய்மார்கள் அக்காலத்தில் வாழ்ந்தார்கள். இதனால் சங்க காலம் வீரத்தின் விளைநிலமாகத் திகழ்ந்தது.


இந்நிகழ்வைச் சங்கப் புலவர்களில் ஒருவரான காக்கைப்பாடினியார் பின்வருமாறு பாடுகிறார்.

"நரம் பெழுந்து வறிய நிரம்மா
மென்றோள்
முளரி மருங்கின் முதியோள்
சிறுவன்
படையழிந்து மாறினான் என்று
பலர்கூற
மண்டமார்க் குடைந்தனனாயின்
உண்டவென் முலையறுத்திடு
வேன்
யான் எனச் சினங்கொண்டு
வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள்
சிதைத்து
வேறாகி படுமகன் கிடக்கை
காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது
வந்தனளே"

என்று புறநானூற்றில் புலவர் பாடுகிறார்.

எஸ். நதிபரன் B.A. (Hons)

# ஊர்ப் புதினம்



வலது கையால் எழுதும் பழக்கம் எம்மில் பெரும்பாலானோருக்கு உள்ளது. சிலர் இடது கையால் எழுதும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

இடது கையலால் எழுதுவோர், பலருடன் நெருக்கமாக அமர்ந்து எழுதும் சந்தர்ப்பங்களில் அவதிப்படுவதையும் காண்கிறோம்.மேசையின் இடதுகரைப் பகுதியை நாடிக் கொள்கின்றனர். விபத்து ஏற்பட்டு எழுதும் கைப் பகுதி பாதிக்கப்படும் போது எழுதுவதற்கு முடியாமல் கஷ்டப்படுவதையும் காண்கிறோம்.

ஜப்பானியக் கல்வி முறைமை பற்றிய கட்டுரை ஒன்றை அண்மையில் வாசித்தபோது அங்கு ஆரம்ப வகுப்பில் மாணவர்களுக்கு இரு கைகளாலும் எழுதக் கற்பிக்கப்படுகிறது என்ற தகவலை அறியமுடிந்தது.

ஒரு கை பாதிக்கப்பட்டால் மறு கையால் எழுதிக்கொள்ளும் பழக்கம் இயல்பாகவே ஜப்பானியர்களுக்கு வருகின்றது.

இதனால் நேரத்தின் பயன்பாட்டை உயர்வாக வைத்திருக்கமுடிகிறது. நேரம் அதிகம் போய்விடக் கூடாதென்பதற்காக தமது தேசிய கீதத்தை 4 வரிகளில் வைத்திருப்பவர்கள் அல்லவா அவர்கள். எந்தவொரு விடயத்திலும் மாற்று வளங்களைத் தேடும் பண்பு அவர்களிடம் இயல்பாகவே உள்ளது. அவர்களின் திறமைகள், நுட்பங்கள் பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம்.

எமது நாட்டிலும் மாணவர்களுக்கு ஆரம்ப வகுப்பு முதலே இரு கைகளாலும் எழுதப் பழக்கும் திட்டத்தை கல்வியலாளர் வகுத்து நடைமுறைப்படுத்தினால் நல்லது அல்லவா.


இதன்மூலம் இடது கைப் பாவனையுள்ளோர் தமக்கு வசதி கிடைக்காத இடங்களில் வலது கையைப் பயன்படுத்தி எழுதமுடியும். மாணவர்களும் மாற்று வளங்களைத் தேடும் இயல்பூக்கத்தை சிறு வயது முதலே பெறமுடியும். மீளப் பெறமுடியாத ஒவ்வொரு மணித்துளியையும் பயன்மிக்கதாக ஆக்கவும் முடியும்.


சிவகாமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில்நுட்பம்


## 4 வரலாற்றினூடாக ஒரு பயணம்









13



13



14



15

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

இதுவே தகவல்களை சேமிக்கக் கூடிய முதலாவது கணினியாக அமைந்தது. Cambridge பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிரித்தானிய விஞ்ஞானியான Maurice Wilkes 1949 இல் EDSAC (Electronic Delay Storage Automatic Calulator)க்கான வேலைகளை பூர்த்திசெய்தார். இது EDVAC யின் உருவாக்கத்திற்கு 2 வருடங்கள் முன்னரே உருவாக்கப்பட்டதால் இதுவே தகவல்களை சேமித்து வைக்கக் கூடிய பொதுப் பாவனைக்கான முதலாவது கணினியாக அமைந்தது.

பின்னர் முதலாவது வர்த்தகப் பாவனைக்கான கணினியான UNIVAC (Universal Automatic Computer) கள் உருவாக்கப்பட்டன. இது 1940 இன் பிற்காலப் பகுதியில் Eckert மற்றும் Mauchy என்பவர்களால் உருவாக்கத் தொடங்கப்பட்டது. (Picture-13) ஆனால், UNIVAC ஆனது பாவனைக்கு விடப்படும் முன்னரே LEO (Lyons Electronic Office) என்னும் இயந்திரம் பாவனைக்கு வந்ததால் இதுவே முதலாவது வர்த்தக நோக்கத்திற்கான கணினியாக அமைந்தது.

இலத்திரனியல் கணினிகளின் நான்கு சந்ததிகள் (4 Generation) (i) முதலாவது சந்ததி (First Generation (1951-1958) வெற்றுக் குழாய்கள் இதன் முக்கிய அம்சமாக அமைந்தன. தகவல்களை சேமிப்பதற்கு காந்த உருளைகள் பாவிக்கப்பட்ட படிமுறைகள் (Programs) Machine Language இலும் Assembly Language இலும் எழுதப்பட்டன. இதில் Compilerகள் பாவிக்கப்பட்டன. Picture (16) ii இரண்டாவது சந்ததி (Second Genertaion (1959 - 1963) இலத்திரனியல் வெற்றுக்குழாய்கள் Transistors ஆல் மாற்றீடு செய்யப்பட்டன.

வெளியக சேமிப்பான்களாக காந்த நாடாக்களும், வட்டத்தட்டுக்களும் (Disks) பயன்படுத்தப்பட்டன. Magnetic Cores உள்ளக சேமிப்பான்களாகப் பயன்படுத்தப்பட்டன. உயர்ரக கணினி மொழிகளான FORTRAN மற்றும் COBOL பயன்படுத்தப்பட்டன.

(தொடரும்...)

மேகலா பாலமுரளி

கணினி தொடர்பான உங்களது சந்தேகங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். பதில் கிடைக்கும்.
முகவரி
'வீரகேசரி' கிளைக் காரியாலயம்
117, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.

# திருப்பாடுகளை நினைவுகூருவோம்

## மாற்றம் வேண்டும் மனித வாழ்வில்



தண்ணீருக்குள் கல், பஞ்சு, வெல்லம் இவை மூன்றினையும் தனித்தனியாக ஒவ்வொரு குவளையில் போடும் போது முதல் குவளையிலுள்ள தண்ணீரில் போடப்பட்டுள்ள கல்லானது எந்தவித மாற்றமும் இல்லாமல் அப்படியே தண்ணீரினுள் கணப்பட்டது.

இரண்டாவது குவளையிலுள்ள தண்ணீரில் போடப்பட்டுள்ள பஞ்சானது தண்ணீரினை உறிஞ்சி பொலிவுடன் காணப்பட்டது. மூன்றாவது குவளையிலுள்ள தண்ணீரில் போடப்பட்ட வெல்லமானது. மெது மெதுவாக கரைந்து தண்ணீரினுள் வெல்லமானது உருமாற்றம் பெற்று சுவையினையும் நிறத்தினையும் கொடுத்துள்ளது.

இன்று எந்தவித நோக்கமும் சிந்தனையும் இன்றி தமக்கும் அயலவர்க்கும் என்ன நேர்ந்தாலும் கல் நெஞ்சத்தனத்தோடு வாழும் மனிதர்கள் கூட்டம் இன்றும் அன்றும் இருந்து கொண்டே இருக்கின்றது. இவர்கள் பாவத்திற்கு மேல் பாவம் செய்பவர்களாகவும் பிறருக்கு சுமைக்கு மேல் சுமையினை கொடுப்பவர்களாகவும் இருக்கும் நிலையினையே முதல் குவளை (கல்) வெளிப்படுத்தி நிற்கின்றது.

இன்று தனி மனித வாழ்விலும் குடும்பத்திலும் சமூகத்திலும் கிராமத்திலும் நகரத்திலும் நாட்டிலும் சுயநலப்போக்கானது மலிந்து காணப்படுகிறது. இதனால், இன்றைய மனிதர்கள் தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற மனநிலையில் பிறர் வாழ்வினை கருத்திற்கொள்ளாமல் அவர்களுக்கு என்ன துயர் நேர்ந்தாலும் பரவாயில்லை, தங்களது வாழ்வானது என்றும் சொகுசானதாகவும் புதுப்பொலிவோடும் என்றும் இருக்கவேண்டும் என்பதற்காக எதனையும் செய்யத் தயங்காத உள்ளம் கொண்டவர்களையே இரண்டாவது குவளை (பஞ்சு) வெளிப்படுத்தி நிற்கின்றது.

இவை அனைத்திற்கும் மேலாக மனிதன் தன்னுடைய மனச்சாட்சிக்கு ஏற்ப வாழ்வதோடும் தமது இடம், காலம், சூழலுக்கு ஏற்ப எப்படியும் வாழலாம் என்ற மனநிலை களைந்து இறைவனின் சிந்தனை, சொல், செயலுக்கு ஏற்ப தம்மையே முழுமையாக மாற்றி அவரது வாழ்வு தரும் வார்த்தையின் ஒளியில் தன்னுடைய வாழ்வினை மாற்றுவதன் ஊடாகவும் அயலவரின் வாழ்வுக்கும் அர்த்தம் காணும் வகையில் செயற்படும் போது உண்மையான முழு ஆளுமையுள்ள மனித சமுதாயம்உருவாகும் என்பதனை மூன்றாவது குவளை (வெல்லம்) வெளிப்படுத்தி நிற்கின்றது.

எனவே, இத்தகைய மனநிலையினை கிறிஸ்துவில் மட்டுமே நாம் கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது. அவர் காட்டிய வழியில் மனுக்குலம் பயணிக்க இத் தவக்காலம் ஏற்புடையதாக அமைவதோடு மனிதவாழ்வில் சிந்தனை, சொல், செயலில் மாற்றம் வேண்டும். அம்மாற்றம் ஆரோக்கியமான ஆன்ம ஈடேற்றத்திற்கான மாற்றமாக அமையவேண்டும் என்பதனை இன்றைய நாள் எமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் விளையாட்டு செய்திகள்

## கரப்பந்தாட்டப்போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி வெற்றி

தெல்லிப்பளை

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 19 வயது பிரிவு ஆண்கள் கரப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.இக்கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தை எதிர்த்து ஆடிய சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்றது.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இறுதிப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களையும் வென்று சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி சம்பியனானது. முதல் இரண்டு சுற்றுக்களையும் 25:19, 25:22 என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தை வெற்றி கொண்டது.

## சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி முடிவு

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி அண்மையில் யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இதில் 15,17,19 வயது ஆண் பெண் பிரிவுரீதியாக நடைபெற்றன.

19 வயது, 17 வயது ஆண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் 15 வயது ஆண்கள் பிரிவில் மாதகல் யோசப் மகாவித்தியாலயமும் சம்பியனாகியன.

49, 15 வயது பெண்கள் பிரிவில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும் 17 வயது பெண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டன.



போட்டியில் கலந்துகொண்ட பாடசாலை அணிகள்

## சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு காரைநகரில் விளையாட்டுப்போட்டி

வட்டுக்கோட்டை

எதிர்வரும் சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு காரைநகர் கடற்படையினர் காரைநகர் மக்களுக்கான சுதேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

ஏப்ரல் 09 ஆம் 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தமது விண்ணப்பங்களை தமது பிரதேச கிராமசேவை அலுவலர் ஊடாக அனுப்பி வைக்கலாமென்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள பலகாடு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய முன்றலில் இந்நிகழ்வுகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.



அலியார் ரமீஸ் ஞாபகார்த் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாவாந்துறை சென் மேரிஸ் அணியை 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற ஆனைக் கோட்டை யூனியன் அணியினரைப் படத்தில் காணலாம்.



அலியார் ரமீஸ் ஞாபகார்த் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற நாவாந்துறை சென் மேரிஸ் அணியினரைப் படத்தில் காணலாம்.

## யங் ஹென்றீசியன் நடத்தும் உதைப்பந்தாட்டப் போட்டி

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற கால் இறுதிப் போட்டியில் முதலாவதாக நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி விளையாடியது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 1: 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் ஊரெழு றோயல் அணியும் வதிரி டைமன் அணியும் மோதின. இதில் 3:0 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் அணி வெற்றி பெற்றது. மூன்றாவது கால் இறுதிப் போட்டியில் மணற்காடு சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி விளையாடியது. இப்போட்டியில் ஞானமுருகன் அணி 0:5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மறுநாள் 23 ஆம் திகதி நடைபெற்ற 4 ஆவது கால் இறுதிப்போட்டியில் பருத்தித்துறை சென்.சேவியர் அணியும் குருநகர் பாடுமீன் அணியும் மோதிக் கொண்டன.

இப்போட்டியில் இரு அணிகளும் வழங்கப்பட்ட நேரத்தினுள் எந்தக் கோல்களையும் போடாததினால் தண்ட உதை வழங்கப்பட்டது இதில் பாடுமீன் அணி 4:2 என்ற கோல் கணக்கில் சென்.சேவியர் அணியை வெற்றிகொண்டது.

இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள அரையிறுதிப் போட்டியில் பாடுமீன் அணியும் றோயல் அணியும் மோதவுள்ளன.

இச்சுற்றின் இறுதிப் போட்டி எதிர்வரும் 03 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## புனித பத்திரிசியார் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியானது கடந்த மாதம் பாடசாலை அதிபர் அருட்திரு ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி குமார் பாலச்சந்திரா அவரது பாரியாரும் சிறப்பு விருந்தினராக பொறியியலாளர் ராஜேந்திராவும் (செயலாளர் வடமாகாண உட்கட்டுமான அமைச்சு) கலந்து சிறப்பித்தனர். இல்லங்களுக்கிடையிலான போட்டியில் பென்ஜின் இல்லம் 304.5 புள்ளிகளைப் பெற்று 1ஆம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது லோங் இல்லம் 283 புள்ளிகளைக் பெற்று இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது. பிரதம விருந்தினர்கள் அணி வகுப்பு மரியாதையினை பார்வையிடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகை மருத்துவம்

## வசம்பு

Botanical Name: Acoras Colamus

English Name: Sweet Flag

**மறுபெயர்** - சுடுவான், உரைப்பான், பெயர் சொல்லா மருந்து, வேணி, பிள்ளை மருந்து.

இது அநேகமாக ஈரலிப்பான நிலப்பரப்பில் வளர்கின்ற பூண்டு இனமாகவும் இதன் தண்டு கிட்டத்தட்ட பெருவிரல் கணமாகக் காணப்படும். இதன் வேர் வசம்பு என அழைக்கப்படும். இந்த வேர் ஊடுருவிப் பாயக்கூடிய வெப்பமும் மணமும் உள்ள எண்ணெய்ச் சத்துள்ளதாகும்.



**உபயோகம்** - வேர்

**சுவை** - கார்ப்பு

**செய்கை** - அகட்டுவாய் அகற்றி, பசித்தீதூண்டி, வெப்பமுண்டாக்கி, முறைவெப்பகற்றி, கோழையாகற்றி, குமட்டல் எழுப்பி, வாந்தி எழுப்பி, தொற்றுப்புழு அகற்றி, நுண்புழுக் கொல்லி.

**குணம்** - வசம்பினால் எல்லா வகையான நஞ்சுகளும் (தாவரசங்கமவிசம், இடுமருந்து) புண்வகைகள், குன்மம், இரத்த பித்தம், வாய் நாற்றம், இருமல், ஈரல் நோய்கள் முதலியன குணமாகும்.

**உபயோகம்** - வசம்பை சூரணம் ஆக்கி 3 - 5 குன்றி எடை வரை எடுத்து வெறும் வயிற்றில் உட்கொள்ள நாக்குப் பிரச்சினை குணமாகும். மேலும் செமியாமை, கழிச்சல், வயிற்றுப் பொருமல், சுரங்கள், முறைக்காய்ச்சல் தீரும்.

வசம்பு 2 பங்குக்கு 10 பங்கு நீர் சேர்த்து ஊறவிட்டு வடிகட்டி 1/4 1/2 ஆழாக்கு வீதம் (1 ஆழாக்கு 1/2 அவுண்ஸ்) கொடுக்க பசியின்மை,சேமியாமை நீங்கும்.

குழந்தைகளுக்கு உண்டாகும் இருமல், ஈளை, சுரம், வயிற்றுவலி ஆகியவற்றுக்கு வசம்புடன் குடி நீர் செய்து கொடுக்க குணமாகும்.

வசம்பை வாயில் இட்டுச் சுவைக்க வாய்நீர் பெருகுவதுடன் வாயில் ஒருவித அனலையும் ஏற்படுத்தும். இது தொண்டைக் கம்மல், இருமல் ஆகியவற்றையும் குணப்படுத்தும்.

நாட்பட்ட கீல்வாத நோய்களுக்கு காசுக்கட்டியுடன் சேர்த்து அரைத்து பற்றிட கீல்வாதம் தணியும்.

வசம்பை சுட்டுக் கரியாக்கி தேங்காய் எண்ணெயுடன் சேர்த்துப்பூச வயிற்றுப்பொருமல் நீங்கும்.

ரி. உமா (2 ஆம் வருடம்)
லங்கா சித்த, ஆயுள்வேதக் கல்லூரி - சுன்னாகம்.

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

## [24.03.11 முதல் 31.03.11 வரை]

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)

### மேஷம்

மேடராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தேவையற்ற வீண் செலவீனங்கள் எதிர்பாராத வகையிலே ஏற்படும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலைகள் அமைந்திருக்கும். குடும்பத்தில் அனுகூலமான திடீர் நன்மைகள் அமைய இடமுண்டு. பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலைப்பாடு உண்டு. கடன் நிலைகளில் சற்று சுமாரான பலாபலன்களே அமையும். பெண்களுக்கு சற்று சஞ்சல நிலையிருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை.

### இடபம்

இடபராசி அன்பர்களுக்கு சிறப்பான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் முன்னேற்றகரமான விடயங்கள் அமைய இடமுண்டு. குடும்பத்தில் மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் ஏற்படும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும் பலனுண்டு. மூத்த சகோதரர் மூலமாக நன்மையான பலன்கள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும் நிலையுண்டு. பெண்களுக்கு மனமகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.

### மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலாபலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகள் வெற்றிகளை கொடுக்கும். தொழில் நிலையில் முன்னேற்றகரமான பலன்கள் அமையும். திடீரென ஏதேனும் பிரயாணங்கள் அமைகின்ற நிலை இருக்கும்.

பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் சிறு சிறு மந்த நிலைகள் இருக்கும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.

### கடகம்

கடகராசி அன்பர்களுக்கு சிறப்பான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் முன்னேற்றகரமான பலன்கள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும் சிறப்பும் அமைகின்ற நிலை உண்டு. பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும். தந்தை மூலமாக அனுகூலமான பலன்கள் ஏற்படும் நிலையிருக்கும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

### சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழிலில் சற்று அலைச்சல் இழுபறி நிலைகள் அமையும் பலனிருக்கும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் பலன் உண்டு. உடல் நிலையில் சிறு சிறு சுகயீனங்கள் ஏற்பட்டு மறையும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு மனச் சஞ்சலமிருக்கும். மாணவர்கள் முயற்சி வேண்டும்.

### கன்னி

கன்னிராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலையில் நற்பலாபலன்கள் ஏற்படும் நிலையுண்டு. குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலைகளும் அமைகின்ற பலனுண்டு. பண வரவு அனுகூலமான நிலையிலே அமையும். மனைவி மூலமாக நற்பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் அனுகூலமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு அனுகூல பலனுண்டு.

### துலாம்

துலாராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே அமையும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை அமைந்திருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் ஏற்படும். எதிரிகளின் தொல்லை சிரமங்கள் சற்று அதிகமாய் இருக்கும்.

பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்கள் முயற்சி தேவை.

### விருச்சிகம்

விருட்சிக ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் முன்னேற்றகரமான பலன் அமையும். பண வரவு அனுகூலமான நிலையில் சிறப்பாக அமையும் பலாபலன் உண்டு. குடும்பத்தில் சிறப்பான நிறைவான பலன்கள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.

### தனுசு

தனுசு ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் நன்மையுண்டு. தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். உடல் நிலையில் சுகயீனங்கள் மருத்துவ செலவுகள் ஏற்படும். தாயார் வழியில் செலவீனங்கள் அமைய பலன் உண்டு. கடன் நிலைகளில் சற்று இழுபறி நிலை இருக்கும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்களுக்கு மேன்மையுண்டு.

### மகரம்

மகரராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலாபலன்கள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலைகளும் ஏற்படும் பலனுண்டு. தொழில் நிலைகளில் முன்னேற்றமான பலன்கள் அமையும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும் பலன் உண்டு. எதிர்பார்க்கின்ற விடயங்களில் நல்ல வெற்றிகள் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும் நிலையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு. பெண்களுக்கு நன்மைகள் உண்டு.

### கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் வேண்டும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். உடல் நிலையில் சுகயீனங்கள் மருத்துவ செலவுகள் ஏற்படும். பண வரவு சற்று சுமாரான மத்திமமான நிலையிலேயே அமையும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். மாணவர்கள் முயற்சி தேவை. பெண்களுக்கு மனச் சஞ்சலமுண்டு.

### மீனம்

மீனராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூல பலன் உண்டு. தொழில் நிலைகளில் சற்று இழுபறி தாமத பலன் இருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். எதிர்பாராத வகையில் திடீர் செலவுகள் அமையும் நிலையுண்டு. பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். மாணவர்கள் முயற்சி தேவை. பெண்களுக்கு நன்மை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீதி விஸ்தரிப்பால் தனித்துவத்தினை இழக்கும் யா/கொக்குவில் சி.சி.த.க பாடசாலை

**கே.கே.எஸ்** வீதி விஸ்தரிப்பு காரணமாக தனது பல நூற்றாண்டு தனித்துவத்தினை இழக்கும் நிலையில் யாழ்/கொக்குவில் சி.சி.த.க. பாடசாலை.

'செழிப்பு மிக்க சிந்தனையாளர்களை உருவாக்குதல்' எனும் தூரநோக்குடனும் 'கல்வியே அழியாத செல்வம்' எனும் மகுட வாசகத்துடனும் வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல் ஊடாக ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கத்திறன் திறனாய்வு மிக்கவகையில் சிந்திப்பதற்கும் பயிற்றுவித்தல் எனும் இட்சியத்துடனும் இயங்கும் இப்பாடசாலையின் உதயம் பற்றி மீட்டுப் பார்க்கவேண்டியது தற்போது மிகவும் பொருத்தமாகும்.

கொக்குவில் மக்களின் வாழ்க்கை நிலையினை கல்வியூடாக மேம்படுத்த வேண்டும் என்ற தீர்க்கதரிசனத்துடன் 1880 இல் வணக்கத்திற்குரிய சம்பியனால் கே.கே.எஸ். வீதியில் பரிசுத்த திரித்துவ ஆலயத்திற்கு முன்னால் கொக்குவில் சந்தியில் இருந்து வடக்குப் புறமாக உள்ள கே.கே.எஸ். வீதியில் சுமார் 3/4 கிலோ மீற்றர் தூரத்தில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடாத்தப்பட்டு வந்தது.

1963 ஆம் ஆண்டு இப்பாடசாலை அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. இப் பாடசாலையின் ஆரம்ப போதகராக வணக்கத்திற்குரிய சம்பியன் அடிகளும், அவரைத் தொடர்ந்து சுப்பிரமணியம், மயில்வாகனம், ஆர். மயினு ஆகிய உபதேசியார்களும் பின்பு திருமதி. பாக்கியம் அலெக்ஸாண்டர், முத்துத்தம்பி,சுப்பிரமணியம், திருமதி. ஞானரட்ணம், ச. கந்தையா, நா. ஜெயனொளிபவன், த. விஜயகுமார், செல்வி. க. கதிர்காமலிங்கம் ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சியில் பெரிதும் உதவினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**இப்பாடசாலையில் கல்வி கற்றுவரும் மாணவர்கள் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆகும். தொழில்வாய்ப்பில்லாத - தாய், தந்தையரை இழந்த - நலன்புரி முகாம்களில் வாழும் மாணவர்களே அதிகம் இங்குள்ளனர்.**





இங்கு தரம்-1 தொடக்கம் தரம்-5 வரையான வகுப்புக்கள் இடம்பெறுவருகின்றனர்.அத்துடன் 74 மாணவர்கள் கல்வி கற்றுவரும் அதே வேளை, 7 ஆசிரியைகளும் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வகை III பாடசாலையாக காணப்படும் இப் பாடசாலை கல்வியில் [illegible] இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் முன் நிற்கின்றது.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பல்வேறு அமைப்புக்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் பெரிதும் உதவி வருகின்றார்கள்.

மாணவர்களின் திறன்களை வெளிக்கொண்டுவருவதற்கு கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப்போட்டிகள் என்பன வருடாந்தம் நடத்தப்பட்டு வருகின்றன.
மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்காக பரிசில் வழங்கும் விழாவும் உதவுக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால், இப் பாடசாலை தற்பொழுது சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வுகளை நடாத்த ஒரு சொந்த மைதானம் இல்லாமலும் கட்டட வசதிகள் போதாமை, மாணவர்களுக்கான இருப்பிட வசதி, விளையாட்டு உபகரணம் இன்மை போன்ற பல வகையான குறைப்பாடுகளுடன் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இப் பாடசாலையின் தற்போதைய முக்கிய சவாலாக உள்ளது கே.கே. எஸ். வீதி விஸ்தரிப்பு. இதிலிருந்து தப்பி பிழைக்குமா இப்பாடசாலை? இப்பாடசாலை வேறு இடத்திற்கு மாற்றப்படுமா? அல்லது வேறு பாடசாலைகளுடன் இணைக்கப்படுமா என்பனதான் தற்போது உள்ள கேள்விகள்.

இப்பாடசாலையில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே கல்வி கற்று வருகின்றனர். அத்துடன் வருமானம் குறைந்த தாய், தந்தையரை,பெற்றோர்களை இழந்த நலன்புரி முகாம்களில் வாழும் மாணவர்களே அதிகம் இங்கு அதிகம் கல்வி பயில்கின்றனர்.

இப்பாடசாலை வேறு பாடசாலையுடன் இணைக்கப்படுமாயின் இவ் வறிய மாணவர்கள் அப்பாடசாலையில் கற்று வரும் பிள்ளைகளுக்கு நிகராக பொருளாதார நிலையில் நிற்பது என்பது இயலாத காரியமாகும். இதனால், அவர்கள் கல்வி நடவடிக்கைகளை இடையில் கைவிட வேண்டிய அபாய நிலையே தோன்றும்.

அத்துடன், இங்கு கல்வி கற்கும் மாணவர்களை விட்டாலும் அவ்வறிய மாணவர்களின் சகோதரர்கள் எதிர்காலத்தில் வேறு பாடசாலைக்கு விண்ணப்பம் செய்து போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைந்து அனுமதி எடுப்பது என்பது அவர்களுக்கு மிகுந்த சவாலான விடயமாகவே காணப்படுகிறது. அதற்கு நிகராக வழிகாட்டல்களும் இல்லை. இதனால், பல தலைமுறை மாணவர்கள் கல்விநிலையினை இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையே இப்பாடசாலை இணைப்பினால் தோன்றும்.

எனவே இப்பாடசாலையினை வேறு ஓர் இடத்திற்கு மாற்றி, அதன் தனித்துவத்துடன் இயங்கவைப்பதன் மூலம் மாணவர்களில் பலர் கல்வியினை தொடர்ந்து மேம்படுத்த முடியும் என்பது உறுதி.

இப் பாடசாலையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் தற்போதைய பாடசாலை அதிபரின் அயராத முயற்சி, அர்ப்பணிப்புடன் மெல்லக் கற்போர் வகுப்புக்கள், மாற்று ஆற்றல் உடையோர் வகுப்புக்கள் என்பன மாலை வேளையில் சிறப்பாக நடைபெற்றுவருவதுடன் இவ்வறிய மாணவர்களுக்கு இலவச மதிய உணவும் நாளாந்தம் வழங்கப்பட்டும் வருகின்றது.

கொக்குவில் மட்டுமன்றி கோண்டாவில், இணுவில், தாவடி, உயரப்புலம், ஆனைக்கோட்டை, சுதுமலை போன்ற அயற் கிராமங்களைப் பகுதிகளைச் சேர்ந்த ஏழை விவசாயிகளின் பிள்ளைகளான இவ் வறிய மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக விளங்கும் இப்பாடசாலையினை அதனது சுயகௌரவத்துடன் தனிப்பட்ட இடத்தில் இயங்க வைக்க நாம் அனைவரும் எம்மாலான உதவிகளை வழங்க முன்வர வேண்டும்.

● ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு நிகழ்வுகள்



சண்டிலிப்பாய் கோட்ட மட்ட தடகளப்போட்டியில் 17 வயது பிரிவில் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட மாதகல் சென். யோசப் மகா வித்தியாலய மாணவி செல்வி அ. அனற் விருந்தினரால் வெற்றிகேடயம் பெறுவதைப் படத்தில் காணலாம்.



திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலய கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இளைப்பாறிய ஆங்கில ஆசிரிய ஆலோசகர் இராமகிருஷ்ணன் மங்களவிளக்கேற்றுவதையும் இளைப்பாறிய அதிபர் திருமதி. எஸ்.சிவராசா மற்றும் அதிபர் நிற்பதையும படத்தில் காணலாம். (படம்:- வடமராட்சி நிருபர்)




சாவகச்சோரி டிறிபோக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி பரிசளிப்பின் போது மாணவிகளுடன் பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளரும் மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளை முகாமையாளருமான க.சண்முகலிங்கம் பாடசாலை உபஅதிபர் திருமதி றொகான் ரஜி ஆகியோர் நிற்பதனையும் படத்தில் காணலாம்.



முதல் தடவையாக வலிகாம வலய போட்டியில் பங்குபற்றி 3 ஆம் இடத்தினைப்பெற்றுள்ள மாதகல் சென். யோசப் மகா வித்தியாலய உதைபந்தாட்ட பெண்கள் அணியைப் படத்தில் காணலாம்.



பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம்.



கிளி/முருகானந்தா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியின் போது விளையாட்டு வீரர்களுடன் பொலிஸ் அதிகாரிகள், மேலதிக [illegible] கல்வி பணிப்பாளர் நிற்பதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரை இறுதிக்குள் யார்?







பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் திருவிழாவின் காலிறுதிப்போட்டியின் நாளை 4 ஆவது போட்டியில் 'ஏ' பிரிவில் 2 ஆவது இடத்தினைப் பெற்ற இலங்கை அணியும் 'பி' பிரிவில் 3 ஆவது இடத்தினைப் பெற்ற இங்கிலாந்து அணியும் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் களமிறங்குகின்றன.

காலிறுதியில் எதிர்பாராத மாற்றங்கள் நிகழும் என்பதினை நடந்து முடிந்த போட்டிகளும் படம்பிடித்து காட்டி நிற்கின்ற வேளையில் நாளை ஒரு பெரும் போர் இடம்பெறுவது கிரிக்கெட் ரசிகர்களுக்கு அதுவும் இலங்கை ரசிகர்களுக்கு பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை கைப்பற்றி 2003 ஆம் ஆண்டு அரையிறுதிவரை முன்னேறியதுடன் 9 ஆவது (2007) உலகககிண்ணப் போட்டியில் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியாவிடம் தோல்வியை சந்தித்து கிண்ணத்தை கைநழுவவிட்ட இலங்கை அணி அதே உற்சாகத்துடன் பத்தாவது உலகக் கிண்ணத்தின் லீக்போட்டிகளில் ஒரு போட்டியில் தோல்வியை சந்தித்து புள்ளிப்பட்டியலில் 2 ஆவது இடத்தினைப் பிடித்து காலிறுதிக்கு நுழைந்துள்ளது.

அதேபோல் இதுவரையில் ஒருதடவையேனும் கிண்ணத்தை கைப்பற்றாத கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்து அணி கடந்த 9 ஆவது உலகக்கிண்ணத் தொடரில் காலிறுதிவரை முன்னேறியது போலவே இம்முறையும் பலநெருக்கடிகளுக்கு மத்தியில் காலிறுதிக்குள் நுழைந்துள்ளது. இத்தொடரின் லீக்கில் கிரிக்கெட்டின் கற்றுக்குட்டிகளிடம் ஆட்டம் கண்டு, முதல்சுற்றிலேயே வெளியேறும் மிகவும் நெருக்கடியான நிலையிலிருந்து காலிறுதிக்குள் நுழைந்துள்ளது.

ஆரம்ப சுற்றின் முடிவில் சில தளம்பலான நிலையில் காலிறுதிக்குள் நுழைந்துள்ள இலங்கை அணிக்கு இப்போட்டி மிக சவால் நிறைந்தாகவே இருக்கும். இலங்கை அணி தனது முதல் சுற்றின் 6 போட்டிகளையும் 4 இல் வெற்றி ஒன்றில் தோல்வி மற்றயதில் முடிவற்ற நிலையில் முடித்துக்கொண்டுள்ளது. இதில் மூன்று ஆட்டங்களைப்பார்த்தால் அது சிம்பாப்வே, கனடா மற்றும் கென்யா அணிகளுக்கெதிராக பெற்ற வெற்றிகளாகவே இருக்கின்றன. இந்தப் பின்னணியில் ஆரம்பச்சுற்றுப் போட்டிகள் இலங்கை அணிக்கு தனது தவறுகளை திருத்திக்கொள்ளும் ஆட்டமாக பயன்படுத்த அமைந்துள்ளது.

இதனிடையே ஆரம்பச்சுற்றின் முடிவில் இலங்கையின் துடுப்பாட்ட பலத்தினைப்பார்க்கும்போது அது அணித்தலைவர் குமார்சங்கக்காரவின் பின்னணியில் இருப்பதை அவதானிக்கக்கூடியதாவுள்ளது. இவர் 6 போட்டிகளின் முடிவில் ஒரு சதம் 2 அரைச்சதம் உட்பட 363 ஓட்டங்களைப்பெற்று லீக்சுற்றில் அதிக ஓட்டங்களை குவித்த வீரர்கள் வரிசையயில் முதலிடத்தை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இத்தொடரில் இலங்கையின் துடுப்பாட்டபலம் சங்கக்காரவில் மட்டும் தங்கியிருக்கிறது என்று சொல்ல முடியாது. தொடரில் தனது முதல் போட்டியில் இலங்கை அணிக்காக (கனடாவுக்கு எதிர்) ஜெயவர்த்தன அதிர சதம் பெற்றிருந்தார். அதேபோல் ஆரம்ப ஜோடிகளான டில்சான், தரங்க ஆகியோர் சிம்பாப்வேக்கு எதிராக பல்லேகலவில் நடந்த போட்டியில் இணைப்பாட்டமாக 282 ஓட்டங்களைப்பெற்றிருந்ததையும் குறிப்பிட வேண்டும். எனினும் மத்திய தரவரிசையிலேயே இலங்கை அணி பலமிழந்து காணப்படுகின்றது.

பந்து வீச்சினைப்பொறுத்தவரையில் மலிங்க , முத்தையா முரளிதரன் மற்றும் இளம் புயலான மென்டிஸ் ரங்கனஹேரத் அணிக்குப்பெரும் பலம். முதல் சுற்றில் இவர்களின் பந்து வீச்சு அபாரமாக எதிரணிக்கு சவாலினை கொடுத்திருந்தமையை நடந்து முடிந்த போட்டிகள் எடுத்துக்காட்டுகின்றன. மலிங்க உலகக்கிண்ணத்தில் மீண்டும் தனது ஹெற்றிக்கை அரங்கேற்றியதை இங்கு நினைவு கூற வேண்டும்.

இதேபோல் மறுமுனையில் கடினமான முறையில் காலிறுதிக்குள் நுழைந்துள்ள இங்கிலாந்து அணி இதனை சாதகமாகப்பயன்படுத்திக்கொள்ளும் என்பது மறுப்பதற்கில்லை. 6 போட்டிகளில் 3 இல் வெற்றி 2 இல் தோல்வி ஒன்றில் முடிவற்ற நிலையில் இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்துள்ளது. இத்தொடரின் ஆரம்பத்தில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டதற்கு எதிர்மாறாகவே இதன் முதல் சுற்றுக்கள் அமைந்திருந்தது குறிப்பிடப்படவேண்டியதொரு விடயம்.

அதாவது கிரிக்கெட்டின் கற்றுக்குட்டிகளான அயர்லாந்து, நெதர்லாந்து ஆகிய அணிகளிடம் தடுமாறியமை இத்தொடரில் இவ்வணியின் பலத்தின் மீதான சந்தேகத்தை உண்டுபணியது. இருப்பினும் இந்தியாவுடனான போட்டியில் இவ்வணி போராடி வெற்றி பெற்றமை தொடரில் நம்பிக்கைய ஏற்படுத்தியுள்ளது.

அணித்தலைவர் ஸ்டரஸ் மற்றும் ஹெவின், பீற்றர்சன் ஆகியோர் அணிக்கு பெரும் பலம். முதல் சுற்றின் 6 போட்டிகளிலும் ஸ்டரஸ் தனது பொறுப்பை உணர்ந்து ஆடியிருக்கின்றமை இன்றைய போட்டியிலும் பெரும் விளைவினை ஏற்படுத்தும். முதல் சுற்றின் 6 போட்டிகளில் இவர் ஒரு சதம், 2




அரைச்சதம் உட்பட 329 ஓட்டங்களைக் குவித்து லீக் துடுப்பாட்ட வீரர் வரையில் 3 ஆவது இடத்தில் இருக்கின்றார். அதேபோல் இவ்வணியின் அதிரடி வீரரான ட்ரொட் 6 போட்டிகளில் ஒரு அரைச்சதம் உட்பட 336 ஓட்டங்களைப்பெற்று சங்கக்காரவிற்கு அடுத்தநிலையிலுள்ளார்.

இந்நிலையில் பீற்றசன், ரொட்,பெல், கொலிங்வூட் என அடுத்தடுத்து துடுப்பாட்ட பலத்தினை கொண்டுள்ள இங்கிலாந்து அணி பந்து வீச்சிலும் ஸ்வோன் பீற்றர்சன் போன்ற வீரர்கள் பெரும் பலமாக கொண்டுள்ளமையினால் இலங்கைக்கு பெரும் சவாலகவே அமைந்துள்ளது. எனவே நாளை கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் அடுத்து சுற்றான அரையிறுதிக்குள் நுழையப்போவது எந்த அணி என்பது அனைவரிடத்திலும் பெரும் எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org